பக்கங்கள் : பதினாறு 16
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூபா 10.00
www.uthayan.com
சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 06 செவ்வாய்க்கிழமை (21.06.2005)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :207

## கண்டிப்பான போக்குவரத்து ஒழுங்குகள் ஜூலை 1 முதல் நடைமுறைக்கு வருகின்றன

### நகரில் மினிபஸ்கள் முற்றவெளிக்கு!, 3 வீதிகள் ஒருவழிப்பாதைகளாகின்றன

யாழ்ப்பாணம், ஜூன்21

யாழ். நகரப்பகுதியில் போக்குவரத்து நெரிசலைச் சீராக்க புதிய நடைமுறைகள் எதிர்வரும் முதலாம் திகதி அமுல்செய்யப்படவிருக்கின்றன.

பொலிஸ் அதிகாரிகளும் சிவில் நிர்வாக அதிகாரிகளும் கலந்து கொண்ட ஒரு கலந்துரையாடலில் இது தொடர்பான பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

'யாழ். பிள்ளையார் இன்' விடுதியில் நேற்று இடம்பெற்ற போக்குவரத்தைச்சீராக்குதல் தொடர்பான கலந்துரையாடலில் யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் எஸ்.தல்பதாது, யாழ்.மோட்டார் திணைக்கள ஆணையாளர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் உட்பட மாநகரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தனியார் போக்குவரத்துச்சங்கம், வடபிராந்திய

(16ஆம் பக்கம் பார்க்க)

### நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க

## மின்சாரநிலைய வீதியைத் திறக்க முடிவு; ஆனால் படைத்தரப்பு அதற்கு மறுப்பு!

யாழ்ப்பாணம், ஜூன்21

யாழ். நகரில் ஏற்பட்டிருக்கும் பெரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் ஒரு நடவடிக்கையாக மின்சாரநிலையவீதியைப் போக்குவரத்துக்குத் திறப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிக்குப் பலன் கிடைக்கவில்லை.

ஞானம்ஸ் ஹோட்டலில் தங்கியுள்ள படையினரின் பாதுகாப்புக் கருதி மின்சாரநிலைய வீதிப்பகுதியை மாநகரசபையினரிடம் கையளிக்க முடியாது எனப் படைத்தரப்பு கை விரித்துவிட்டது.

யாழ். நகரில் போக்குவரத்து நெரிசலைச் சீராக்க மின்சார நிலைய வீதியில் படையினர் கையகப்படுத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு இடம் இல்லவே இல்லை!

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவரிடம் நேற்று ஹெல்கிஸன் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்21

**பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் முஸ்லிம்கள் ஒரு தரப்பாக கணக்கில் எடுக்கப்படமாட்டார்கள். அவர்களின் பிரதிநிதிகளுக்கு அதில் கையொப்பமிடும உரிமை வழங்கப்படமாட்டாது. அதற்கு இடமே இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுவிட்டது.**

**இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணைப்பணி வகிக்கும் நோர்வேயின் சார்பில் இலங்கை வந்திருக்கும் - அந்நாட்டு - பிரதிவெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இந்த விடயத்தை தம்மை நேற்றுச்சந்தித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், எம்.பியுமான ரவூப் ஹக்கீமிடம் பட்டவர்த்தனமாக கூறிவிட்டார்.**

இலங்கை வந்த விடர் ஹெல்கிஸன் நேற்று மாலை ஹக்கீமைச் சந்தித்தார்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக் கட்டமைப்பு விரைவில் ஏற்படுத்தப்படும் என்ற தகவலை இந்தச் சந்திப்பின்போது ஹெல்கிஸன், ஹக்கீமுக்குத் தெரியப்படுத்தினார்.

"உடன்பாட்டுக்கான நகல் தயாரிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் எதிர்ப்பலை மோசமாக வெடிக்கும் என ஹக்கீம் எச்சரிக்கை!

கொழும்பு,ஜூன்21

முஸ்லிம்கள் ஒதுக்கப்பட்டமையால் அவர்களின் எதிர்ப்பலைகள் மோசமாக வெடிக்கும் என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

இவ் விவகாரத்தில் நாம் எடுக்கும அரசியல் நடவடிக்கைகளின் விளைவை அடுத்துவரும் நாள்களில் அரசு புரிந்துகொள்ளும்.

- இவ்வாறு சீற்றத்துடன் கூறியிருக்கின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், எம்.பியுமான ரவூப் ஹக்கீம்.

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் மூன்றாம் தரப்பு அந்தஸ்து முஸ்லிம்களுக்குக் கிடையவே கிடையாது என்று திட்டவட்டமாகத் தமக்குத் தெரிவிக்கப்பட்ட பின்னர் அதனால் சீற்றமடைந்த ஹக்கீம் நேற்றிரவு இவ்விடயம் குறித்து பி.பி.ஸி. தமிழோசைக்குத் தெரிவித்ததாவது:-

இது மிகவும் வருத்தத்திற்குரிய விடயம் மட்டுமல்ல கண்டிக்கத்தக்க விடயம்.

இவ்வாறான ஒரு விடயத்தில்கூட முஸ்லிம்களை ஒரு தரப்பாகக் கருத்தில் எடுக்காத பட்சத்தில் சமாதானப் பேச்சுக்களில் எங்களுக்கு ஓர் அந்தஸ்துக் கிடைக்கப்பெறும் என்பதில் நம்பிக்கைகொள்ள முடியாது.

நாம் கைச்சாத்திடுவது என்பது எம்மை ஒரு தரப்பாக - அடையாளமாக - அங்கீகரிக்கின்ற ஒரு விடயம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் வெட்டிக்கொலை!

கொழும்பு,ஜூன்21

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர். அவரது சடலம் கருங்கொடித்தீவு குளக்கட்டில் இருந்து நேற்று மீட்கப்பட்டது.

அக்கரைப்பற்றுப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த கருங்கொடித்தீவு குளக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ஒருவர் நேற்றுச் சுட்டுக்கொலை!

வவுனியா,ஜூன்21

வவுனியா தாளிக்குளத்தில் நேற்றுப்பகல் புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். தர்மலிங்கம் அசோகன் (வயது-26) என்பவரே கொல்லப்பட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அவரது ஓட்டோவை வாடகைக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## மருதானையில் நேற்று கிரனேட்டுகள் மீட்பு!

கொழும்பு,ஜூன்21

நேற்றுக்காலை மருதானைப் பொலீஸாருக்கு மர்மப்பொதியொன்று தொடர்பாகக் கிடைத்த தகவலையடுத்து மருதானை தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பிடத்தில் இருந்த பொதியொன்றைப் பொலீஸார் கண்டுபிடித்தனர். அதைச் சோதனைக்குட்படுத்தியபோது அதனுள் இரண்டு கிரனேட்டுகளும்,

(16ஆம் பக்கம் பார்க்க)

## சிவராம் கொலையின் சந்தேகநபர் 27இல் அடையாள அணிவகுப்பில்!

### கடுவெல நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,ஜூன்21

பத்திரிகையாளர் சிவராம் கொலைச சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட புளொட் இயக்கத்தின் இராணுவப் பிரிவுத் தலைவரான பீற்றரை இம்மாதம் 27 ஆம் திகதி அடையாள அணிவகுப்பு ஒன்றில் நிறுத்துமாறு கடுவெல நீதிவான் சம்பாஜானகி ராஜரத்ன நேற்று உத்தரவிட்டார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பொலீஸ் பிரிவினரால் மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஆறுமுகம் சிறிஸ்கந்தராஜா அல்லது பீற்றர் என்ற நபரையே இவ்வாறு அடையாள அணிவகுப்பு ஒன்றுக்கு நிறுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சந்தேகநபர் பம்பலப்பிட்டி ஹேக் வீதியில் உள்ள வீடொன்றில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு நீதிவானின் உத்தரவின் பேரில் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிவராம் கொலைச் சம்பவம் தொடர்பாக ஆரம்பத்தில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம், சுழிபுரம், தொல்புரத்தைச் சேர்ந்த வேலாயுதம் நல்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிஸன் நேற்று வந்து சேர்ந்தார் அவரைச் சந்திக்க ஜே.வி.பி. மறுப்பு

### இன்று ஜனாதிபதியுடன் அவர் முக்கிய பேச்சு

இலங்கை அமைதி முயற்சிகளில அனுசரணைப்பணி வகிக்கும் நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் நேற்றுப் பிற்பகல் ஒருமணி நேரம் தாமதமாக - கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இன்று சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசும் அவர் நாளை கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கிறார்.

விடார் ஹெல்கிஸன் ஜே.வி.பியின

(16ஆம் பக்கம் பார்க்க)

## மேல்மாகாண முதல்வர் பதவியை கைப்பற்ற முயல்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,ஜூன்21

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ரெஜினோல்ட் கூரேயின் இராஜினாமாவினால் வெற்றிடமாகியிருக்கும் மேல்மாகாண முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றுவதற்கான பகீரதப் பிரயத்தனத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுவருவதாக அந்தக கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

மேல் மாகாணசபையின் ஆட்சியைக் கொண்டு நடத்திய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிர

(16ஆம் பக்கம் பார்க்க)

## பெரும்பான்மைப் பலத்தின் அடிப்படையில் முதல்வர் தெரிவு

### ஆளுநருக்கு ஐ.தே.க. அவசரக் கடிதம்

கொழும்பு, ஜூன்21

மேல்மாகாணசபை முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரேயின் இராஜினாமாவினால் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்திற்கு புதிய ஒருவரை நியமிப்பதாயின் மாகாணசபையில் பெரும்பான்மைப்பலம் உள்ள தரப்பிலிருந்து ஒருவரையே நியமிக்கவேண்டுமென மேல்மாகாண சபையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மாகாண ஆளுநரிடம் நேற்று அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. - ஜே.வி.பி. வியாழன் சந்திப்பு

கொழும்பு,ஜூன்21

அரசியலில் அடுத்த நகர்வு குறித்து ஆராய்வதற்கான உரையாடல் ஒன்றுக்கு ஐ.தே.கவுக்கு அழைப்பு விடுத்துள்ளது ஜே.வி.பி. நாளைமறுதினம் இருகட்சிகளும் உத்தியோகபூர்வமற்ற வகையில் சந்திப்பை ஏற்படுத்தவுள்ளன. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலையை அடுத்தே ஐ.தே.கவை தம்முடன் பேச வருமாறு ஜே.வி.பி. அழைப்பு விடுத்துள்ளது எனத் தெரியவருகிறது.

ஐ.தே.கவைக் கடுமையாக விமர்சித்து வந்த ஜே.வி.பியினர் நாட்டு விவகாரம் பற்றிக் கதைப்பதற்கு முதன் முறையாக உத்தியோகபூர்வமற்ற வகையில் ஐ.தே.கவுக்கு அழைப்பு

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. - பொ.ஐ.முன்னணி உறுப்பினர்களிடையே மோதல்!

கொழும்பு, ஜூன்,21

குருநாகல் மாவட்டம் கிரியோவாவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்தக் கூட்ட நிறைவின்போது பொது ஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களுககும், ஜே.வி.பி உறுப்பினர்களுக்கும் இடையே நடந்த மோதலில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருவர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் நடந்த கூட்டுறவுச் சங்க வருடாந்தக் கூட்டத்தின்போது இரு சாராருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து மோதல் வெடித்துள்ளது. இதில் கடுங்காயங்களுக்கு உள்ளான ஜே.வி.பி உறுப்பினர்கள் இருவர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)



வடமராட்சியில் நேற்று இடம்பெற்ற பேரணியின் இரு காட்சிகள் (படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

எமது கடலும், நிலமும் எமக்கு வேண்டும் என வலியுறுத்தி

# வடமராட்சியில் நேற்றுப் பேரணி; பிரபாவுக்கு மகஜர் சமர்ப்பிப்பு!


வடமராட்சி,ஜூலை21

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தியும் தமிழர்தாயகப் பிரதேசத்திலிருந்து இராணுவத்தினரை வெளியேறக்கோரியும் நேற்று வடமராட்சியில் மாபெரும் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

திக்கம் சந்தியில் இருந்து முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகிய இந்தப் பேரணி, பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சென்றடைந்தது. இந்தப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமராட்சி வடக்கு, வலி.வடக்கு, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றினர்.

'எமது கடலையும் எமது நிலத்தையும் மீட்கும் வரை ஓயமாட்டோம்', 'சிங்கள தேசம் வாழ்வதுபோல் எங்களை இங்கே வாழவிடு', 'படையினர் காவல் யாருக்கு?' என்பன உள்ளிட்ட கோஷங்களைப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் எழுப்பினர்.

கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்கள் வழியே பேரணி சென்றபோது, 'எங்கள் இடத்தை விட்டு நீங்கி உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள்' என்ற கோரிக்கை அடங்கிய சிங்கள மொழியில் அமைந்த பிரசுரங்களை இராணுவத்தினரிடம் பேரணியில் சென்றவர்கள் கையளித்தனர். அத்துடன், சொந்த ஊர் செல்லும்போது படையினர் தமது பொருள்களை மூடைகட்டுவதற்கென சாக்குப்பைகளை வலியுறுத்தல்(15ஆம் பக்கம் பார்க்க)



இராணுவத்தினருக்கு வேண்டுகோள் பிரசுரமும், சாக்குப்பையும் வழங்கப்படுவதை மேலுள்ள படத்திலும் தேசியத் தலைவருக்கான மகஜர் வாசிக்கப்படுவதை கீழுள்ள படத்திலும் காணலாம்.

# சுதந்திரப் போருக்கு ஆணையிடுங்கள்: தலைவர் பிரபாவிடம் மக்கள் கோரிக்கை

## வடமராட்சியிலிருந்து நேற்று அவருக்கு மகஜர்

கரவெட்டி,ஜூன்21

சுதந்திரப் போரை உடனடியாகத் தொடங்குவதற்கு ஆணையிடுங்கள்!

- இவ்வாறு தேசியத் தலைவர் வே.பிரபாகரனிடம் அவசர கோரிக்கை ஒன்றை முன் வைத்திருக்கின்றனர் வடமராட்சிப் பிரதேச மக்கள்.

திக்கம் சந்தியில் இருந்து நேற்று நடத்தப்பட்ட பேரணியின் இறுதியில் தலைவர் வே. பிரபாகரனுக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இற்றைக்கு இருபத்துமூன்று வருடங்களாக எமது உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தினை ஸ்ரீலங்கா அரசு சமாதானத்தையும் ஒழுங்கையும் நாட்டில் நிலைநாட்டுவதற்காகப் போரினை நடத்துவதாக உலக அரங்கிற்கு தெரியப்படுத்தி, தமிழினத்தை தனது இராணுவ அடக்குமுறையால் அழித்தது. தமிழினத்தின் பெறுமதிமிக்க பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் பல கோடி சொத்துக்களையும் நாம் இழக்க நேரிட்டது. நிலத்தையும் இருந்த இல்லிடங்களையும் இழந்த துயர் இன்னமும் எமக்கு ஆறவில்லை. ஆனால், போரியல் வரலாற்றில் தமிழர்களைத் தலைநிமிர வைத்துள்ள தமிழ்த் தேசியத் தலைமையால் ஒரு மரபுவழித் தமிழர் படை உண்டு என்பதை சர்வதேச தலைமைகளுக்கும் சிங்களப் பேரினவாத சிந்தனையுடைய தலைமைகளுக்கும் உணரவைத்துள்ளது. இவ்வுயர் இராணுவபலத்தின் காரணத்தினால்தான் சமாதான ஒப்பந்தம் உருவாகியது. சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று வருடங்களாகியும் தாயகத்தில் தமிழர்களின் இயல்பு வாழ்க்கை இன்னமும் திரும்பவில்லை. இந்நிலையில், ஏறக்குறைய 70வீதமான பாதிப்பை சுனாமிப் பேரலையால் அடைந்துள்ள நாம், அப்பாதிப்பை ஈடுசெய்யும் வகையில் உலகநாடுகளால் வழங்கப்படும் உதவிகளைப் பகிர்ந்தளிக்கும் பொதுக்கட்டமைப்பைக் கோரிய போது, அதற்கு எதிராக சிங்கள மக்களை அணிதிரட்டி உண்ணாவிரதப் போராட்டம், ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தும் பேரினவாத தலைமைத்துவத்தை நாம் வண்மையாகக் கண்டிக்கின்றோம்.



தேசியத் தலைவர் பிரபாகரனுக்கான மகஜர் கையளிக்கப்படுகிறது.

தமிழ் இனம், சிங்கள இனவாதம் பேசும் தலைமைகளால் காலங்கால மக உயிர், உடைமை அழிவுகளையும் ஒடுக்குமுறைகளையும் இராணுவ அநீதிகளையும் சுமந்து வந்துள்ளது. இப்பாரங்களை இனியும் நாம் தொடர்ந்து சுமக்க முடியாது. பேரினவாதத் தலைவர்கள் அப்பாவிச் சிங்கள மக்களைத் தவறான முறையில் வழிநடத்தி இனவாதக கருத்துக்களை ஊட்டி, இம் முரண்பாட்டை வலுவாக்கி மீண்டும் தமது அரசியலைப் பலப்படுத்தி தலைமைப்பதவிகளைத் தக்கவைக்க முயலும் நாடகத்தால் தமிழினத்தின் உரிமை, விடுதலை, சுதந்திரவேட்கையை நசுக்கிவிட முடியாது. எமது ஆயுதபலமும் அரசியல்பலமும் தேசிய ஒற்றுமையும் வலுவடைந்துள்ளமையை சர்வதேச சமூகம் மதித்துள்ளது.

இலங்கை அரசின் சிறந்த தலைமை ஒன்றை சிங்களத் தலைமைத்துவத்திலிருந்து காண முடியாத அவலம் தென்னிலங்கை அரசியல் நிலைமையிலிருந்து உணர முடிகிறது. இதனால், எமது உரிமைகளை, விடுதலையை, சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் சிங்கள அரசின் தீர்வுகளை எதிர்பார்த்திருப்பது தற்போதைய நிலையில் பொருத்தமற்றது. எனவே, எமது தாயக நிலப்பரப்பை விடுவித்து, சுதந்திர தமிழர் தாயகத்தை அமைப்பதற்கான சூழல் உருவாகி வருவதற்குச் சிங்களப் பேரினவாதத் தலைமைகளே அண்மைக்காலமாக வழிகாட்டிநிற்கின்றன.

தமிழினம் எதற்காக ஆயுதம் ஏந்திப்போராடியதோ அந்த இலக்கை நோக்கியே நாம் நகரவேண்டும். சிங்களப் பேரினவாதம் சாதாரண பொதுக்கட்டமைப்பை வழங்கவே பேரினவாத அரசு தாண்டவமாடுகிறதென்றால், எமது உரிமைகளை நாம் எப்போது பெறுவது? எமது இனம் எப்போது சுதந்திரம் அடைவது? எமது தாயகம் எப்போது மலர்வது? இதுவரை காலமும் பொறுத்தது போதும் பொங்கி எழவேண்டும். எம் தமிழ்த் தேசியத் தலைவா! மக்கள் உன்பின்னால் அணிதிரண்டு நிற்கின்ற இவ்வேளையில், தென்னிலங்கை அரசியல் குழம்பியுள்ள இத்தருணத்தில், எமது இறுதிச் சுதந்திரப்போருக்கு ஆணையிடுங்கள். உங்களின் பணிப்பிற்காக உறுதியோடும் உணர்வோடும் சுதந்திர வேட்கையோடும் காத்திருக்கின்றோம். (ஜ-70-173)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வண்ணை ஸ்ரீமகமாரி அம்மன் ஆலய மண்டலாபிசேக பூர்த்தி திருவிழா இன்று நடைபெறவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு அம்பாளுக்கு நவோத்தர சத சங்காபிசேகமும் விசேட பூசையும் இடம்பெற்று மாலை அம்பாளுக்குத் திருவூஞ்சலும் இடம்பெறும். தொடர்ந்து அம்பாள் வெளிவீதியுலா வருவார். (3-203)

★ ★ ★

மூளாய் வதிரன் புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான மணவாளக்கோல நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. (3-204)

★ ★ ★

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் சனிப் பெயர்ச்சியை முன்னிட்டு விசேட நவக்கிரக ஹோமம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

நவக்கிரக தேவர்களுக்கு விசேட ஹோமம், அபிஷேக ஆராதனை என்பனவும், சனீஸ்வர பகவானுக்கு விசேட சகஸ்ரநாம அர்ச்சனை என்பனவும் இடம்பெறவிருக்கின்றன. (3-204)

கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்பாள ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று காலை9 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3-180-203)

★ ★ ★

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கும் தீர்த்தத்திருவிழா நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கும் நடைபெறவுள்ளன. (3-203)

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. நாளை காலை 7 மணிக்கு தீர்த்தத்திருவிழா நடைபெறும். (3-69-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்21

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளது.

விசேட பூசைகளும், பெருமான் தீர்த்தமாடும் காட்சியும் இடம்பெறவுள்ளன. (13)

# கலை இலக்கிய வட்டத்தின் ஆண்டுவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்20

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் எட்டாவது ஆண்டு நிறைவு விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் கலந்துகொள்வார்.

விழாவில் மாத சஞ்சிகையின் ஆறாவது இதழ் வெளியிடப்படும்.

இலக்கியச் செல்வர் கவிமணி கண்டாவளைக் கவிராயர் (சி.கு.இராசையா - ஓய்வு பெற்ற கிராம அலுவலர்), இலக்கியச் செல்வர் கலைமாமணி பொன்.தெய்வேந்திரம் (முன்னாள் இசை விரிவுரையாளர்) ஆகிய இலக்கிய கர்த்தாக்கள் கௌரவிக்கப்படுவர். இவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் விருது வழங்கிக் கௌரவிப்பார்.

கலை நிகழ்ச்சிகள் பலவும் விழாவில் இடம்பெறவுள்ளன. (ஜ)

# பட்டிமன்றம்

அளவெட்டி, பன்னாலை கணபதீச்சம் சின்னப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று இரவு 8 மணியளவில் மாவை.சிவநாதம் பட்டிமன்றக் குழுவின் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.(ஒ-13)

# யாழ்.-குறிகாட்டுவான் இடையே பதினைந்து பஸ்கள் சேவையில்

யாழ்ப்பாணம்,ஜூன்21

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத்தின் இரதோற்சவம் மற்றும் தீர்த்தோற்சவத்தையொட்டி வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். - குறிகாட்டுவான் இடையே 15 பஸ்களை சேவையில் ஈடுபடுத்துகிறது.

இதனை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். அலுவலகத்தினர் தெரிவித்தனர். இரதோற்சவ தினமான இன்றும், தீர்த்தோற்சவ தினமான நாளையும் இரவு 8 மணி வரை பஸ்சேவை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நயினாதீவு செல்லும் பக்தர்களின் வசதிகருதி யாழ். பஸ்நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் பஸ்சேவை ஒழுங்குகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ஒ-7)

# 6ஆவது தேசியப் பேராளர் மாநாடு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் 6ஆவது தேசியப் பேராளர் மாநாடு நேற்று நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்டச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது. பொதுச் சுடரேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் உமைநேசன் ஏற்றிவைத்தார். இதனையடுத்து மாவீரர்களின் உருவப் படங்களுக்கான மலர் மாலையினை யாழ். நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன், நல்லூர்க்கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள் ஆகியோர் அணிவித்தனர்.

ஆசியுரைகளை அருட்திரு. இராஜ்குமார் அடிகள், தாமேஸ்வரக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து சிறப்புரைகளை தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் உமைநேசன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, மா.க. ஈழவேந்தன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள குறைபாடுகள், தேவைகள் மற்றும் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக இந்த மாநாட்டில் கலந்துகொண்ட பேராளர்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். அத்துடன், தேசிய எழுச்சிப் பேரவை எதிர்காலத்தில் சமூக மட்டத்தில் மேற்கொள்ளவுள்ள செயற்றிட்டங்கள் என்பன தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.

இம்மாநாட்டில் தேசிய எழுச்சிப் பேரவையின் ஊரகம், பிரதேசம், கோட்டம், மாவட்டம் ஆகிய மட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-8-7-86) (படங்கள் 14ஆம் பக்கத்தில்)

# திருமுறைப் பாராயணம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் வில்லூன்றி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு ஆலயப் பூசையைத் தொடர்ந்து மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும். (3-204)

# ஈராக்கில் உள்ள அமெ. இராணுவம் தற்போதைக்கு வாபஸாகாது

## அமெரிக்க ஜனாதிபதி உறுதி

வாஷிங்ரன்,ஜூன்21

ஈராக்கில் நிலைகொண்டுள்ள படையினரை வாபஸ்பெறும் எண்ணம் தற்போதைக்கு இல்லை. அமெரிக்காவுக்கு இது சோதனைக் காலம். கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான எமது போராட்டம் தொடரும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் தேர்தல் நடைபெற்று அரசு அமைக்கப்பட்டுவிட்டதனால், அங்கு நிலைகொண்டுள்ள துருப்பினரை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு பல நாடுகள் வற்புறுத்திவருவதை தொடர்ந்தே புஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டும்வரை அமெரிக்கத் துருப்பினர் ஈராக்கில் நிலைகொண்டிருப்பர்.

இது அமெரிக்காவின் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது. மேலும் ஈராக் அரசுக்கு பாதுகாப்பு வழங்குவது எமது கடமை - என்றும் புஷ் மேலும் தெரிவித்தார்.

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைனின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் அமெரிக்கப் படையினர் அங்கு மறுசீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஆனால், அமெரிக்கப் படையினருக்கு எதிராக சதாமின் ஆதரவாளர்கள், கிளர்ச்சியாளர்கள் பல்வேறு தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனர்.

கிளர்ச்சியாளர்கள் நடத்திய தற்கொலை கார்க் குண்டுத் தாக்குதல்களிலும் ஏனைய தாக்குதல்களிலும் கடந்த சில மாதங்களில் மட்டும் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்துள்ளனர்.

தப்போது தலைநகர் பக்தாத்தில் கூடுதலான அமெரிக்கத் துருப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளனர். அவர்கள் தீவிரவாத முகாம்களை குறிவைத்து தாக்கி அழித்துவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

# இந்தியாவில கடும் வெப்பம்; 427 பொதுமக்கள் உயிரிழப்பு!

புதுடில்லி,ஜூன்21

இந்தியா முழுவதும் காணப்படும் கடும் வெப்பநிலை காரணமாக இதுவரை 427 பேர் உயிரிழந்துள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அக்கினி வெய்யில் முடிந்த பின்னரும் ஒரிஸா, மேற்கு வங்காளம், கார்கண்ட், பீஹார், உ[illegible] பிரதேசம், ஆகிய மாநிலங்களில் 110 [illegible]க்கும் மேலாக வெப்பம் காணப்படுகிறது [illegible] தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு வங்காளத்தில் அதிக பட்ச [illegible]மாக 124.16 டிகிரி காணப்படுகிறது.

ஆந்திரா, சந்திஷ்கார் மாநிலத்தின் வட பகுதி, மத்திய பிரதேசம், குஜராத் ஆகிய பகுதிகளில் வெப்பநிலை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது என்றும் -

தலைநகர் டில்லியில் 11.46 டிகிரி வெயில் அடிக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.(எ-க)

# தற்கொலைக் கார்க் குண்டுத் தாக்குதலில் ஈராக்கில் இருபது பொலீஸார் மரணம்!

ஈராக்கில் வடக்கிலுள்ள இர்பில் நகரில் போக்குவரத்துப் பொலீஸார் பலர் குழுமியிருந்த சந்தர்ப்பத்தில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைக் கார்க் குண்டுத் தாக்குதலில் 20 பொலீஸார் உயிரிழந்தனர்; நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

போக்குவரத்துப் பொலீஸார் காலையில் கடமைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் குழுமி நின்றுகொண்டிருந்தனர். அப்போது குண்டு பொருத்திய காரை செலுத்தி வந்த தற்கொலைக் குண்டுதாரி பொலீஸார் மீது மோதி குண்டை வெடிக்கச் செய்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தலைநகர் பக்தாத்தில் பொலீஸ் நிலையமொன்றின் மீது தற்கொலைக் குண்டுதாரிகள் நடத்திய கார்க் குண்டுத் தாக்குதலில் 6 பொலீஸார் உயிரிழந்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் சிற்றுண்டிச்சாலையொன்றில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 6 பொலீஸார் உட்பட 23 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் குண்டுத் தாக்குதல்களுக்கும் அல் கெய்டா அமைப்பின் முக்கியத் தலைவரான அபுமுஸாப் அல் - சர்காவி உரிமை கோரியுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-க)

# இஸ்ரேல் காஸா குடியேற்றங்களை அகற்ற பலஸ்தீனம் ஒத்துழைப்பு

லண்டன்,ஜூன்21

காஸா குடியேற்றங்களை அப்புறப்படுத்தும் விடயத்தில் இஸ்ரேலுடன்தான் ஒத்துழைக்கப் போகிறார் எனப் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

குடியேற்ற வீட்டுத்திட்டங்களை அப்புறப்படுத்துவதோ, அப்புறப்படுத்தாமல் விடுவதோ இஸ்ரேலிய அரசைச் சார்ந்த விடயம் என்று அப்பாஸ் கூறினார். குடியிருப்புகளைத் தரைமட்டமாக்க இஸ்ரேல் தீர்மானித்தால், அவர்களுடன் ஒத்துழைக்கத் தயார்.

இஸ்ரேலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் எஞ்சிவிடப்படுபவற்றைக் கொண்டு அதிக பட்ச பலனை அடையமுடியும்.

வீதித் தடைகளை நீக்குவதுடன் குறிப்பிட்ட பகுதிகளில் வாபஸ்பெறுமாறு இஸ்ரேல் பிரதமரைக் கோருவதன் மூலம் குறிப்பிட்ட பகுதிகளுக்கான பொறுப்புகளை ஏற்கமுடியும்.

அவ்வாறு அவர் வாபஸ்பெற்றால் முழுமையான பொறுப்புகளை வகிக்கமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-க)

# அமெரிக்கக் ஹெலி ஆற்றினுள் மூழ்கியது!

நியூயோர்க்,ஜூன்21

அமெரிக்க நியூயோர்க் நகரின் கிழக்கு ஆற்றினுள் எஸ்.76 ரகக் ஹெலிக்கொப்டர் ஒன்று விழுந்து மூழ்கியது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

எம்.பி.என்.ஏ. கடன் அட்டை நிறுவனத்திற்குச் சொந்தமான ஹெலிக்கொப்டரே இவ்வாறு நேற்று ஆற்றுக்குள் விழுந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எம்.பி.என்.ஏ. நிறுவன நிறைவேற்று உயர் அதிகாரி உட்பட 8 பேர் அந்த ஹெலிக்கொப்டரில் பயணித்தனர் என்றும் -

விமானியின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனவும் ஏனையோர் பெரியளவில் பாதிக்கப்படவில்லை என்றும் அவதானிகள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இதேபோன்று அமெரிக்க ஹெலிகொப்டர் ஒன்று ஆற்றுக்குள் விழுந்து விபத்துக்குள்ளாகியது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

# ஜப்பானில் நில அதிர்வு

டோக்கியோ,ஜூன்21

ஜப்பானின் கிழக்குக் கடற்கரையில் நேற்று முன்தினம் இரவு நில அதிர்வொன்று ஏற்பட்டதென நிலநடுக்க ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

ரிச்டர் அளவுகோளில் 6.1 புள்ளியாகப் பதிவாகியிருந்த் இந்த நில அதிர்வு தலைநகர் டோக்கியோவுக்கு கிழக்கே 65 கிலோமீற்றர் தொலைவில், கடலுக்கு அடியில் மையம் கொண்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நில அதிர்வு காரணமாகக் கடற்கரையோரப் பகுதிகளில் உள்ள கட்டடங்கள் அதிர்ந்தன. ஜன்னல் கண்ணாடிகள் சிதறி விழுந்தன, சில இடங்களில் வீடுகள் சேதமடைந்தன. இதனால், ஆழிப்பேரலை ஏற்படுமோ என்ற அச்சத்தில் மக்கள் வீடுகளை விட்டுப் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க கலிபோர்னிய மாநிலத்திலும் அடிக்கடி நில அதிர்வு ஏற்படுகிறது. நேற்று முன்தினம் மாலையும் அங்கு நில அதிர்வு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு வாரகாலத்தில் 5 தடவைகள் கலிபோர்னியாவில் நில அதிர்வு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

முதலில் ஆழிப்பேரலை ஏற்படும் என்று நிலநடுக்க ஆய்வு நிலையம் அறிவித்தபோதிலும், பின்னர் அந்த அறிவிப்பை வாபஸ்பெற்றுக்கொண்டது. (எ-க)

# மரப் பொருள்களைப் பெறுவதில் தச்சுத்தொழிலாளர்கள் சிரமம்

கிளிநொச்சி,ஜூன்21

கிளிநொச்சி மாவட்டத்தில் மரப் பொருள்களைப் பெறுவது சிரமமாக உள்ளதாக தச்சுத்தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, பலகை, தீராந்தி என்பவற்றைப் பெறுவதில் பெரும் சிரமம் உள்ளதாக அவர்கள தெரிவிக்கின்றனர்.

தென்னிலங்கையில் இருந்து எடுத்துவரப்படும் மரங்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்தே கிளிநொச்சிக்கு விற்பனைக்காக எடுத்துவரப்படுகின்றன. இதனால், விலை அதிகமாகவும், போதியளவு பொருள்களைப் பெறமுடியாமலும் உள்ளது. அத்துடன், கிளிநொச்சியில் மரங்கள் அரியும் ஆலைகளை நிறுவுவதற்கான முயற்சிகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளவேண்டும் எனத் தச்சுத் தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-301-202)

## ஆசிரிய விடுதிகள் புனரமைப்பு

முழங்காவில்,ஜூன்21

கிளிநொச்சி, கிராஞ்சி அ.த.க. பாடசாலை மற்றும் வேரவில் இந்து மகாவித்தியாலயம் என்பவற்றில் ஆசிரிய விடுதிகளின் திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கடந்த 25 வருடகாலமாக திருத்த வேலை ஏதும் மேற்கொள்ளப்படாதிருந்த இவ்விடுதிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-323-202)

## 'நியாப்' திட்டத்தின் கீழ் 4 கிராமங்கள் அபிவிருத்தி

முல்லைத்தீவு மாவட்டத்தில் 'நியாப் II' திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யும் வகையில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த நான்கு கிராமங்கள் மையக் கிராமங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

தேவிபுரம், விசுவமடு இளங்கோபுரம், இரணைப்பாலை, மந்துவில் ஆகிய நான்கு கிராமங்களுமே அபிவிருத்தித் திட்டத்திற்கென தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களாகும்.

இப்பகுதிகளிலுள்ள விவசாயக் குளங்கள், பொதுக் கிணறுகள், பொது நோக்கு மண்டபங்கள் மற்றும் வீதிகள் என்பன இந்த 'நியாப் II' திட்டத்தின் மூலம் புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(எ-353)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying

Head office
No.500,Galle Road, Wellawatte, Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road, Jaffna, Tel:021-2226242 Fax:021-2225600
Branch
No:14,New Market Building Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road, Trincomalee.
Tel:026-2221519 Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு

# கரும்புலிகள் தினத்தை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடு

கிளிநொச்சி,ஜூன்21

எதிர்வரும் கரும்புலிகள் தினத்தை எழுச்சியுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதுதொடர்பான கூட்டம் கடந்த 16ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணர் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பொதுமக்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டறிந்த அரசியல்துறையினர், மாவட்டம் தழுவிய வகையில் எழுச்சி நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்வதெனத் தீர்மானித்தனர்.

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் கரும்புலிகள் எழுச்சிச் செயற்பாடுகளும் ஊர்திப் பவனியும் பிரதேச ரீதியாக மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (8-301-202)

## சுகாதார சேவையாளர்களுக்கு 3 நாள் பயிற்சி நெறி

கிளிநொச்சி,ஜூன்21

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள திலீபன் மருத்துவ சேவை நிலையங்களில் சேவையாற்றுகின்ற சுகாதார சேவையாளர்களுக்கான பொதுச் சுகாதார 3 நாள் பயிற்சி நெறி அண்மையில் மருத்துவ சேவை நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது.

இதில் மருத்துவர்கள், பொதுச் சுகாதார மாதுக்கள் ஆகியோர் இணைந்து பாடநெறிகளை நடத்தினார்கள்.

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஆதரவுடன் திலீபன் மருத்துவ சேவையினரால் இப்பயிற்சிநெறி நடத்தப்பட்டது. (8-202)

வன்னிச் செய்திகள்

# உலக வங்கியின் உதவியுடன் புதுக்குடியிருப்பில் 100 வீடுகள்

புதுக்குடியிருப்பு,ஜூன்21

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் 100 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இத்தகவலை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் எஸ்.தயானந்தா தெரிவித்தார்.

இருட்டுமடு, வசந்தபுரம், பாரதிபுரம், கொம்பாவில், கர்ணன் குடியிருப்பு ஆகிய கிராமங்களில் தலா 25 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு வீடும் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்டவையாக நிறுவப்படும்.

இந்த வீட்டுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விவரம் அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர் பிரிவில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் -

அவை தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் உடன் தமக்குத் தெரியப்படுத்துமாறும் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (எ-410-353)

இந்தியாவில் கல்வி கற்க அரிய வாய்ப்பு !
பின்வரும் இள நிலை கற்கை நெறிகளை தென்னிந்தியாவின் நாமக்கல் மகேந்திரா கலை விஞ்ஞான கல்லூரியில் (ISO 901 - 2000 Certified)
நியாயமான மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றிடுவீர் !!
* B. Computer Application * B Sc Bio Technology * B Sc Micro Biology * B Sc Nutrition & Dietics * B Com
* B Com (Computer Application) * B Sc Physics * B Sc Maths * B Sc Chemistry * BComputer Application * B Sc Computer Science
NN CONSULT - இல. 60 [முதல் மாடி] பீற்றர்சன் லேன், வெள்ளவத்தை. கொழும்பு - 06.
தொலைபேசி : 011-5558833, தொலைநகல் : 011-5558844, மின்அஞ்சல் : nnconsult@sltnet.lk



# 16ஆவது பிறந்ததின வாழ்த்துக்கள்

21 . 06 . 2005

மீசாலை மேற்கு மாளிகா வீதியைச் சேர்ந்த
**தர்மேந்திரன் வசந்தினியின்**
ஏகபுத்திரி செல்வி பிரியதர்சினி இன்று (21.06.2005) செவ்வாய்க்கிழமை
தனது 16ஆவது பிறந்ததினத்தை
இலண்டனில் வசிக்கும் விக்கி மாமா வீட்டில் குதூகலமாக
மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றார்.
இவரை மீசாலை இலுவம் பிள்ளையாரின் அருள் பெற்று பல்கலையும்
கற்று பல்லாண்டு காலம் வளமுடன் வாழ லண்டனில் வசிக்கும்
டடி, மம்மி, ஆசை அண்ணா சீலன், தம்பி வேணுகுட்டி, லண்டனில்
வசிக்கும் விக்கி மாமா குடும்பம், அமெரிக்காவில் வசிக்கும்
கௌரிசங்கர் அண்ணா மற்றும் அம்மப்பா, வயல்கரையில்
வசிக்கும் அப்பம்மா, பாலு பெரியப்பா, கிளிபெரியம்மா
அண்ணாமார், அக்காமார், தம்பி, தங்கைகள், மாமாமார்,
அத்தைமார், நண்பர்கள் மற்றும்
யாவரும் வாழ்த்துகிறார்கள்.

**த.பிரியதர்சினி**



*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

HAPPY BIRTHDAY

**வி.கணேசமூர்த்தி**
**(பேரன்).**


## காசநோய் தடுப்பு பிரசாரம் தீவிரம்

வலி.தெ.மே,ஜூன்21

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாயிலுள்ள தலைமை அலுவலகம் காசநோய தடுப்பு பற்றிய சுவரொட்டி பிரசுரம் ஒன்றை இப் பிரதேசசபை பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

காசநோய் தொடர்பான விழிப்புணர்வு கூட்டங்களை கிராம மட்டத்தில் நடத்தி மககளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி காசநோய் இல்லாததொரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்று இதுதொடர்பாக அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் பிரதேச சபை செயலாளர் கேட்டுள்ளார். (3-135)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## உயர்திரு. க.தேவராசா

வணிகத்துறைப் பீடாதிபதி

எமது பாடசாலையின் பழைய மாணவரும் பாடசாலையின்
வளர்ச்சியில் பங்கெடுத்து வருபவருமாகிய
உயர்திரு. க.தேவராசா அவர்கள் வணிகத்துறைப்
பீடாதிபதியாக பதவி உயர்வு பெற்றமையையிட்டு
அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யா/தாவடி இ.த.க.**
**பாடசாலைச் சமூகம்.**

(36773)(48-11-19)



## வீடியோ புகைப்படக் கலைஞர்களுக்கு

இன்று (21.06.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு இல.43, பிரப்பங்குளம் ஒழுங்கை, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஒளிக்கலை ஒன்றியம் பணிமனையில் விசேட பொதுக்கூட்டம் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் ஒன்றியத்தின் யாப்பு அங்கீகரித்தல், பதிவு செய்தவர்களுக்கான அங்கத்துவ இலக்கம் வழங்குதல், எதிர்கால நடவடிக்கைகள் ஆகியவை இடம்பெறவுள்ளதால் அனைத்து வீடியோ, புகைப்படக் கலைஞர்களும் தவறாது சமுகமளிக்கவும். இதுவரை பதிவு செய்யாதவர்கள் உடன்பதிவுகளை மேற்கொண்டு இன்றைய கூட்டத்தில் தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

குறிப்பு: பதிவை மேற்கொண்டவர்கள் தங்கள் பதிவுக்கான ஆவணத்தைத் தொழில் செய்யும் பொழுது நிச்சயம் வைத்துக் கொள்வதுடன் ஒன்றியத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இல.43, பிரப்பங்குளம் லேன்,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்,
ஒளிக்கலை ஒன்றியம்,
யாழ்.மாவட்டம்.

இத்துறையின் வளர்ச்சி இத்துறைசார்ந்தோர் வளர்ச்சியினூடாக தேசத்தின் வளர்ச்சி



ஓம்
குருவே துணை

**யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின்**
அனுசரணையுடன் நடைபெறும்

## அருணகிரிநாத சுவாமி விழா – 2005

இடம்: **சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி தொண்டைமானாறு**
காலம்: **22.06.2005 புதன்கிழமை**
நேரம்: **காலை9.30 மணியளவில்**

**நிகழ்ச்சிகள்**

தலைமையுரை: **பிரம்மஸ்ரீ காரை கு.சிவராஜசர்மா**
சொற்பொழிவு: **'வாக்கிற்கு அருணகிரி'**
வழங்குபவர்: **திரு.ச.லலீசன்**
(ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்தா)
இசையரங்கு: **திருப்புகழ்**
**தாவடியூர் S.R. திருஞானசம்பந்தன்**
(பக்கவாத்திய சகிதம்)
மாணவர்கள் நிகழ்வு: **தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்**

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

*செல்வச்சந்நிதி,*
*தொண்டைமானாறு.*

**சந்நிதியான் ஆச்சிரமம்**

(ச/43966)(42-11-19)


## குடாநாட்டில் நான்கு ஆயுள்வேத மருந்தகங்கள் அடுத்தமாதம் ஆரம்பம்

யாழ்குடாநாட்டில் எதிர்வரும் ஜூலை மாதமளவில் நான்கு ஆயுள்வேத மத்திய மருந்தகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இம் மருந்தகங்கள் சங்கானை, காரைநகர், அரியாலை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இயங்கவுள்ளன என்றும் -

இந்த மருந்தகங்களுக்கான மருந்து கொளவனவிற்கான நிதி ஒதுக்கப்படவுள்ளது என்றும் -

வடக்கு - கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் மருத்துவப் பணிப்பாளர் டாக்டர் திருமதி இ.தர்மராஜா தெரிவித்தார். (எ-51)

## பற்சிகிச்சையாளர் இடமாற்றம்

மானிப்பாய் இந்துக் கல்லூரி பற்சிகிச்சை நிலையத்தின் பற்சிகிச்சையாளர் கௌரி நடராசா வேலணை அரசினர் வைத்தியசாலையில் இயங்கிவரும் பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை நிலையத்திற்கு இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.(ஜ-135)

## வெங்காயச் செய்கை பாதிப்பு

பெரியவிளான், இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில் வைகாசிப் போகத்தில் நடப்பட்ட வெங்காயப் பயிர்களை குமிழ் அழுகல் நோய் பெரிதும் பாதித்துள்ளது. இதனால் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பலத்த நட்டமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

கீரிமலை விவசாய சேவை கேந்திர நிலையப் பிரிவு விவசாய போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவர்மன் அண்மையில் இப்பகுதிகளில் நோய்த்தாக்கத்திற்குள்ளான வெங்காயச் செய்கைக் காணிகளை நேரில் பார்வையிட்டு குமிழ் அழுகல் நோயை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தடுப்பு முறைகளை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளார். (ஜ-135)

## ஆனைக்கோட்டையில் கட்டாக்காலிகளால் தொல்லை

நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த சிறுபோகச் செய்கையைத் தொடர்ந்து நவாலி விவசாய சம்மேளனத்தின் உத்தரவுக்கிணங்க கட்டாக்காலி ஆடு, மாடுகள் கட்டிவைத்து வளர்க்கப்பட்டன.

தற்போது சிறுபோகச் செய்கை அறுவடை முடிவடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் கால்நடைகள் கட்டாக்காலிகளாக அவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இதனால், இவை வீட்டு வளவுகளுக்குள் அத்துமீறி உட்புகுந்து பயன்தரும் மரங்களை அழித்து வருகின்றன எனக் கூறப்பட்டது. (எ-100)

## மாதகல் - சகாயபுரம் மினிபஸ் சேவை

வலி.தென்மேற்கு,ஜூன்21

மாதகலில் இருந்து சகாயபுரம் கிராமத்து மக்களின் போக்குவரத்து வசதியை முன்னிட்டு மினிபஸ் சேவை ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கிராம மக்கள் இதுவரை காலமும் யாழ். நகர் செல்வதற்கும் ஏனைய இடங்களுக்குச் சென்றுவருவதற்கும் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வந்தனர். 787 பாதை இலக்க மினிபஸ் வண்டிகளே தற்போது சகாயபுரத்திற்கும் சென்று போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஜ-135)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

உங்கள் பிள்ளைகள் சிறுவயதிலேயே ஆங்கிலத்தில் கதைப்பதை விரும்புகின்றீர்களா? பாலர் பாடசாலை ஆரம்பமாகியுள்ளது. 426(302), K.K.S. **வீதி, யாழ்ப்பாணம்.**



# Save the Children

in Sri Lanka

**We are looking for a committed & energetic individual to join our team as: Partnership Management Officer**

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

The aim of the post is to work closely with Partnership Development manager to contribute to the day to day running of SCiSL programs.

**Base Station**
**Jaffna**

**Qualifications and experience:**
**Essential**
- Graduate degree in Social Sciences or equivalent with preferably 3 years of experience in development organization
- Good analytical skills and field experience in program management
- Skills related to participatory methods, computer literacy and financial management
- Good knowledge of written and spoken English with fluency in one or more of the local languages.
- Skills in report writing
- Ability and willingness to travel to all parts of the country
- Strong inter personal skills

**Desirable**
- Knowledge of a Third Language
- Exposure to development interventions in the area of child rights
- Experience in working with partners

A competitive remuneration package awaits the selected candidate. The age limit at SCiSL is 60 years.

**Duration :**
The above position would be initially for a period of one year
The post will involve travel to other parts of the country.
Please note that all positions in SCiSL are subject to transfer.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before 26th June 2005 to:

**Save the Children in Sri Lanka**
**146, Temple Road, Nallur, Jaffna.**

* No telephone enquiries please.
* Only short listed candidates will be contacted. (C/43569)


# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* 19 – 09 – 1921



*மறைவு* 03 – 07 – 2001

## திருமதி அருட்செல்வவினாயகம் திலகவதி

*திதி:* 21–06–2005

வெல்லிங்கந் தோட்டப் பிள்ளையார்
ஆலய முன்னாள் மனேச்சர் (நிரந்தர தர்மகர்த்தா)

ஆண்டுகள் நான்கு சென்றாலும் எம்
மனதை விட்டகலாதா அம்மாவே!
எங்களுக்காகப் பாசம் காட்டி உங்கள்
நலம் பாராது எங்களை அரவணைத்தீர்கள்?
உங்கள் பாசத்திற்காகத் தவிக்கின்றோம்
உங்களுக்கு நிகர் யார்? எமக்கு அம்மா!
எங்கள் நெஞ்சம் இருக்கும் வரை
நினைவுகள் இருக்கும்.

*தம்பலத்தனை,*
*துன்னாலை வடக்கு.* (36767) (42-11-19)

**பா.பாஞ்சாலி**
**மகள்.**

# மரண அறிவித்தல்

## நடராஜா செல்வநாயகம்

(முன்னாள் பிரதேச மேற்பார்வையாளர், இயந்திரவியலாளர்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
யாழ்.மத்தியகல்லூரி பழைய மாணவர்)



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா செல்வநாயகம் நேற்றுமுன்தினம் (19.06.2005) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் நடராஜா - காலஞ்சென்ற நாகரத்தினதத்தின் மூத்த புதல்வனும் சாந்தரூபியின் (வசந்தி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற மாணிக்கம்பிள்ளை - விசாலாட்சியின் அன்பு மருமகனும் சுகந்தி (ஜேர்மனி), நந்தகுமார் (கனடா), சுதர்சினி, சங்கீதா, ஆகியோ ரின் அன்புத் தந்தையும் செல்வராணி, செல்வரட்ணம் (குட்டி - வரதன் லேன்ஸ்), பவளராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விநாயகமூர்த்தி, நவரட்ணம், தவராணி, கிறிஸ்ணலீலா, மனோன்மணி, ராஜேந்திரா, கௌரி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராஜகுலசிங்கம், ஆனந்தன், சிவா, ரவீந்திரன், சேர்ழி ஆகியோரின் சகலனும் சந்திரராசா (ஜேர்மன்), சங்கர், ரஞ்சன், கமலினி, ரஜனி, சுதாகர், ராஜ், ரஜீவன், கௌசலா, விஜிதா, பிரேம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கமலகுமார், தீபா, றமேஸ், பிரசாத், ஸ்ரீநாத், கிருபன், ஸ்ரீபிரியா, கார்த்திக் ஆகியோரின் பெரியப்பாவும் சந்துரு (ஜேர்மன்), துட்சா, நிலா, கம்சா, சதுஸ்ரன், அபிநயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*15/4, மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி.*
T.P. *021 4590517*

தகவல்:
மனைவி (வசந்தி)
பிள்ளைகள்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## தமிழகத்தில் ஈழ அகதிகள்; அவர்களுக்கு விடிவு எப்போது?

கடந்தகால போர் அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து தமிழகத்தில் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழ் அகதிகள் அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள அகதிமுகாம்கள் கடந்த சனிக்கிழமை இரவு ஒரே சமயத்தில் அதிரடியாகப் பொலீஸ் பாய்ச்சலுக்கு இலக்காகியிருக்கின்றன. இலங்கைச் சீருடையினரின் கெடுபிடிகளுக்கு அஞ்சி, தமிழகத்தில் தஞ்சம் புகுந்தவர்கள் அங்கு அதிகளவில் சீருடையினரின் கெடுபிடிகளுக்கும் இம்சைகளுக்கும் இலக்காவது தொடர்கதையாகியுள்ளது.

தமிழகம் முழுவதிலும் உள்ள - நூற்றுக்கும் அதிகமான - முகாம்களில் அதிகாலை 4 மணி முதல் மதியம் ஒரு மணி வரை இந்தத் தேடுதல் நடத்தப்பட்டிருக்கிறது. பல்லாயிரக் கணக்கில் தங்கியிருந்த ஈழத்தமிழ் அகதிகள் இம்சைக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இவ்வளவும் புலிவேட்டை நடவடிக்கையாம். ஜெயலலிதா அரசுக்குப் புலிகள் மீதுள்ள கிலி இன்னும் அடங்கவில்லை. அதனால், அங்கு அவலப்படுகின்றார்கள் ஈழத்தமிழ் அகதிகள்.

காலத்திற்குக் காலம் ஈழத் தமிழர்களின் தாயகத்தின் மீது கட்டவீழ்த்துவிடப்பட்ட கொடூரப் போருக்கும் பேரழிவு தரும் இராணுவ நடவடிக்கைகளுக்கும் அச்சம் தரும் அடக்குமுறைகளுக்கும் பயந்து, உயிரைக் காப்பதற்காக, உடைமைகளையும் உறவுகளையும் துறந்து, அகதிகளாக ஆழியைக் கடந்து, அயலகமான தமிழகத்தில் தஞ்சம் புகுந்த நம்மவர் அங்குபடும் அவலம் சொல்லுந்தரமன்று. அதனை இப்பத்தியில் பல தடவைகள் நாம் புட்டுப்புட்டு வைத்தாயிற்று. ஆனால், பலன்தான் ஏதுமில்லை.

தஞ்சம் புகுந்த தமிழகத்தில் மனிதர்களாக வாழவும் முடியாமல், அஞ்சிஅஞ்சி அடிமை நிலையில் தொடரவும் முடியாமல், எஞ்சிய காலத்தைத் தமது தாயகத்தில் கழிப்பதற்குத் திரும்பிவரவும் இயலாமல் அவர்கள் படும் கஷ்டம் சொல்லுந்தரமன்று. சொற்களால் வர்ணிக்கமுடியாதது.

தாயகத்தில் குண்டுச் சத்தம் ஓய்ந்து, யுத்தநிறுத்தம் காரணமாக அமைதிநிலை நீடிக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தாயகம் மீண்டு, தமது வாழ்வை மீள இங்கு அமைத்துக்கொள்ளலாம் என எண்ணுகிறார்கள் தமிழக அகதிமுகாம்களில் அடக்கப்பட்டிருக்கும் - அடைக்கப்பட்டிருக்கும் - நம்மவர்கள்.

ஆனால், தமிழக மாநில அரசும் இந்திய மத்திய அரசும் அவர்களைத் தமது மண்ணில் கௌரமாக - மனிதர்களாக - வாழவும் விடாமல், தாயகம் திருப்பவும் விடாமல் இடக்குப் பண்ணி, தடக்குப் போட்டுக்கொண்டிருக்கின்றன.

இப்படி அகதி முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழ் அகதிகளில் பல்லாயிரக்கணக்கானோர் தாயகம் திரும்ப விரும்புகின்றார்கள். ஆனால், அதற்கான வழியை - வசதியை - இலங்கை, இந்திய அரசுகள் ஏற்படுத்துவதாக இல்லை.

இந்த அகதிகள் நாடு திரும்பிவிட்டால் அவர்களுக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் பொறுப்பு தன்னுடையதாகிவிடும், தமிழர்களின் பலம் இங்கு கூடி விடும், உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினர் ஆக்கிரமித்திருக்கும் தமது நிலங்களை இவர்களும் கோருவர் - என்றெல்லாம் கருதுகிறது போலும் இலங்கை அரசு.

இந்த அகதிகளை ஆயிரக்கணக்கில் தான் அடிமைப் படுத்தியோ, அல்லது வேறு வழியிலோ தனது மண்ணில் தக்க வைத்திருந்தால்தான் அதை ஒரு பாரமாகக் காட்டி - காரணமாகச் சொல்லி - நியாயமாக நிறுத்தி - இலங்கை விவகாரத்தில் அளவுக்கு மீறித் தலையிடலாம் என இந்திய மத்திய, மாநில அரசுகள் கருதுகின்றன.

இதனால் ஈழத்தமிழரின் அடிமை வாழ்வு - அவல நிலைமை - தமிழக மண்ணில் தொடர்கின்றது.

தாயகம் திரும்ப விரும்பும் அகதிகள் சுயாதீனமாக நாடு மீள்வதற்கு ஒரு பாதுகாப்பான வசதியை - ஒழுங்கை - ஏற்படுத்திக் கொடுக்காமல் - இலங்கை - இந்திய அரசுகள் கண்மூடித்தனமாக நடக்கின்றன எனக் கடந்த ஆண்டு மன்னார் நீதிமன்றம் கண்டனம் வெளியிட்டிருந்தது.

இந்த அகதிகள் தாயகம் திரும்புவதற்கு என்ன ஒழுங்குகளை - அதற்கு சர்வதேச ரீதியில் பொறுப்பான - ஐ.நா. அகதிகள் தூதரகம் செய்திருக்கின்றது என்பதை அது பகிரங்கப்படுத்த வேண்டும் என இப்பத்தியில் நாமும் பல தடவைகள் சுட்டிக்காட்டிக் கேட்டிருந்தோம்.

ஐ.நா. அகதிகள் தூதரகத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாகப் புதிதாக பொறுப்பேற்ற ராஜீவ் கபூர் கடந்த மாத இறுதியில் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த சமயம் அவரிடமும் தமிழ்ச்செல்வன் இத்தகைய கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

'இலங்கைப் படையினர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளினால் புலம்பெயர்ந்து தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழர்கள், பாதுகாப்பான வழியில் தாயகம் திரும்புவதற்கு இலங்கை, இந்திய அரசுகளுடன் கலந்துரையாடி வழி செய்யுங்கள்!' என்று தமிழ்ச்செல்வன் நேரடியாகவே கோரியிருந்தார்.

ஆனால், உருப்படியாகக் காரியம் ஏதும் நடந்ததாக இல்லை.

மறுபுறத்தில் தமிழகத்தில் தஞ்சம் புகுந்த அகதிகள் அங்கு ஏதோ வஞ்சம் தீர்க்கப்படவேண்டியவர்கள் போல நடத்தப்படுவது தொடர்கிறது.

அங்கு அகதி முகாம்கள் என்ற பெயரில் இயங்கும் நூறுக்கும் அதிகமான தடுப்பு நிலையங்களில் சுமார் 75 ஆயிரத்துக்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த முகாம்களுக்கு வெளியில் மேலும் சுமார் 75 ஆயிரம் ஈழத் தமிழர்கள் வசிக்கின்றனர். ஈழத் தமிழர்களை எல்லாம் புலியாகப் பார்க்கும் தமிழக அரசின் கொடூரப் பார்வையிலிருந்து விலகித் தாயகம் திரும்பவே பலரும் விரும்புகின்றனர். தமிழகத்தில் பட்டதுபோதும் இனித் தாயகம் திரும்பி அங்கேயாவது உயிர்விடுவோம்; நமது தாயக மண்ணுக்கு உரமாவோம் என்ற மனநிலையில் துடிக்கிறார்கள் அவர்கள்.

அவர்களுக்கு விடிவு எப்போது?

தாயகம் திரும்புவதற்கு சட்ட நெருக்கடிகள், கெடுபிடிகள் ஏற்படுத்தாத - பாதுகாப்பான - நிதிநெருக்கடியைத் தராத - திட்டம் எப்போது, யாரால், எவ்வாறு கொண்டு வரப்படும் என்பது தெரியாமல், அதற்காக, தமது தற்போதைய அவலவாழ்வுக்கு மத்தியிலும் காத்திருக்கின்றார்கள் அவர்கள்.

---

சந்தேகத்தின் பேரில் கைதாகி களுத்துறையில்

# 9ஆண்டுகள் சிறையில் வாடியவருக்கு யாழ். மருத்துவமனையில் சிகிச்சை

## சகோதரன், சகோதரியைத் தேடுகிறார் அவர்

யாழ்ப்பாணம்,ஜூன்21

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு ஒன்பது வருடங்களாகச் சிறைவாசம் அனுபவித்துவந்தவரான தமிழர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

1996ஆம் ஆண்டு வெளிநாட்டுக்குச் செல்வதற்காக கொழும்பிற்கு சென்ற இவர், விடுதி ஒன்றில் தங்கியிருந்தார். அப்போது இவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

சாவகச்சேரி தனங்களப்பைச் சேர்ந்த கந்தையா குகதாஸன்(வயது - 34) என்ற மேற்படி நபர் மத்திய வங்கிக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டார்.

1996ஆம் ஆண்டு 6ஆம் மாதம் 23ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இவர், அங்கு தான் அனுபவித்த சித்திரவதைகள் காரணமாகவே நோய்வாய்ப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார்.

மேலும் 1997ஆம் ஆண்டு களுத்துறைச் சிறைக்கைதிகளைப் பார்வையிடச் சென்ற டக்ளஸ் தேவானந்தா மீது தாக்குதல் நடந்தவேளை தனக்கும் வயிற்றுப் பகுதியில் காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 15ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டதும் தனக்கு இருக்கும் நோய் காரணமாக கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் -

மறுநாள் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது பெற்றோரும் தனது மனைவி, 2 பிள்ளைகள் ஆகியோரும் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துவிட்டனர் என்றும் -

அருந்தவபாலன் என்ற சகோதரனும், தவயோகம் என்ற சகோதரியும் இச்சம்பவத்தில் தப்பியுள்ளனர் என்று தான் கேள்விப்பட்டார் என்றும் - அவர் கூறினார்.

தனித்துவிடப்பட்ட தான் தற்போது அவர்களைச் சந்திக்கவேண்டுமெனவும் விரும்புகிறார் என்று கூறிய குகதாஸன் யாழ். மருத்துவமனையில் 9ஆம் வார்ட்டில் சிகிச்சைபெற்று வருகிறார். (ஒ-15)

# அடகு நகை மீட்கச்சென்ற குடும்பஸ்தரை வழிமறித்து மயக்கிப் பணம் கொள்ளை!

## பருத்தித்துறை கிராமக்கோட்டடியில் சம்பவம்

அடகுவைத்த நகைகளை மீட்டெடுப்பதற்காகப் பெருந்தொகைப் பணத்துடன் சென்ற குடும்பஸ்தர் ஒருவரை வழிமறித்த இளைஞர்கள் இருவர் அவரோடு நெருங்கிப் பேசித் தந்திரமாக அவரை மயக்கமுறச் செய்து அவரிடமிருந்து பணத்தை அபகரித் திருக்கின்றனர். அத்துடன் அந்தக் குடும்பஸ்தரைக் காயப்படுத்திப் பற்றைக்குள் வீசியுள்ளனர்.

இந்த வழிப்பறிக் கொள்ளைச் சம்பவம் பருத்தித்துறை கிராமக்கோட்டடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றிருக்கிறது.

சுப்பர்மடத்தைச் சேர்ந்த - மூன்று பிள்ளைகளின் தந்தையான - அருமையா ஜோதீஸ்வரன்(வயது - 32) என்பவருக்கே இக்கதி ஏற்பட்டிருக்கிறது.

கழுத்தில் ஏற்பட்ட காயத்துக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் அவர், தனக்கு நேர்ந்த அனுபவம் குறித்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

அடகு நகைகளை மீட்பதற்காக ஒரு லட்சத்து 35ஆயிரம் ரூபா பணத்துடன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தேன். அப்போது கிராமக்கோட்டடிச் சந்தி அருகில் வைத்து இருவர் என்னை வழிமறித்தனர். அப்போது நேரம் மாலை 5 மணி இருக்கும் முதலில் நட்புறவுடன் பேசி குடும்ப விவரங்களை விசாரித்தனர். தொடர்ந்தும் அவர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது 'ரொபி'களைப் பரிமாறி தாங்களும் அதனை ருசித்தனர். ரொபியை உட்கொண்ட பின்னர் எனக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. பிறகு எனக்கு நினைவு திரும்பியபோது இரவு 10 மணியாகி இருந்தது. சுப்பர்மடத்தில் எனது வீட்டுக்கு சமீபமாக ஒரு பற்றைக்குள் கிடப்பது தெரிந்தது. கழுத்தில் ஏற்பட்ட காயத்திலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நடக்கமுடியாமல் இருந்தது. ஒருவாறு தள்ளாடித் தள்ளாடி நடந்தேன். நான் வைத்திருந்த ரொக்கப் பணத்துக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. ஒருவாறு வீட்டுக்குச் சென்று அங்கிருந்தோரின் உதவியுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டேன்.

- இவ்வாறு அவர் தனக்கு நேர்ந்த கதியை உதயனுக்கு வெளியிட்டார்

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலீஸார் விசாரணை நடத்துகின்றனர். (ஜ-70)

# பொதுசன உதவிப்பணம் பெறுவோரின் விவரங்கள் சண்டிலிப்பாயில் மீளாய்வு!

வலி.தென்மேற்கு,ஜூன்21

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் இதுவரை பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் மீளாய்வு செய்யப்படாமல் இருக்கும் பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளில் இம்மாத இறுதியில் மீளாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

மாதகல் மேற்கு, மாதகல் கிழக்கு, மாதகல் தெற்கு, மாரீசன்கூடல், முள்ளானை, இளவாலை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த மீளாய்வு இம்மாதம் 23ஆம் திகதிமுதல் மேற்கொள்ளப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் வே. அருந்தவராசா இந்த மீளாய்வை மேற்கொள்வார். அறிவிக்கப்பட்ட தினங்களில் பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவை பெற்று வருபவர்கள் சமுகம் தந்து மீளாய்வை சுமுகமான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-135)

### நாளை

ஆனி 08
புதன்கிழமை
22.06.2005
*திதி* : பூரணை
முற்பகல் 10.23 வரை
*நட்சத்திரம்* : மூலம்
முன்னிரவு 9.25 வரை
*சுபநேரம்* : 4.24 - 5.54
*ராகுகாலம்* : 11.54 - 1.24
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உயிர் வாழ உபயோகமாகும் தண்ணீர் சில சந்தர்ப்பங்களில் உயிரையே குடித்துவிடுகின்றது.

அண்ணா.

## மேலதிக மாவட்டச் செயலராக செந்தில்நந்தனன் நியமனம்


ஆழிப்பேரலை மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக மேலதிக மாவட்ட செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பிரதேச செயலகங்களில் பிரதேச செயலராகக் கடமையாற்றிய பா.செந்தில்நந்தனன் மேலதிக மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று யாழ். செயலகத்தில் சம்பிரதாயபூர்வமாக அவரிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி சம்பிரதாயபூர்வமாக அவரிடம் பொறுப்புக்களை ஒப்படைத்தார்.

இவர் மேற்படி பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதோடு, கோப்பாய் பிரதேச செயலராகவும் கடமையாற்றவுள்ளார்.

இதேவேளை, நெடுந்தீவு உதவி அரச அதிபரான ஆ.பற்றிக் டிறஞ்சன் தனது கடமைக்கு மேலதிகமாக யாழ்.பிரதேச செயலரின் பொறுப்புக்களையும் ஏற்றுப் பணியாற்றுவார் என்று யாழ்.மாவட்ட மேலதிக அரசஅதிபர் தெரிவித்தார்.(எ-202-204)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Sharp புறொஜெக்ரர் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.சிறீ, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு (கல்வாரி தேவாலயத்துக்கு அருகில்), கொக்குவில். (36681)

வளர்ப்பு மீன், கண்ணாடித் தொட்டி அதற்கான பொருள்கள் விற்கப்படும். தொடர்பு: Mr.குமார், சௌந்தலை கடை அருகில், ஓடக்கரை, பருத்தித்துறை. (சி-43564)

## கார் விற்பனைக்கு

13 Sri xxxx தொடரிலக்கமுடைய Lancer Box Model வெள்ளை நிறக் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 0773 148791. (36716)

## காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கு, புதிய ஸ்ரேசனுக்கு அருகில (குளத்தடி) 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 0776245156. (நேரம் மாலை 6 மணிக்குப் பின்) (36746)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.06.2005 திங்கட்கிழமை பிற்பகல் தொடக்கம் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம்-தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர் ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (36569)

தரமான நம்ப-1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 22-06-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, P.ரவி - சாவகச்சேரி, றாதா - மாவடி, வட்டுக்கோட்டை, ஸ்ரீராம் - பருத்தித்துறை, பஸ்நிலையம் முன்பாக, றஞ்சித் - 517, ஸ்ரான்லி வீதி, கௌரி ஸ்ரோர்ஸ், பண்டத்தரிப்பு, தாரகை - முதலாம் கட்டை, பருத்தித்துறை. T.P.: 222 3529 (36711)

## வீடு வாடகைக்கு

வோல்ட்டன் இடம், தும்பளை - பருத்தித்துறையில் விசாலமான காணியில் அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு (அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது). தொடர்புகளுக்கு: T.P.: 0773107578. மின் அஞ்சல்: jab-srilanka@hotmail.com (36703)

## வீடு விற்பனைக்கு

உடுவில் தெற்கு, புளியடி வைரவர் கோயில வடக்கு வீதியிலுள்ள ஒழுங்கையில் பயன்தரு மரங்களுடன் 5 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.செல்லத்துரை, தோப்பு, அச்சுவேலி.
T.P.: 077 6160275 (36761)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1967இல் பிறந்த, அவிட்டம் 3ஆம் பாதம், 20 வருடங்களாக ஆசிரியத் தொழில்புரியும் மணமகளுக்கு அரச அல்லது வியாபாரம் பார்க்கும் மணமகன் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். விவரங்களுக்குத் தொடர்பு 077 6110071. (36748)

## மணமகள் தேவை

இநது, 1976இல் பிறந்த, கிரகபூவ சங்கிகை 47, புநர்பூசம் 2ஆம் பாதம், நட்புப்பெற்ற 2இல் செவ்வாய் உள்ள, சாரதியாகப் பணிபுரிபவருக்கு வெளிநாடுகளில் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: 'ஆனந்தி திருமண சேவை' இல.01, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்(36762)

## MATHS PERSONAL CLASSES

தரம் 8 முதல் O/L வரையான மாணவர்களுக்கு தனியாகவோ அல்லது குழுவாகவோ வீடுகளுக்கு வந்து அதிக பயிற்சிகளுடன் (Model Paper, Pass Paper) அவரவர் தரத்திற்கு ஏற்ப இலகுவான முறையில் சிறந்த பெறுபேற்றைப் பெறும் வகையில் கற்பிக்கப்படும்.

தொடர்புக்கு:
T.P. No: 077 6176776
(36780) (21-11-34)

## புற்றுநோய் சிகிச்சை நோயாளர் எண்ணிக்கை உயர்வு

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் நோயாளர்களுக்கான 'எக்ஸ் கதிர்' பரிசோதனை இம்மாதம் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு சிகிச்சைகாகச் செல்லும் புற்றுநோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக யாழ்பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆகேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஆரம்ப தினத்தில் 30 நோயாளர்களுக்கே சிசிக்சை வழங்கப்பட்டது ஆனால், தற்போது முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பகுதிகளிலிருந்தும் புற்றுநோயாளர்கள் இங்கு சிகிச்சை பெறவந்துள்ள காரணமாக தற்போது சுமார் 40 பேர் வரை சிகிச்சையைப்பெற்று வருகிறார்கள எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-51)

# சேருநுவர தாக்குதல்களின் பின்னணியில் இருந்த படையினர் மீது நடவடிக்கை தேவை

## திருமலைத் தமிழ்மக்கள் பேரவை வலியுறுத்து

திருகோணமலை,ஜூன் 21

திருகோணமலை சேருநுவர பகுதியில் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் பின்னணியில் இருந்த படையினரை இனங்கண்டு அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளது திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவை. அண்மைய அசம்பாவிதங்கள் குறித்து அது அறிக்கை ஒன்றை விடுத்தது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மூதூர் சேருநுவரப் பிரதேசத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தின் பின் திட்டமிட்ட அடிபபடையில் தமிழ்மக்கள் மீது தாக்குதலும் வன செயலும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. தமிழ மக்களுக்குச் சொந்தமான வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன. இச்செயலின் பின்னணியில் ஸ்ரீலங்கா காவற்படையினர் இருந்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலத்தில் நடைபெற்றதைப் போன்று, பழிவாங்கும் வகையில் அப்பாவித் தமிழ்மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தியும் வாகனங்களை எரித்தும் கொலைப் பயமுறுத்தல் விடுத்தும் உள்ளனர். இவ்வாறான செயல்கள் மீண்டும் அரங்கேற்றப்பட்டுள்ளமையானது. சமாதானத்தை அறவே இல்லாதொழிக்கும் செயலாகும்.

இச்செயல்கள் பாதுகாப்புப் படையினரின் பூரண ஒத்துழைப்புடனேயே நடத்தப்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். தமிழ்மக்கள் மீதான இத்தகைய காட்டுமிரண்டித்தனங்களே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குக் காரணமாக அமைந்தன எனபதை மறந்தவிட வேண்டாம்.

மூதூர் பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழ்மக்கள் கடந்தகால இன அழிப்பு நடவடிக்கைகளால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு தங்கள் சொத்துக்களையும் உயிர்களையும் இழந்துள்ளனர். தற்போதுதான் சமாதான காலத்தில் அவர்கள் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றனர். எனினும், ஆழிப் பேரலை அனர்த்தத்தால் முற்றாகப் பாதிக்கப்பட்டு தங்கள் இயல்பு வாழ்க்கையை இழந்து நிற்கின்றனர்.

இந்நிலையில் மூதூர் பிரதேச தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள காடைத்தனம் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இதற்குப் பின்னணியில் உள்ள பாதுகாப்புப் படையினரை இனங்கண்டு அவர்களுக்கெதிராக உடனடி நடவடிக்கை எடுத்து இவ்வாறான செயல்கள் இனிமேல் தொடர அனுமதிக்கக்கூடாதென ஸ்ரீ லங்கா அரசையும் பாதுகாப்பு அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழர்கள் மீதான தாக்குதல் தமிழ்மக்களை அச்சுறுத்துகின்ற ஒரு செயலாக இருக்குமென நினைத்தால் இதன் விளைவு எதிர்காலத்தில் சமாதானத்தைப் பூரணமாக இல்லாதொழித்து நாட்டை மீண்டுமொரு யுத்தத்திற்குக் கொண்டு செல்லுமென எச்சரிக்கின்றோம் - என்றுள்ளது.

## ஜே. வி. பி. வெளியேறியதால்

# ஆளும் கூட்டமைப்பின் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாகத் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்21

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தவிசாளர் பதவி வெற்றிடமாகவுள்ளமை குறித்து தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னணியின பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்தவைப் பணித்திருக்கிறார்.

அதேசமயம் சுதந்திரக் கூட்டமைப்புக்கு புதிய தவிசாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அதற்காகக் கூட்டமைப்பின் மத்திய குழு மற்றும் நிறைவேற்றுக்குழு என்பவற்றைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி மேலும் பணிப்புரை விடுத்திருக்கிறார்.

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விலகியதையடுத்து, இந்தப் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டது. முன்னதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்க இந்தப் பதவியை வகித்து வந்தார்.

இதுதொடர்பில் உதயனுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, இதுதொடர்பிலான நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டு வருகிறார் எனக் குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து ஆளுங்கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தியபின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (எ-க)

## சங்கக் கிளைக்கு அடிக்கல்

வரணி,ஜூன்21

வரணி கரம்பைக் குறிச்சி கூட்டுறவுச் சங்கக் கிளைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இந்தப் பணிகளுக்கென 5 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. (70)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண் மகிழ்ந்திட 14 - 08 - 1976



கண் கலங்கிட 23 - 06 - 2002

அமரர் மகேஸ்வரன் மங்களேஸ்வரன்
(யாழ். பல்கலைக்கழக வணிக பீட மூன்றாம் வருட மாணவன்)
திதி: 21-06-2005

இன்முகம் காட்டி
இனியமொழி பேசி
வைகறைக் குயிலென
வையகத்தே வாழ்ந்தாயடா!
காலங்கள் புரண்டோடினாலும்
கண்ணீர் அலை ஓயவில்லை
உயிரே வா
உறவுகள் அழைக்கின்றோம்!

- உன் நினைவால் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பிமார்.

சூராவத்தை, சுன்னாகம்.
(36759) (21-11-34)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 05 - 01 - 1948



ஆண்டவன் அடியில் 01 - 07 - 2004

அமரர் சோமலிங்கம் கணேசலிங்கம்
(ஓய்வுபெற்ற யாழ்.-கிளிநொச்சி கட்டட நிர்மாணத் திணைக்கள பிரதம லிகிதர்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகரை வேண்டுகின்றோம்

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

காளி கோயிலடி, குப்பிளான் வடக்கு, ஏழாலை.
(36752)(21-11-34)


யாழ்.மக்களின் அமோக ஆதரவுடன்

## நல்லூரில் தொடர்மாடி வீடுகள்

### உத்தியோகத்தர்கள் குடியிருப்புக்கள்


★ "வீடு" என்ற சொல்லுக்கே குறைந்தது 70இலட்சம் தேவைப்படும் இக்காலகட்டத்தில் ----


★ வெறுங்காணிகளே விற்பனைக்கில்லாத நல்லூர்ப் பிரதேசத்தில் ----

★ வெறும் 28 இலட்சத்துடன் 950 - 1000 சதுர அடி கொண்ட, Tiles பதிக்கப்பட்ட,வாகனத்தரிப்பிடங்கள் கொண்ட தனித்தனி மின்சார, தண்ணீர் வசதி கொண்ட, ஆலயத்தை அண்மித்த ரம்மியமான சூழலில் அழகிய அளவானவீடு ஒன்று உங்களிற்காகக் காத்திருக்கின்றது.

★ உறுதியான உறுதிப்பத்திரங்கள் வழங்குகின்றோம்.

உத்தேச வரைபடம்





☞ எதிர்வரும் (22/06/2005) புதன்கிழமையன்று வாங்குபவர்களை இறுதியாகத் தீர்மானிக்கவுள்ளோம். அதன்பின்னர் எவ்வித விசாரணைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தயா ஏஜென்சி
இல. 3, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.
★ இரவு 7 மணிக்குப்பின் 0777 - 283795தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்.
(C/43412)(53)

# சனிப் பெயர்ச்சிப் பலன்கள்

சோதிட சாஸ்திரத்தின்படி சனி, ராகு கேது, குரு ஆகிய கிரகங்கள் தான் ஒரு ராசியில் அதிக நாள்கள் இருக்கின்றன. எனவேதான் இந்தக் கிரகங்களின் பெயர்ச்சி மட்டும் மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

எதிர்வரும் 24 ஆம் திகதி சனிப் பெயர்ச்சி நிகழ்கிறது. சனீஸ்வரன் மிதுன ராசியிலிருந்து கடக ராசிக்கு இடமாறுகிறார்.

(20.06.2005 ஆம் திகதி தொடக்கம் நாளாந்தம் இரண்டு ராசிகளுக்கான பலன்கள் வெளியாகி வருகின்றன)

## சிங்கம்

உங்களின் ராசிக்குப் பதினோராம் இடமாகிய லாபத்தில் சஞ்சரித்த சனி பகவான், வருகிற 26.5.2005 அன்று தங்கள் வாழ்க்கையில் ஏழரை சனியைத் தொடங்குகிறார். 12ஆம் இடமாகிய கடக ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் உங்களது முன்னேற்றத்தில் தடைகளை ஏற்படுத்துவார். ஆகவே, எதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதேசமயம் இந்த செப்ரெம்பர் மாதம்வரை குருபகவான் வலுவாக சஞ்சரிப்பதால் குடும்பத்தில் திருமணம், பிள்ளைப்பேறு போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும்.

ஆனால் ராகு, கேது 2, 8இல் சஞ்சரிப்பது சிறப்பு இல்லை. மேலும் செப்ரெம்பர் மாதத்திற்குப் பிறகு முக்கிய கிரகங்கள் வலுவற்ற நிலையில் சஞ்சரிப்பதும் நன்மை பயக்காது. ஆனால், மற்ற கிரகங்களின் சஞ்சாரத்தினாலும், உங்களது ஜனன ஜாதகத்தின் வலுவாலும், நீங்கள் செய்யும் இறை வழிபாட்டாலும், மக்கள் தொண்டாலும் நல்ல பலன்களைப் பெறுவீர்கள். மேலும் இரண்டாவது சுற்று நடப்பவர்களுக்கு சனி பகவான் பொங்கு சனியாகவே இருந்து நலம் பெறச் செய்வார். முதல் சுற்று நடப்பவர்கள் மட்டுமே சற்று தெய்வபலத்தைக் கூட்டிக்கொள்ள வேண்டும்.

உத்யோகத்தர்கள் அதிகமாக உழைத்துப் பொருள் ஈட்ட வேண்டிய நேரம் இது. அவ்வப்போது மேலதிகாரிகளின் தொந்தரவுகளுக்கு ஆளாவீர்கள். கொடுக்கப்பட்ட வேலையை நீங்கள் கவனமாகச் செய்து வந்தால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். மேலும் சிலருக்கு வருடாந்த ஊதிய உயர்வு கிடைப்பதில் தாமதம் ஏற்படும். அதேசமயம் குருவின் பலத்தினால் நிச்சயம் பெரிதாக எந்த இழப்பும் ஏற்படாது. சக ஊழியர்களின் ஆதரவு இருப்பதால் உங்களின் மனச்சுமையை அவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

வியாபாரிகளைப் பொறுத்தவரை தற்போது செய்துவரும் வியாபாரத்தைச் சிறப்பாக நடத்தினாலே போதும் என்கிற நிலையில்தான் இந்த ஏழரைச் சனி தொடங்குகிறது. நண்பர்களை நம்பிப் பெரிதாக எந்த முடிவையும் எடுக்க வேண்டாம். அரசால் தாங்கள் சில தொல்லைகளுக்கு ஆளாவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அதனால், வரவு, செலவு கணக்குகளைச் சரியாக எழுதி வைத்துக்கொள்ளவும். கையிலிருக்கும் பணத்தை எடுத்து புதிய முதலீடுகள் ஏதும் செய்யவேண்டாம். வருங்காலத்திற்கு உதவும் வகையில் பணத்தைச் சேமித்து வையுங்கள்.

இந்த ராசி விவசாயிகள், செலவுகளைக் குறைத்து வரவுகளைப் பெருக்கிக் கொள்ளவும். ஏனெனில், விளைச்சல் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. அத்தோடு கொள்முதல் வியாபாரமும் மந்தமாகவே இருக்கும். அதேநேரம் கால்நடைகள் மூலம் சிறிது நன்மைகள் ஏற்படும். அதனால் கால்நடைகளை நன்றாகப் பராமரிக்கவும் மற்றபடி புதிய முதலீடுகள் ஏதும் செய்யவேண்டாம். குறித்த நேரத்தில் பூச்சி மருந்துகளைத் தெளித்து விளைச்சலைக் காப்பாற்றிக் கொள்ளவும்.

அரசியல்வாதிகள், எதையும் அவசரப்பட்டு பேசியோ, செய்தோ வீண் விவகாரங்களில் மாட்டிக் கொள்ள வேண்டாம். பெரியவர்களை அனுசரித்துச் செல்வது, பல விதங்களிலும் நலம் பயக்கும். மற்றபடி பெரிய பதவிகள் உங்களைத் திடீரென்று தேடி வந்தாலும் அவற்றில் வெகு நாள்கள் தாக்குப் பிடிக்க முடியாது.

கலைத்துறையினர் குருபகவானின் அனுக்கிரகத்தால் செப்ரெம்பர் மாதம் வரை நல்ல பலனை அடைவார்கள். அதேநேரம், இது ஏழரைச் சனியின் தொடக்க காலம் என்பதால் நன்கு பரிசீலித்த பிறகே புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும். ஏனென்றால், ஏதாவதொரு சரத்து, உங்களை இடையூறுகளில் சிக்கவைக்கலாம். ஆகவே, எச்சரிக்கையுடன் இருக்கவும். அதேநேரம் கடுமையாக முயற்சி செய்தால் வெற்றி உங்களைத் தேடிவரும்.

பெண்மணிகள் கணவனிடம் கொண்டுள்ள நெருக்கத்தில் விரிசல் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் எதிலும் விட்டுக் கொடுத்து செயல்படவும். சிறிய அளவிலான சச்சரவுகளைப் பெரிதுபடுத்தி மனக்கஷ்டத்திற்கு ஆளாக வேண்டாம். பணப்புழக்கம் குறைவாக இருக்கும் என்பதால் சிக்கனத்தை மேற்கொள்ளவும். குருட்டு அதிஷ்டங்களை எதிர்பார்க்காமல் பொதுவாக எந்த வேலையையும் நன்கு ஆலோசித்த பிறகே செயல்படுத்தவும்.

மாணவமணிகள் அதிக சிரத்தை எடுத்துப் படித்தால்தான் வெற்றியடைய முடியும். ஆகவே, எல்லாப் பாடங்களையும் படித்துவிட்டுத் தேர்வுக்குச் செல்லுங்கள். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துங்கள்.

பரிகாரம்: துர்க்கை வழிபாட்டிலும், குல தெய்வ வழிபாட்டிலும், ப்ரதோஷ வழிபாட்டிலும் ஈடுபடுவது நலம் தரும்.

## கன்னி

கன்னி ராசி வாசகர்களுக்கு, லாபஸ்தானமான 11ஆம் வீட்டில் சனிபகவான் பெயர்ச்சியாகி சஞ்சரிக்கும் 26.5.2005 முதல் 16.7.2007 வரையிலான காலகட்டம் ஒரு அற்புதமான அமைப்பு என்றால் அது மிகையாகாது.

லாபஸ்தானத்தில் சனிபகவான் சஞ்சரிப்பதால் உங்கள் வாழ்வில் இன்பகரமான மாற்றங்களும், எதிர்பாராத திடீர் திருப்பங்களும் உண்டாகும். நீங்கள் எந்த விவகாரங்களை நினைத்து கலங்கிக் கொண்டிருந்தீர்களோ, அவையெல்லாம் கதிரவனைக் கண்ட பனிபோலக் கரைந்து நீராகிவிடும். உங்கள் மனப்பாரங்கள் நீங்கி ஒரு புத்துணர்ச்சி ஏற்படும். எல்லாக் காரியங்களையும் ஆர்வத்துடன் செய்து முடிப்பதற்கான உற்சாகம் பிறக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு இது சாதகமான பெயர்ச்சி. மேலதிகாரிகள் திடீரென்று பாராட்டு மழை பொழிந்து உங்களைத் திக்குமுக்காட வைத்துவிடுவார்கள். ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பதவிஉயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும். நண்பர்களுடன் நெருக்கம் அதிகமாகும். அவர்களிடம் நீங்கள் கொடுத்திருந்த கடன், வட்டியுடன் வசூலாகும். நெடுநாள்களாகச் செல்லத் திட்டமிட்டிருந்த சுற்றுலாத் தலத்திற்கு மனைவி, குழந்தைகளுடன் சென்று வருவீர்கள்.

வியாபாரிகளுக்குக் கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சுமுகமாக முடியும். கமிஷன், ஏஜென்ஸி துறைகள் மூலம் லாபம் அதிகரிக்கும். தங்களின் பொருள்களைக் கடனுக்குக் கொடுத்து கொள்முதலை அதிகரித்துக் [illegible]ளலாம். ஏனெனில், கொடுக்கின[illegible]ன்களும், வராக்கடன் என்று நினைத்தவைகளும் வசூலாகும் காலம் இது!

விவசாயிகளுக்கு விளைச்சல் பெருகும். விற்று, கொள்முதல் அதிகரிக்கும். லாபத்தைச் சேமித்து வருங்காலம் வளமாக அமைவதற்கு அடித்தளம் போடுவீர்கள். கால்நடை, கோழி மற்றும் முட்டை வியாபாரம் செய்பவர்கள் நாலு கால் பாய்ச்சலில் முன்னேறுவார்கள். பலவிதமான விளை பொருள்களைப் பயிர் செய்வீர்கள். அதனால் இந்த இரண்டரை ஆண்டுகளில் எதிர்காலத்திற்குத் தேவையான வலுவான அஸ்திவாரத்தைப் போடுவீர்கள்.

அரசியல்வாதிகளுக்கு இது திருப்திகரமான பெயர்ச்சி. உங்களின் சுய ஜாதகமும் பலம் பெற்று இருக்கும் பட்சத்தில் எட்டாக்கனியாக இருக்கும் அமைச்சர் போன்ற பதவிகள், பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் கிடைக்கும். சுய ஜாதகம் சற்று பலம் குறைந்திருப்பவர்களுக்கும் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனிபகவான் நன்மை கூட்டுவார். மக்களின் ஆதரவு உங்களுக்கு எதிர்பாராத அளவு கிடைக்கும்.

கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும். ரசிகர்களின் ஆதரவுடன் பல கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். செல்வமும் புகழும் சேரும். பல கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களைச் செய்வார்கள்.

பெண்மணிகளுக்கு இது சிறப்பான பெயர்ச்சி. சனி பகவான் லாபஸ்தானத்தில் உலவும் காலகட்டத்தில் உங்கள் கணவரின் உடல் நலம் சீரடையும். அவ்வப்போது தலைகாட்டிய இடை யூறுகள் நீங்கும். 'சிடுசிடு' என்று இது நாள் வரை இருந்து வந்த கணவர், இனி உங்களிடம் இனிக்க இனிக்கப் பேசுவார்.

பிள்ளைகள் திடீரென்று சொல் பேச்சுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுடன் படிப்பிலும் மிகுந்த ஈடுபாடு காட்டுவர்.

மாணவமணிகளுக்கு இது சாதகமான பெயர்ச்சி. தேர்வு எழுதி முடித்து விட்டு ரிசல்ட்டுக்காகக் காத்திருக்கும் மாணவர்கள், எதிர்பார்த்த மதிப்பெண்களை அள்ளுவார்கள். அதன்மூலம் பிரகாசமான எதிர்காலத்தை அமைத்துக் கொள்வார்கள்.

பரிகாரம்: விஷ்ணு வழிபாட்டிலும், குலதெய்வ வழிபாட்டிலும் ஈடுபடுங்கள்.

(வளரும்)

# 'அஸ்ரா' கிண்ண கிரிக்கெட்; யாழ்.இந்து அணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூன்21

'அஸ்ரா' கிண்ணத்திற்கான அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கு இடையில் 15 வயதுப்பிரிவினருக்காக - நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது.

நிவேஜீதன் 66 ஓட்டங்களையும் சுதாகரன் 61 ஓட்டங்களையும் டிலான் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

கண்ராஜ் 10 ஓவர் பந்து வீசி 42 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டையும் இனோயன் 14 ஓவர் பந்துவீசி 41 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியினர் சகல விக்கெட்டையும் இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

இனோயன் ஆட்டம் இழக்காமல் 49 ஓட்டங்களையும் கண்ராஜ் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்.இந்துக் கல்லூரி அணிவீரர் உமாதரன் 4 ஓவர் பந்துவீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டையும் பிரியதர்சன 5ஓவர் பந்துவீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டையும் கௌரிநாத் 5 ஓவர் பந்து வீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டையும் பாவசுதன் ஒரு ஓவர் பந்துவீசி ஒரு ஓட்டத்தைக் கொடுத்து 2 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

யாழ்.இந்துக் கல்லூரி அணியினர் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியினை இரண்டாம் இன்னிங்ஸுக்காக மீண்டும் துடுப்பாடப் பணித்தது. கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது.

பிரபுராஜ் 23 ஓட்டங்களையும் இனோயன் 31 ஓட்டங்களையும் மனோஸ் 15 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

யாழ்.இந்துக் கல்லூரி அணிவீரர் பாவசுதன் 2.3 ஓவர் பந்துவீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டையும் கௌரிநாத் 3 ஓவர் பந்துவீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டையும் பிரியதர்சன் 4 ஓவர் பந்துவீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டையும் வீழ்த்தினர். (3-190)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்21

'அஸ்ரா' கிண்ணத்திற்கான அகில இலங்கை ரீதியில் பாடசாலை அணிகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

'ஏ'பிரிவு

★ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலம்.
(உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் மைதானம்),

★ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் விக்ரோறியாக் கல்லூரி (ஸ்கந்தா மைதானம்),

★ யூனியன் கல்லூரி எதிர் பெரியபுலம் மகாவித்தியாலயம் (யூனியன் மைதானம்),

'பி' பிரிவு

★ சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் சென். ஜோன்ஸ் கல்லூரி,
(சென்.பற்றிக்ஸ் மைதானம்),

★ ஹாட்லிக் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி,
(ஹாட்லி மைதானம்).

'சி' பிரிவு

★ மகாஜனா கல்லூரி எதிர் யாழ்.இந்துக் கல்லூரி,
(மகாஜனா மைதானம்),

★ யாழ்.மத்திய கல்லூரி எதிர் கனகரத்தினம் மத்திய ம.வி,
(யாழ்.மத்திய கல்லூரி மைதானம்),

★ கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் விக்னேஸ்வராக் கல்லூரி,
(கொக்குவில் இந்து மைதானம்).

(3-190)

## விளையாட்டு

# முகமது அஷ்ரபுல்லின் அசத்தலான கன்னிச் சதத்தால் ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது பங்களாதேஷ்

முகமது அஷ்ரபுல் அசத்தலாக கன்னிச் சதம் அடிக்க நாட்வெஸ்ட் முத்தரப்புத் தொடரில் உலகச் சம்பியன் ஆஸ்திரேலியாவை 5 விக்கெட்டுக்களால் பங்களாதேஷ் வீழ்த்தியது.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பங்களாதேஷ் ஆகிய அணிகள் பங்கேற்கும் நாட்வெஸ்ட் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் சோபியா கார்டன்சில் கடந்த சனிக்கிழமை நடந்த ஒரு ஆட்டத்தில் பங்களாதேஷ் - ஆஸ்திரேலியா அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆட்டத்தின் தொடக்கமே இந்த அணிக்குச் சோகமாக இருந்தது. கில்கிறிஸ்ட் ஓட்டம் எதுவும் பெறாத நிலையிலும், பொன்ரிங் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். ஒரு கட்டத்தல 57 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து ஆஸ்திரேலியா திணறியது.

எனினும, 4ஆவது விக்கெட்டுககாக ஜோடி சேர்ந்த மார்ட்டின், கிளார்க் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். மார்ட்டின் 77 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவர் வெளியேறிய சிறிது நேரத்தில் கிளார்க் 54 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

கடைசிக் கட்டத்தில் கெட்டிச் (ஆட்டமிழக்காமல் 36), ஹஸி (ஆட்டமிழக்காமல் 31) விரைவாக ஓட்டங்களைக் குவிக்க 50 ஓவர்களின் முடிவில் ஆஸ்திரேலியா 5 விக்கெட்டுகளை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது.

வெற்றி இலக்காக 250 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் பதிலளித்தாடிய பங்களாதேஷ் இக்பால் (08), ஓமர் (19), இம்ரான் (24) ஆகிய தொடக்க வரிசை விக்கெட்டுக்களை விரைவாக இழந்தது. இந்நிலையில் 4ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த அஷ்ரபுல், அணித்தலைவர் பஷார் ஆகிய இருவரும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

பஷார் 47 ஓட்டங்களில் 'ரன் அவுட்' ஆனார். மறுபுறம் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அஷ்ரபுல் 11 பவுண்டரிகள் அடங்கலாகத் தனது கன்னிச் சதத்தை அடித்தார். சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட்டில் பங்களாதேஷ் வீரர் ஒருவர் சதம் அடிப்பதும் இதுவே முதற் தடவையாகும். சதமடித்த அடுத்த பந்தில் இவர் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த அவ்தாப் அஹமது, முகமது ரபீக் விரைவாக ஓட்டங்களைக் குவிக்க, ஒரு ஓவரில் 7 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற விறுவிறுப்பான நிலையை ஆட்டம் எட்டியது. கைவசம் 5 விக்கெட்டுக்கள் அந்த அணியிடம் இருந்தன.

கடைசி ஓவரில் கிலெஸ்பி பந்து வீசினார். அவ்தாப் அஹமது துடுப்பெடுத்தாடினார்.

முதல் பந்து அவ்தாப்பின் அதிரடித் தாக்குதலில் சிக்ஸருக்குப் பறக்க இரு அணிகளது ஓட்ட எண்ணிக்கையும் சமனானது. 2ஆவது பந்தில் ஓர் ஓட்டத்தை அவர் அடிக்க 5 விககெட்டுக்களால் அபார வெற்றியடைந்தது பங்களாதேஷ்.

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அஷ்ரபுல் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.(க-3)



சிவமயம்

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் துணை

# யாழ். கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான

# தேர்த்திருவிழாச் சிறப்புமலர் 21-06-2005

## ஆதீன முதல்வரின் அருளாசி

கட்டப்பிராய் பிரதேசத்தில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் முத்துமாரி அம்பிகை இன்று தேரேறி அனைவருக்கும் அருள்புரிவது மகிழ்ச்சியைத் தருகின்றது. அண்ட சராசரங்களுக்கும் தாயாக விளங்கும் அம்பிகை இந்த ஆலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு முத்துமாரி அம்பிகையாக எழுந்தருளி உள்ளார். ஆலயத்தில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சி தேர்த்திருவிழாவாகும்.

ஆன்மாக்களைப் பற்றி இருக்கும் மாயை என்னும் இருளை நீக்கி மெய்ஞ்ஞானம் எனும் ஒளியை வெளிப்படுத்துவதே தேர்த்திருவிழாவாகும். இதனை அனைவரும் தரிசிப்பதன் மூலமாக அறியாமை எனும் இருள் நம்மை விட்டு அகலுகின்றது. தேரினுடைய தத்துவம் இவ்வுலக மறுவுலக வாழ்வை நமக்கு உணர்த்துவதாகும். இதனாலே தேர்த்திருவிழா முக்கியத்துவம் பெறுகின்றது. இங்கு எழுந்தருளி இருக்கும் அம்பிகையை இன்று அனைவரும் வழிபாடுசெய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக. இன்று தேரேறும் அன்னையின் அருளில் நாட்டில் அமைதியும் சாந்தியும் சமாதானமும் நிலைத்து நிற்க அனைவரும் பிரார்த்திப்போமாக.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

**இரண்டாவது குரு மஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

## அருள் சுரக்கும் அன்னை

கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் இரதோற்சவ விழாவிற்கு வாழ்த்துச் செய்தி அளிப்பதானது அம்மன் எனக்களித்த பாக்கியம் எனக்கருதுகின்றேன். நயினை நாகபூஷணி அம்மனுடன் கொடியேறி, அவள் தேர் பவனி வரும் பொழுதே கட்டப்பிராய் அம்மனும் தேர் பவனி வருகிறாள். எமது கிராமத்தினதும், அயல் கிராமத்தினதும் மக்களின் வாழ்க்கையில் அருள் பாலித்து அவர்களது வாழ்க்கையின் வழிகாட்டியாக, அவர்களது எதிர்காலத்தின் நம்பிக்கையாக, அவர்களது பண்பட்ட வாழ்க்கைக்கு அடிநாதமாக அம்பாள் இருந்து அருள் பாலித்து வருகின்றாள் என்றால் அது மிகையாகாது.

அம்மனின் அருளால் உதயமான எமது கட்டப்பிராய் முத்துமாரி அம்மனின் திருமண மண்டபத்தில் திருவிழாவின் பதினைந்து நாள்களும் அன்னதானம் கொடுக்கின்றோம். என்றால் அது அன்னையின் ஆசீர்வாதமே என பூரணமாக நம்புகின்றோம். எமது திருமண மண்டபமானது, அன்னதானம், திருமணத்திற்கு மாத்திரமல்லாமல் எமது சிறார்களுக்கு அறநெறிக்கல்வியை போதிக்கவும், தமிழ், சைவ பாரம்பரியங்களை போதிக்கவுமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளவிரும்புகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வளர்த்த சைவத்தையும் தமிழையும் தொடர்ந்து வளர்க்க ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் முழு முயற்சிகளையும் மேற்கொள்ளும் என நம்புகின்றேன்.

அம்பாளின் 15 நாள் உற்சவம் மிக விமரிசையாக நடைபெற்றுவரும் நாளில் இன்று நடைபெறும் அம்பாளின் இரதோற்சவத்தில் பங்குபற்றி அம்மனின் அருளையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுச்செல்லும்படி பக்தர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**க. பிரேமச்சந்திரன்,**
**யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.**



**அம்பிகையைச் சரண் அடைந்தால் அதிகவரம் பெறலாம்.**

யாழ்ப்பாணக் குடாநாட்டின் இருபாலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டப்பிராய் கிராமத்தில் அன்னை பராசக்தி முத்துமாரி அம்பாளாக இருந்து அருளாட்சி புரிகின்றாள். கட்டப்பிராய், கல்வியங்காடு, இருபாலைப் பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் அம்பிகையை பக்தி உணர்வோடு வழிபட்டு வருகிறார்கள். அம்பாளுடைய சந்நிதானத்தில் மகோற்சவம் ஆரம்பித்து விட்டால் இப்பிரதேசம் அனைத்தும் புனிதமான சூழலாக மாறிவிடும். முத்துமாரி அம்பாள் சித்திரத்தேரில் ஏறி பவனி வந்து தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அருளினை வாரி வழங்கும் அற்புதமான காட்சி இன்று நடைபெறுகிறது.

கருணையே வடிவமாக இருக்கின்ற அன்னை பராசக்தி தன்னை நாடி வரும் அடியவர்களின் துயரினை நீக்கி அருளினை வழங்குகின்றாள். தாய்த் தெய்வமாக இருக்கின்ற அம்பிகையிடம் அடியவர்கள் அன்னை என்ற உரிமையுடன் தங்கள் குறைபாடுகளை முறையிட்டுத் தீர்வு காண்கிறார்கள். அம்பிகையைத் தியானிப்பவர் தியானிக்கப்படும் அம்பிகையின் சொருபமாகவே மாறிவிடுவார் என்பதை **'தியானத் யாத்துரு தேய ரூபா'** என லலிதா சகஸ்ர நாமம் குறிப்பிடுகின்றது.

மகாகவி காளிதாசர் முதல் மகாகவி பாரதியார் வரை அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமான சக்தி உபாசகர்கள் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். அபிராமிப்பட்டரால் அருளப்பெற்ற **'அபிராமி அந்தாதி'** மிகச் சிறந்த சக்தி தோத்திர நூலாகும். அம்பிகையின் அடியவர்கள் அனைவரும் கசிந்துருகிப் பாடி அம்பாளின் திருவருளைப்பெற வழிகாட்டும் நூலாக அபிராமி அந்தாதி காணப்படுகின்றது. பொருள், கல்வி, தளர்வறியா மனம், தெய்வ வடிவு உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உறவு, வாழ்வில் உயர்வு ஆகிய அனைத்தையும் அம்பிகை தருவாள் என்பதை அபிராமிப்பட்டர் **'தனம் தரும் கல்வி தரும்'** என்ற பாடலின் ஊடாக அபிராமி அந்தாதியிலே குறிப்பிடுகின்றார். செய்யும் **'தொழிலே தெய்வம்'** என்ற நினைப்போடு செயற்படுகின்றவர்களின் அகத்திலே இருந்து அவர்களுக்கு ஊக்க சக்தியாக அம்பிகை திகழ்வாள் என்பதைத் தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம் என்ற பாடலின் ஊடாக மகாகவி பாரதியார் விளக்குகின்றார்.

ஆலயத்திலே நடைபெறும் நைமித்திக் கிரியைகளிலே மகோற்சவம் மிகவும் முக்கியமானது ஆகும். பெருந்திருவிழா என்று அழைக்கப்படுகின்ற மகோற்சவத்திலே தேர்த்திருவிழா மிகவும் சிறப்புடையதாகும். ஆதிபராசக்தியாக விளங்குகின்ற அம்பாள் தேரிலே பவனி வந்து அடியார்களுக்கு அருளினை வாரி வழங்கும் காட்சியினை இன்றைய தேர்த்திருவிழாவிலே காணலாம். ஆண்கள், பெண்கள், இளையவர்கள், முதியவர்கள், சிறுவர்கள் ஆகிய பல தரப்பட்டவர்களும் தேர் வடத்தினைப் பிடித்து இழுக்கின்றார்கள். அம்பிகையின் தேர் வடத்தைப் பிடித்து இழுத்தால் நீண்ட ஆயுளும் நோயற்ற வாழ்வும் கிடைக்கும் என்பது நம்மவர்களின் நம்பிக்கை ஆகும்.

நம்பினார் கெடுவதில்லை, இது நான்கு மறைத்தீர்ப்பு, அம்பிகையைச் சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம். என்ற மணிவார்த்தைகளுக்கு அமைய கட்டப்பிராய் முத்துமாரி அம்பாளின் அடியவர்களாக இருந்து தொண்டு செய்த அனைவரும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு பெற்று ஈழத்திலும் உலக நாடுகளிலும் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாற்பது ஆண்டு காலத்திற்கு மேலாக அம்பாள் ஆலய பரிபாலன சபையின் தலைவராக இருந்து பணியாற்றிய கணபதிப்பிள்ளை ஆசிரியரும் அவருடைய துணைவியாரும் ஒரே நாளில் இறைபதம் எய்திய அற்புதத்தினையும் நாம் அறிவோம். தாயே சரணம் அம்மா என்று அம்பிகையின் பாதங்களைச் சிக்கெனப் பிடித்து வணங்கும் அடியார்களின் துன்பங்கள், துயரங்கள் யாவும் ஆதவனைக் கண்ட பனி போல அகன்று விடும். சக்தியை வணங்குபவர்கள் சகல ஆற்றலும் பெற்ற சக்திமான்களாகத் திகழ்வார்கள்.

**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், உதவிப் பணிப்பாளர்,**
**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், மாவட்ட அலுவலகம், மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

## தீவினைகள் ஓட்டும் தேரோட்டம்

வானாகி, மண்ணாகி, மனியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி உள்ளுக்குள்ளே பிரகாசிக்கும் எங்கள் குலதெய்வமாகிய முத்துமாரி அம்பாளுக்கு இன்றைய தினம் தேரோட்டம் நடைபெற இருப்பதையிட்டு மனநிறைவு அடைகிறேன். 'தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம் தீமைகாட்டி விலக்கிடும் தெய்வம் உய்வம்' என்ற கருத்துடையோர்கள் உயிர்க்கு உயிராகிய தெய்வம் செய்வோம் என்ற துணிவுடையோர்க்கு செம்மைநாடிப் பணிந்திடும் தெய்வம் கைவருந்தி உழைப்பவர் தெய்வம் கடவுளர் தெய்வம் இப்படிப்பட்டவள் எங்கள் அன்னை முத்துமாரி. அன்னை பராசக்தி துஷ்டர்களை அழித்து சிஷ்டர்களை காத்திட இன்று தேரேறி வருகின்றாள்.

தேரானது அக்கினியின் வடிவத்தை ஒத்தது. இதனை உள்ளடக்கி சாந்தியிடும் அங்கியிலே சங்காரம் எனக்கூறப்படுகின்றது. முப்புரங்களையும் அழிப்பதற்கு புறப்பட்டதாய் பூமியை தேராகவும் சூரிய சந்திரரை தேர் சில்லுகளாகவும் நான்கு வேதங்களையும் அதன் இழுக்கும் குதிரைகளாகவும் கொண்டு அதில் அன்னை எழுந்தருளி உலகம் முழுவதும் எனக்குள் அடக்கம் என்பதை உணர்த்துகிறாள். வேதத்திலே இரதத்தைப்பற்றி கூறப்பட்டிருக்கின்றது. தஷத்யோ நகரேப் யச்ச வோ நம ரதேம்யோரதபதிப் யச்ச லோ நம பெருமரங்களை வெட்டிச்சிறுதுண்டகளாக்கித் தருபவன் தச்சன். சிற்ப சாஸ்திர முறைப்படி அவைகளை உருவாக்குபவன் சிற்பாச்சாரி. அவனால் அமைந்த இந்தத் தேர் அதில் வீற்றிருந்து உலாவருபவன் இறைவன். இதனையே இம்மந்திரம் கூறுகின்றது. எனவே, இன்றைய நன்னாளில் அன்னையின் அருள் எல்லோருக்கும் கிடைக்கவும். சகல ஜீவராசிகளும் சகல சர்வ யோகமிக்க பெருவாழ்வு வாழ அன்னையை வேண்டி ஆசி கூறுகிறேன்.

**பிரம்மஸ்ரீ வரத நகுலேஸ்வரக் குருக்கள்**
**ஆலய பிரதம குரு**

## வேரோடு வினை தீர்க்க தேரேறி வரும் தேவியை வேண்டி நிற்போம்

கட்டப்பிராய் முத்துமாரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று சிறப்புடன் நடைபெறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வாலயத்தில் பெரும் தொண்டாற்றி வரும்தொண்டர்களும் பக்தர்களும் சிறப்புடன் வாழ அம்பிகையின் அருளை வேண்டி நிற்கின்றேன்.

கேட்டதற்கும் அதிகமாக கொடுக்கும் சர்வ மங்கள ரூபிணியான அம்பிகையின் அருளால் பல திருப்பணி வேலைகள் ஆலயத்தின் முன்னெடுத்துச் செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு அம்பிகை ஆலயத்தின் தெற்கு வீதியில் பல லட்சம் ரூபா செலவில் மிகக்குறுகிய காலத்துள் நிறுவப்பட்ட கல்யாண மண்டபத் திறப்பு விழா நடைபெற்றது. திருவிழாக் காலத்தில் இம்மண்டபத்தில் தினமும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. கல்யாண மண்டபத்தின் மிகுதிக் கட்டடவேலைகளைப் பூர்த்தி செய்வதிலும், ஆலயத் திருப்பணிகளை முன்னெடுப்பதிலும் அனைத்து அடியார் களின் பங்களிப்பு மிக மிக அவசியமாகும்.

எல்லாம் வல்ல அம்பிகைக்கு ஊரேதிரண்டு பக்தியோடு வடம் பிடித்து, மடை பரவி விழா எடுக்கும் இந்நாளில் தாயின் பாதார விந்தங்களைச் சரணடைவோரின் வாழ்வில் அனைத்து வளங்களும் பெருக வேண்டும் என் பக்தர்களின் பக்திக் கடலிலே தேரேறி மிதந்துவரும் அம்பிகையை இறைஞ்சிப் பிரார்த்திக்கிறேன்.

**கா.தவராசா,**
**தலைவர், ஆலய பரிபாலனசபை.**

## அம்பிகையே உன் பாதம் சரணம் அம்மா!

இன்று இரதமேறிவந்து அருள்பாலிக்கும் கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரியம்பாளே உன் பாதம் தொழுது நிற்கின்றோம் தாயே. எமை ஆட்கொள்ளும் அம்மா நாம் இதய சுத்தியுடன் அவள் பணி தொடருகிறோம். அவளும் அருள்பாலித்துக் கொண்டே இருக்கிறாள். 1982ஆம் ஆண்டு தொடக்கம் தேரேறி வந்து அடியார்களுக்கு அருள் பாலித்து வரும் அன்னை பராசக்தி 1987ஆம் ஆண்டு இடம்பெற்ற நாட்டுக் கலவரத்திலும் கூட தன்னை நம்பி வந்தவர்களை எந்தவிதக் குறையுமின்றி இருப்பிடம் கொடுத்து, உயிர் காப்பாற்றியவள். 1995ஆம் ஆண்டுக் கலவரத்தின் பின் அவளருளால் வெளிநாடு சென்ற அவள் பிள்ளைகளின் அயராத முயற்சியினால் அவளுக்கு ஒரு மஞ்சம் அமைத்து அதில் வீதி உலாவந்து அடியார்களுக்கு அருள்பாலித்து வருகின்றாள். தொடர்ந்து அவளுக்கொரு வசந்தமண்டபம் தம்பி வி.சிவபாலன் அவர்களின் கூடிய பங்களிப்புடனும் மற்றைய அடியார்களின் ஒத்துழைப்புடனும் கட்டப்பட்டது. கல்யாண மண்டபமும் உருவாக்கப்பட்டது. இப்படியாக அவளிற்கு அவள் அருளால் அடியார்கள் பலவித திருப்பணிகளையும் செய்து வருகிறார்கள். இன்னும் பல திருப்பணிகள் செய்யவேண்டி இருக்கிறது. அதையும் செய்ய அவள் அன்பர்கள் பலர் எதிர்பார்த்திருக்கின்றனர்.

அம்மா ஆயிரங்கண் ஆச்சி உன் அருளால் உன் பணி தொடரவும் உன் பிள்ளைகள் சிறப்புற வாழ்வதற்கும் இன்று அருள் பாலியுங்கள் தாயே!

**த.இரத்தினசிங்கம், பொருளாளர்,**
**பரிபாலனசபை, ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்,**
**கட்டப்பிராய்.**

## தேரேறி வந்து அடியார்களின் வினை தீருங்கள் அம்மா!

அன்னை பராசத்தி முத்துமாரியம்பாள் வடிவத்தில் இருந்து கட்டப்பிராய் மக்களுக்கு மட்டுமல்ல அயல் ஊர்களான கல்வியங்காடு, இருபாலை மக்களுக்கும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றாள். கடந்த 08.06.2005 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி கடந்த பதினான்கு நாள்களாக அம்பாள் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலித்து வந்தவள் இன்று இரதமேறி வந்து அடியார்களின் வினை தீர்க்க வருகின்றாள். தேரேறி வரும் தாயே, முத்துமாரியம்மாளே, ஆயிரம் கண் ஆச்சி உன்னை வடம்பிடித்து இழுக்கிறோம் எமக்கு வரம் தாருங்கள் என்ற கோஷத்துடன் தேர் வடம்பிடிக்க பல நூற்றுக்கணக்கான மக்கள் இன்று காலையே கட்டப்பிராயின் ஆலய முன்றிலில் கூடினார்கள். அம்பாளை இதயசுத்தியுடன் வழிபடுபவர்கள் எல்லோருக்கும் அவள் ஒரு குறையும் வைக்கவில்லை. அவளருளால் இன்று உலகின் பல நாடுகளிலும் இருக்கும் அவள் பிள்ளைகளும் உள்நாட்டில் இருக்கும் அவள் அடியார்களும் அவளின் திருப்பணி வேலைகளுக்கும் நித்திய பூசைகளுக்கும் தம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்துகொண்டே இருக்கிறார்கள்.

அண்மையில் கூட அம்பாளின் பிள்ளை கனடாவில் வசிக்கும் திரு. விஜயரட்ணம் சிவபாலன் அவர்களின் பெரு நிதி உதவியினாலும் மற்றைய அடியார்களின் நிதி உதவியினாலும் திரு. சிவசம்புநாதன், திரு. கனகரட்ணம் ஆகிய குடும்பங்கள் காணி அன்பளிப்பு செய்ய ஒரு பிரமாண்டமான கல்யாண மண்டபம் அம்பாளின் தெற்கு வீதியிலே சில மாதங்களிற்குள் தலைநிமிர்ந்து நிற்பதைக்காணும் எந்த அடியார்களின் உள்ளங்களும் புல்லரிக்காமல் இல்லை. அவளின் திருப்பணியானாலும் சரி எமது சொந்த அலுவலானாலும் சரி அவளில் நம்பிக்கை வைத்து ஆரம்பித்தால் அவள் ஒரு போதும் அல்லற்பட வைத்ததில்லை.

என்றும் அவள்பாதம் நினைத்து எக்காரியத்தையும் முன்னெடுப்போம்.

**சி.இலட்சுமிகாந்தன் (கிராம அலுவலர்)**
**செயலாளர், பரிபாலனசபை, ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கட்டப்பிராய்.**


## விழாச் சிறப்புற வாழ்த்துவோர்

தொகுப்பு: பொ. சன்

உன்னத கலை நயம் மிக்க நகைகளை உங்கள் எழில்மிகு கேசத்திற் கேற்ற அதி நவீன மோஸ்தர்களில் தரம் குன்றாமல் அசல் 22 கரட்டில் செய்துகொள்ள
**அசோகா நகை அகம்**
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 6290

அழகிய முறை ல் படம் பிடித்திடவும் வீடியோ எடு திடவும் நாடுங்கள்
**மலரும் மலர்கள்**
டிஜிற்றல் – வீடியோ அன் போட்டோ
முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணை,யாழ்ப்பாணம்.
கண்டி வீதி, கிளிநொச்சி.

நவ நாகரிக தங்க நகைகளுக்குச் சிறந்த நம்பிக்கையான இடம்
**பாலகிருஷ்ண ஆபரண மாளிகை**
616, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

அசல் 22 கரட் தங்க நகைகளுக்குத் தவறாமல் நாடுங்கள்
**நியூலலிதா நகைமாடம்**
191, கஸ்தூரியார் வீதி,
யாழ். T.P. 077 6027746, கொழும்பு 2470396,
இந்தியா 24350938, கனடா 416261685

நாகரிகமான நவீன நகைகளுக்கு நம்பகமான இடம்:
**புதிய ஆனந்தா நகைமாடம்**
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0777 976620
69/1, பசார் வீதி, வவுனியா. T.P. 024 22096

வீடுகட்டுவதற்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்ள
**ஆதி விநாயகர்**
மணல், கல், விற்பனை நிலையம்,
பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.
உரிமையாளர்:- பா. ஆனந்தகிருஷ்ணன்,
T.P. 222 2680

உங்கள் வாகனங்களைச் சிறப்பான முறையில் சுத்திகரித்திடவும் சகல உதிரிப்பாகங்களைப் பெற்றிடவும் வடபகுதியில் சிறந்த இடம்
**றோயல் சேவிஸ் ஸ்ரேசன்**
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

அழகிய தங்கப் பவுண் நகைகளுக்குச் சிறந்த இடம்
**சாளினி அணிகல மாடம்**
229A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 3259

சகல விதமான அழகு சாதனப் பொருள்களுக்கும் விளையாட்டுப் பொருள்களுக்கும் கோல்ட் கவறிங் நகைகளுக்கும் நாடுங்கள்:
**அம்பிகாபதி பான்சி றேடர்ஸ்**
9 A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

நல்ல தரமான நல்ல ரகமான பொருள்களுக்குச் சிறந்த இடம்
**ரவிக்குமார்**
(பலசரக்கு வியாபாரம்)
கட்டப்பிராய்.

பலசரக்கு பொருள்களுக்குச் சிறந்த இடம்
**ராஜா ஸ்ரோஸ்**
பருத்தித்துறை வீதி,
கட்டப்பிராய்.

அசல் 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொள்ள
**வினோ நகைப்பூங்கா**
185, 177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்.
T.P. 021 222 5394, 021 222 2824

நம்பிக்கையான நவீன பாணியில் அமைந்த நகைகளுக்குத் தவறாமல் நாடுங்கள்
**புதிய நவீனா நகையகம்**
189, கஸ்தூரியார் வீதி, யாழ். T.P. 0777 115625

நவ நாகரிக நங்கையர்கள் நாடுவது
**சிறி மீனாட்சி நகை மாளிகை**
187, கஸ்தூரியார் வீதி, யாழ்.
T.P. 021 222 6109

சுத்தமான நல்ல நவீன தங்கப்பவுண் நகைகளுக்கு நாடுங்கள்:
**சிறி கருமாரி நகையகம்**
205/6, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்.
T.P. 222 5385

அழகிய தரமான புகைப்படங்களுக்கும், வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்
**ஊர்மிளா ஸ்ருடியோ அன் டிஜிற்றல் வீடியோ** கட்டப்பிராய்
வீடியோ, ஸ்ரில், படப்பிடிப்பு, போட்டோ டிசைனிங், வீடியோ எடிட்டிங் போன்றவற்றை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

உ

அல்வாய்

# அருள்மிகு மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்டச் சிறப்புமலர் 21-06-2005





## அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு!

மாறாம்புலம் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் பிள்ளையார் பெருமானுக்குப் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பிள்ளையார் வழிபாடு இம்மைக்கும் மறுமைக்கும் புண்ணியத்தைத் தரக்கூடியதாகும். மனித வாழ்வின் உயர்நிலையைத் தரக்கூடியது இறை வழிபாடாகும். அதனை நமக்கு ஏற்படுத்துவது ஆலயங்களாகும். ஆலயத்தில் நடைபெறும் பூஜைகளும் விழாக்களும் மனிதன் சிந்தித்துச் செயற்பட வழிகாட்டுகின்றன. அதற்காகவே ஆலயம் தொழுவது சாலவும் நன்று. நித்தலும் எம்பிரான் கோயில் புக்கு என்றும் எடுத்து இயம்பி உள்ளனர். இதனை உணர்ந்து மாறாம்புலம் மக்கள் பிள்ளையாருக்கு ஆலயம் அமைத்து ஆலய வழிபாட்டில் தனித்துவமான தேர்த்திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடப் பல லட்சம் ரூபா செலவில் புதியதொரு தேரை உருவாக்கியுள்ளனர். தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். ஆன்மாக்களைப் பற்றி இருக்கும் மாயை இருளை அகற்றி ஞான ஒளியை ஏற்றுவதாகும். அதனாலேயே தேர்வடம் பிடித்தால் வானத்தில் இடம்பிடிக்கலாம் என்று முன்னோர் இயம்பினர். தேரினுடைய அமைப்புப் பல தத்துவங்களை எமக்கு உணர்த்துகிறது. தேரினுடைய அமைப்பு பாதாளத்தையும் பூலோகத்தையும் மேலோகத்தையும் காட்டுவதாகும். உடம்பை மூன்றாகப் பிரித்தனர். கால், அரை, தலை என்று தேருக்கும் மூன்று பாகங்கள் உள்ளன. இறைவன் தேரில் எழுந்தருளச் செய்வது மனிதனின் மனதில் இறைவனை எழுந்தருளச் செய்வதாகும். இதனாலேயே தேர்த்திருவிழா சிறப்புடையது. இத்தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞனை வாழ்த்துகின்றோம். இத்தேருக்கு நிதி வழங்கியவரையும் ஆலய பரிபாலன சபையினரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. இவ்வெள்ளோட்டத்தை நிதர்சனமாக்க வெளிவரும் மலர் சிறப்பாக அமைந்து எல்லோர்க்கும் பயன்பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
*ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம்.*

## இறைவனின் அனுக்கிரகம் வேண்டும்

மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு புதிய அழகான சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று செவ்வாய்க் கிழமைநடைபெற ஸ்ரீ சித்திவிநாயகர் திருவருள் துணைசெய்துள்ளார். இறைவன் அனுக்கிரகம் இல்லாமல் உலகில் ஒரு நல்ல காரியமும் நடைபெறா. இப்பூவுலகில் வாழும் நாம் இறையருள் பெறப் பக்திபூர்வமாகச் செயற்படவேண்டிய காலகட்டம் இது. ஆகவே, ஆலய பரிபாலன சபையால் இத்திருத்தொண்டுடன் பல நற்கருமங்களைச் செய்வார்களாக இதுவே இவர்களது தலையாய கடமை ஆகும்.

இறைபணியில் அன்னையின் அன்புள்ள அடியார்

**சுவாமி சித்ரூபானந்தா.**

## வினை தீர்க்கும் விநாயகன்

சைவமும், தமிழும் தளைத்தோங்கும் சிவபூமியான இயற்கை எழிலுடன் கூடிய தர்மசிந்தனை மிக்கோர் வாழும் அல்வாயம்பதியிலே தம்மை வழிபடும் அடியார்களின் துயர்போக்கி அருள்பாலித்து நிற்கின்றான் மாறாம்புல மாணிக்கவிநாயகன்.

முந்தைவினை போக்கும் சிந்தைக்கு இனிய விநாயகப் பெருமான் ஆலயத்தில் சித்திரத்தேர் வெள்ளோட்டப் பெருவிழா மாறாம்புல மாணிக்கவிநாயகனைப் பிரார்த்தித்து நாயகனைச் சரணடைந்தால் எம்வினை பறந்தோடிவிடும்.

**பொன்.வரதராஜகுரு,**
*ஆலய பிரதம குரு.*

## மனம் பூரிப்படைகின்றது

எஸ்.சறோஜினி (மடத்தடி மேற்கு வீதி, சாவகச்சேரி வடக்கு), எஸ்.சர்வானந்தன் (பழம் றோட், கந்தர்மடம்), வி.சர்வானந்தன் (மருதங்குளம் றோட், மட்டுவில் தெற்கு), ஆர்.சர்வேஸ்வரி (நகுலேஸ்வர றோட், கீரிமலை), ஆர்.சசிகரன் (சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்), என்.சசிந்தினி (வைமன் றோட், நல்லூர்), வி.சசிகாந் (தபாற்கந்தோர் வீதி, சுண்டுக்குளி), ஜி.சசிகலா (துர்க்காபுரம், தெல்லிப்பழை), கே.சசிகலா (மஞ்சத்தடி, இணுவில்), பி.சசிகலா (உடையார் வீதி, கொக்குவில் கிழக்கு), பி.சசிகலா (2ஆவது ஒழுங்கை, பலாலி வீதி), ஆர்.சசிகலா (பொன்னாலை றோட், மானிப்பாய்), எஸ்.சசிகலா (சுதுமலை தெற்கு, மானிப்பாய்), எஸ்.சசிகலா (3ஆவது மைல் கல், கல்வியங்காடு), எஸ்.சசிகலாதேவி (துர்க்காபுரம், தெல்லிப்பழை), எஸ்.சசிகாந் (கோயில் வீதி, நல்லூர்), கே.ச்சசிகரன் (ஐவர்கூடம், மீசாலை வடக்கு), கே.சசிகரன் (தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை), எம்.சசிகரன் (தாவளை இயற்றாலை, கொடிகாமம்), பி.சசிகரன் (அராலி வடக்கு, வட்டுக்கோட்டை), எஸ்.சசிகரன் (நாகநாதன் லேன், கொடிகாமம்), சி.சசிகரன் (வத்தினாலை, வல்வெட்டி, வல்வெட்டித்துறை), ஏ.ஜி.சசிகுமார் (ஆசிரியர் விடுதி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), என்.சசிகுமார் (பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய்), என்.சசிகுமார் (தம்பித்துரை வீதி, பிரான்பற்று, பண்டத்தரிப்பு) -

ஆர்.சசிகுமார் (சிவகாமி அம்மன்கோயிலடி, இணுவில் கிழக்கு), ஆர்.சசிகுமார் (மானிப்பாய் றோட், வண்ணார்பண்ணை), ரி.சசிகுமார் (சங்கிலியன் வீதி, நல்லூர்), ரி.சசிகுமார் (சங்குவேலி தெற்கு, மானிப்பாய்), வி.சசிகுமார் (முனியப்பர் கோயில் வீதி, இடைக்காடு,அச்சுவேலி), ஜி.சகிக்குமாரன் (இணுவில் தெற்கு, சுன்னாகம்) -

எஸ்.சசிலா (கலைமகள் றோட், அரியாலை மேற்கு), என்சசிரேகா (மந்துவில் கிழகக்கு, கொடிகாமம்), எல்.சசிரேகா (பூநாறி லேன், கொக்குவில் மேற்கு), எம்.சசிரேகா (சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்), எஸ்.சசிகுமார் (தம்புவத்தை, இயற்றாலை மேற்கு), கே.சகிதா (5ஏ, வட்டாரம், நயினாதீவு), பி.சசிதரன் (அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு), எஸ்.சசிதேவி (செம்பியன்பற்று தெற்கு, தாளையடி), எஸ்.சசிவதனி (சுதுமலை தெற்கு, மானிப்பாய்), வி.சாதனா (வில்லைய நந்தம் கோயிலடி, துன்னாலை, கரவெட்டி) -

எஸ்.சதாரூபினி (ஏ.ஜி.ஏ. லேன், வல்வெட்டித்துறை), ஆர்.சதாசிவம் (நீர்வேலி மத்தி, நீர்வேலி), கே.சதீஸ் (சிவன் கோயிலடி, சித்தன்கேணி), கே.சதீஸ் (சின்ன அல்லடி, அல்வாய்), எஸ்.சதீஸ் (கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு), ரி.சதீசன் (காரைநகர் றோட், கொட்டடி), கே.சதீஸ்கண்ணா (சிவன் கோயில் அருகில், சுன்னாகம்), பி.சதீஸ்கரன் (குமரகோட்டம், கோண்டாவில்), கே.சதீஸ்குமார் (அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு), எம்.சதீஸ்குமார் (பழம் றோட், ஆனைக்கோட்டை) -

என்.சதீஸ்குமார் (தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை), எஸ்.சதீஸ்குமார் (சுதுமலை வடக்கு, மானிப்பாய்), ரி.சதீஸ்குமார் (பொன்னாலை, சுழிபுரம்), ரி.சதீஸ்வரி (ஏ.ஜி.ஏ. லேன், வல்வெட்டித்துறை), எஸ்.சதீஸ்வரன் (இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம்), எஸ்.கே.சதீஸ்வரன் (நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு), வி.சதீஸ்வரி (மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்), பி.சதிஜன் (ஜி.பி.எஸ். றோட், கல்வியங்காடு), எஸ்.சத்தியராணி (நவரத்தினராஜா றோட், கோண்டாவில்), ரி.சத்யா (முத்துமாரி அம்மன் கோயிலடி, சாவகச்சேரி) -

ரி.சத்தியகலா (லோட்டன் றோட், மானிப்பாய்), கே.சத்தியகுமார் (சாத்திரியார் லேன், தும்பளை), எஸ்.சத்தியநாராயணன் (வெல்லாவத்தை, பண்ணாலை), ஜே.சத்தியப்பிரியா (நாவலர் றோட், நல்லூர்), என்.சத்தியரூபன் (அளவெட்டி மேற்கு, அளவெட்டி), எஸ்.சத்தியசாயிபாபா (எழுதுமட்டுவாள் வடக்கு, எழுதுமட்டுவாள்), எஸ்.சத்தி[illegible]லன் (சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்). ரி.சத்தியசீலன் (காஞ்சிபுரம், மாதகல்), எவ்.சி.சத்தியசோதி (அச்சக வீதி, யாழ்ப்பாணம்), எம்.சத்தியசுபோதினி (மாரீசன்கூடல், இளவாலை) -

கே.சத்தியதாசன் (மல்வம், உடுவில்), கே.சத்தியவதனி (முருகமூர்த்தி வீதி, சங்கானை), என்.சத்தியவேந்தன் (பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய்), கே.சத்தியரஜனி (வாதரவத்தை, புத்தூர்), என்.சத்தியரூபன் (சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்), எ.சத்யா (பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்), சி.சத்தியசியாமளாதேவி (பொற்பதி றோட, கொக்குவில் கிழக்கு), ஆர்.சறகுணாதேவி (நெலலியடி, கரவெட்டி), இ.சற்குணன் (முருகமூர்த்தி கோயில் வீதி, தாவடி தெற்கு), ஏ.சற்குணராஜேஸ்வரன் (11ஆம் வட்டாரம், நெடுந்தீவு), என்.சிவசங்கர் (மயிலணி, சுன்னாகம்), ஆர்.சவிதா (வியாபாரிமூலை, பருத்தித்துறை), என்.சவுந்தரதேவி (புலோலி மேற்கு, பருத்தித்துறை), எஸ்.சயந்தன் (முதலாம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை), ரி.சயந்தன் (பாடசாலை வீதி, இடைக்காடு, அச்சுவேலி), எஸ்.சயரூபி (வசாவிளான் தெற்கு, வசாவிளான்)

ரீ.சுஜாதா (புதிய செம்மணி வீதி, நல்லூர்), ரீ.சுஜதாஸ் (அளவெட்டி தெற்கு), பி.சுஜாத்தா (துன்னாலை வடக்கு, கரவெட்டி), ரி.சுஜீதன் (கோப்பாய் தெற்கு), எஸ்.சுஜீவகுமார் (கோப்பாய் மத்தி), என்.சுஜீவரூபன் (சண்டிலிப்பாய் மத்தி), ரீ.சுஜேந்திரமோகன் (ஆடியபாதம் வீதி, நல்லூர்), கே.சுஜெஸ்கா (நொத்தாரிஸ் வீதி, அரியாலை), ஏ.சுஜேதரன் (சந்தை ஒழுங்கை, மானிப்பாய்), என்.சுஜி (நெல்லியடி வடக்கு, கரவெட்டி), எஸ்.சுஜித் (ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்), என்.சுஜிதா (கோண்டாவில் மேற்கு), எஸ்.சுஜிதா (பெந்தகோஸ் ஒழுங்கை, யாழப்பாணம்), எஸ்.சுஜாதா (நீர்வேலி வடக்கு), எஸ்.சுஜாதா (கரணவாய் கிழக்கு, கரவெட்டி) -

எஸ்.சுஜாதா (கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை), எஸ்.சுஜாதா (சங்கத்தானை, சாவகச்சேரி), ரீ.சுகந்தினி (புறூடி முன் ஒழுங்கை, அரியாலை), ரீ.சுகந்தினி (நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி), ரீ.சுகுணாவதி, தாவடி தெற்கு, கொக்குவில்), எஸ்.சுலோஜினி (லேக் லேன், சங்கானை), கே.சுலோஜினி (வட்டு வடக்கு, சித்தன்கேணி), என்.சுலோசனா (மாலியவத்தை, சங்கானை), எஸ்.சுலோஜினி (கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்), ஆர்.சுமனேஸ்வரி (மீசாலை வடக்கு, மீசாலை), வி.சுமங்கலா (மீசாலை வடக்கு, கொடிகாமம்), எஸ்.சுமதாசாந்தி (உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்), என்.சுமதி (மாசறி, வரணி, யாழ்ப்பாணம்), கே.சுமதி (கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்), பி.சுமதி (ஏழாலை கிழக்கு, ஏழாலை), பி.சுமதி (கரந்தன், நீர்வேலி), எஸ்.சுமதி (வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்) -

எஸ்.சுமதி (ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்), ரி.சுமதி (குட்செட் வீதி, தோணிக்கல், வவுனியா), வி.சுமதி (மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி), எஸ்.சுமிதா (கொக்குவில் கிழக்கு, கொக்குவில்), கே.சுமித்திரா (றக்கா றோட், யாழ்ப்பாணம்), கே.சுமித்ரா (அராலி மேற்கு, வட்டுக்கோட்டை), பி.சுமித்ரா (சுதுமலை கிழக்கு, மானிப்பாய்), பி.சுமதி (ஏழாலை கிழக்கு, ஏழாலை), எஸ்.சுபதா (கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்), பி.சுபத்ரா (உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்), ரி.சுந்தரரூபி (மடத்தடி வீதி, கொடிகாமம்), எ.சுந்தரவதனி (சங்கத்தானை, சாவகச்சேரி), எஸ்.சுனேத்திரா (சங்கிலியன் வீதி, நல்லூர்), எம்.சுனித்திரா (ஏழாலை வடக்கு, ஏழாலை), எஸ்.சுந்தரேஸ் (ராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்) -

எ.சுபேசன் (வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை), எம்.சுரேந்தினி (பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்), கே.சுரேன் (உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்), எஸ்.சுரேந்திரா (மாணிக்கத்தாரகை, அல்வாய்), எஸ்.சுரேந்திரன் (பன்னாலை, தெல்லிப்பழை), இ.சுரேந்திரநாதன் (உரும்பிராய், யாழ்ப்பாணம்), எஸ்.சுரேந்தினி (அப்பொன்சு அவனியு, தெகிவளை), எம்.சுரேந்திரன் (இயற்றாளை, வரணி), என்.சுரேஷ் (நெல்லியடி, கரவெட்டி), எஸ்.சுரேஷ் (நவாலி வடக்கு, மானிப்பாய்), வி.சுரேஷ் (பொன்னப்பர் வீதி, யாழ்ப்பாணம்), வி.சுரேஷ் (புலோலி தெற்கு, புலோலி), கே.ரி.சுரேஷ்குமார் (காங்கேசன்துறை யாழ்ப்பாணம்), எஸ்.சுரேஷினி (தாவடி, கொக்குவில்), கே.சுரேஷ்குமார் (குப்பிளான் தெற்கு, கேணியடி, ஏழாலை), எம்.சுரேஷ்குமார் (விளிசிட்டி, தெல்லிப்பழை), பி.சுரேஷ்குமார் (இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி), ரி.சுரேஷ்குமார் (பொன்னாலை வீதி, சங்கானை), யு.சுரேஷ்குமார் (புலோலி கிழக்கு, பருத்தித்துறை), ஆர்.சுரேஷ்குமார் (முத்துக்கிருஸ்ணர் ஒழுங்கை, சுன்னாகம்), ஆர்.சுரேஷ்குமார் (வரணி மத்தி), எஸ்.சுஜிகரன் (கரவெட்டி கிழக்கு), கே.சுசிலா (கிளவி தோட்டம், கரவெட்டி மத்தி), கே.சுசிலா (கட்டுவன் வீதி, மல்லாகம்), எம்.சுஜிந்திரன் (இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி).

இ.சுஜிகலா (வியாபாரி மூலை, பருத்தித்துறை), எஸ்.சுஜிகலா (பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை), ரி.சுஜிலாதேவி (ஈமசிட்டி, கோப்பாய் மத்தி), ஏ.சுதா (கரணவாய் தெற்கு, கரவெட்டி), எம்.சுதா (இணுவில் தெற்கு, சுன்னாகம்), ஆர்.சுதா (துன்னாலை மத்தி, கரவெட்டி) எஸ்.சுதா (செட்டித்தெரு, நல்லூர்), எஸ்.சுதா (பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை), ரி.சுதா (சூழானை, சுன்னாகம்), ஆர்.சுதாகினி (கல்லாரை, மல்லாகம்) -

ஆர்.சுதாகரன் (கலைவாணி மில் ஒழுங்கை, கொக்குவில்), எஸ்சுதாகரன் (புதிய வீதி, கொக்குவில் மேற்கு), எஸ்.சுதாகரன் (கரவெட்டி மேற்கு), ரீ.சுதாகரன் (அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு), கே.சுதாஹேறன் (அல்லாரை வடக்கு, கொடிகாமம்), ஏ.சுதர்ஜனி (கோண்டாவில் கிழக்கு), பி.சுதாஜினி (நாகர் கோவில் தெற்கு), பி.சுதாஜினி (சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை), ரீ.சுதாஜினி (நீர்வேலி வடக்கு), ஜீ.சுதாகர் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), எஸ்.குணவதனி (துன்னாலை தெற்கு, கரவெட்டி), ஏ.சுதாகரன் (சரசாலை தெற்கு), சீ.சுதாகரன் (மாளிகாவத்தை, சங்கானை), கே.சுதாகரன் (பிறவுண் வீதி, ஐந்தாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்), கே.சுதாகரன் (சாரையடி, புலோலி தெற்கு)

கே.சுதாகரன் (கரணவாய் கிழக்கு, கரவெட்டி), கே.சுதாகரன் (இருபாலை கிழக்கு, கோப்பாய்), எஸ்.சுதாகரன் (துன்னாலை கிழக்கு, கரவெட்டி), யூ.சுதாகினி (அளவெட்டி தெற்கு), கே.சுதாமதி (மந்துவில் கிழக்கு, கொடிகாமம்), எஸ்.சுதாமதி (ஐயனார் ஒழுங்கை, சாவகச்சேரி), எஸ்.சுதனி (கனல் றோட், வெள்ளவத்தை), கே.சுதந்தா (பங்களா வீதி, மீசாலை மேற்கு), எஸ்.சுதந்தாதேவி (மூளாய் மேற்கு, சுழிபுரம்), பி.சுதந்திரா (ராஜ வீதி, நீர்வேலி வடக்கு), என்.சுதந்திரன் (சங்கத்தானை, சாவகச்சேரி).

(வளரும்)

வலி.வடக்கில் மீளக் குடியமர அனுமதிக்கப்படாததால்

# பாதுகாப்பு வலயத்தின் நுழைவாயில்களை மறித்து சாகும்வரை உண்ணாவிரதம்!

## கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்21

வலி.வடக்குப் பகுதியில் மீளக் குடியமர அனுமதிக்கப்படாததால், பாதுகாப்பு வலயத்தின் சகல நுழைவாயில்களையும் மறித்து சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க முடிவுசெய்துள்ளோம். இதற்கு விடுதலைப் புலிகளின் தலைமையின் அங்கீகாரத்துக்குக் காத்திருக்கின்றோம்.

- இப்படிக் கூறினார் வலி.வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் என்.இரத்னராஜா.

யாழ்பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சமயமே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:

1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து போக்கிடமின்றி அலைந்து கொண்டிருந்த எமது பிரதேச மக்கள் ஆழிப்பேரலையால் முழுமையாகப் பாதிக்கப்பட்டு விரக்தி நிலையில் உள்ளனர்.

அதிஉயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள எமது இருப்பிடங்களில் நாம் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும். இதற்காகப் பல போராட்டங்களை முன்னெடுத்தும் பயன்கிடைக்கவில்லை.

பலாலி பாதுகாப்பு வலயத்தின் நுழைவாயில்களான தெல்லிப்பழை, சேந்தாங்குளம், வளளாய் ஆகிய முகாம்களுக்கான நுழைவாயில்களை மறித்து சாகும் வரையான உண்ணா விரதம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம்.

இந்த முடிவை விடுதலைப் புலிகளின் தலைமையிடம் சமர்ப்பித்துள்ளோம். அவர்களின் அனுமதி கிடைத்ததும் மேற்கொள்வோம் - என்றார் அவர். (எ-3-204)

# பண்பாட்டலுவல்கள் திணைக்கள ஏற்பாட்டில் அடுத்தமாதம் நகைச்சுவை நாடகப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜுன்21

உலக நாடகத் தினத்தை முன்னிட்டு வடககு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நகைச்சுவை நாடகப்போட்டியையும், அது தொடர்பான நாடகவிழாவையும் நடத்தவுள்ளது.

அடுத்தமாதம் நடுப்பகுதியில் இந்த விழாவும், நாடகப் போட்டியில் நடைபெறவுள்ளன என்றும் -

வடக்கு - கிழக்கில் உள்ள கலை, இலக்கிய மன்றங்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்ற முடியும் என்றும் -

மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி என். ஸ்ரீதேவி தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடகப் பிரதிகள் 45 நிமிடங்களுக்குள் மேடையேற்றப்படக் கூடியதாக இருக்கவேண்டும்.

நாடகங்கள் தனிப்பட்ட நபர்களை, அரசியல் கட்சிசார்ந்த விடயங்களைத் தாக்குவதாகவோ, விமர்சிப்பதாகவோ இருக்கக்கூடாது.

உள நெருக்கடியால் பாதிக்கப்பட்டு இறுகிப் போயிருக்கும் மனங்களை விடுவிக்கும் பொருட்டாக நாடகங்கள் அமைந்திருத்தல் வேண்டும்.

பரிசுக்குரியதாகத தெரிவு செய்யப்படும் முதல் மூன்று நாடகங்களுக்கு பணப்பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேற்படி, போட்டிக்கான நாடகப் பிரதிகளை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் "உதவிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# யாழ்.நகரில் இன்று பொசன் உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜுன்21

இன மத வேறுபாடுகளின்றி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஆசிவேண்டி இன்று இடம்பெறும் பொசன் உற்சவத்தின்போது யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையில் 84ஆயிரம் தீபங்கள் ஏற்றப்பட்டு பூசைகள் நடைபெறவுள்ளன. என 51 ஆவது படையணி தெரிவித்துள்ளது.

இன்று பகல் 11.30 மணியளவில் ஸ்ரீ நாக விகாரைக்கு அருகே உணவுப் பொட்டலங்கள் வழங்கவுள்ளதால் இதில் பங்குபற்றுமாறு யாழ்ப்பாணம் படைப் பிரிவினர் மக்களை அழைக்கின்றனர்.

இன்று இரவு ஸ்ரீ நாகவிகாரைக்கு அருகேயுள்ள குளத்தில் (ஆரியகுளம்) பக்திகீத நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலய முன்றிலில் புகைக் கூண்டுக் கண்காட்சி இடம்பெறும் எனவும் அதனை யாழ்.மக்கள் அனைவரும் வநது கண்டு களிக்குமாறு 51ஆவது படையணியினர் அழைப்பு விடுத்துள்ளனர். (3)

# சாவகச்சேரி கடலேரியில் மீனவரின் தொழில் பிரதேசம் மேலும் குறைப்பு

சாவகச்சேரி கடலேரியில் மீன் பிடிக்கும் தூரத்தினை படையினர் திடீரெனக் குறைத்ததால் 75க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கடலேரிப் பகுதியில் சுடுகலப் பயிற்சிக்காக சுவீகரிக்கப்பட்ட கடலேரியினை படையினர் திடீரென விஸ்தரித்ததால் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

படையினர் புதிதாக சுவீகரித்த பகுதிகளுக்கு வைக்கப்பட்டிருந்த இறால் கூடுகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் இக்கடலேரியில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட போது சில பகுதிகள் கொடிகள் நட்டு, குறிக்கப்பட்டு தடைசெய்யப்பட்டிருந்தன.

சாவகச்சேரி புனித லிகோரியார் கடற்றொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட பகுதியில் பெருமளவு கடற்றொழிலாளர்களை தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுடுகலப் பயிற்சிக்கென ஒதுக்கப்பட்டு தொழில் செய்யத் தடைவிதிக்கப்பட்ட பகுதியினை தற்போது திடீரென விஸ்தரித்ததால் பலர் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-117)

## நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்கு புதிய பொறுப்பதிகாரி

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக அனலைதீவு அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர்.திஸ்ஸ குணவர்த்தன பதவியேற்றுள்ளார். இதனையடுத்து இவ் வைத்தியசாலையில் கடமையாற்றிவந்த டாக்டர்.ஆ.திருநாவுக்கரசு கடந்த வாரம்முதல் வேலணை அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகப் பதவி ஏற்றுள்ளார்.

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகவும், வேலணை அரசினர் வைத்தியசாலையின் பதில் பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றி வந்த டாக்டர்.எம்.இராசையா அண்மையில் திடீரென ஏற்பட்ட நோய் காரணமாகக் காலமாகிவிட்டார். (ஐ-135)



கவிஞர் சூரியநிலாவின் (அ. ஜேன்சன் றொனால்ட்) 'சூரியக் குளியல்' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த 11ஆம் திகதி யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெற்றது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் செயலாளர் தி.உதயசூரியன் நூலின் சிறப்புப் பிரதியை கவிஞர் சோ.பத்மநாதனிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். நூலாசிரியா சூரியநிலாவும் அருகில் உள்ளார். (ஐ)

# வாசகர் திருமுகம்

## மாநகர தீயணைப்புச் சேவை பெயருக்கு மட்டுமே இயங்குகிறதா?

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று 12.06.2005 இல் தீப்பற்றி எரிந்தபோது உடன் வந்த மாநாகரசபை தீயணைப்பு இயந்திரம் அரை பவுஸர் தண்ணீருடன் வந்து தள்ளாடியது. அரை பவுஸர் தண்ணீர் முடிந்தவுடன் நீர் எடுக்க அழுத பிள்ளை போல் ஓடித்திரிந்தது. ஆனால், கிணற்றில் நீர் எடுக்க மாநகரசபை தீயணைப்பு இயந்திர நீர்ப்பம்பிக்கு (WATER PUMP) மண்ணெண்ணெய் இல்லாது நின்ற பரிதாபத்தைப் பார்த்து தனிநபர் ஒருவர் கொடுத்த மண்ணெண்ணையின் மூலம் கிணற்றில் நீர் எடுத்து தீயணைக்க முன்னர் எரிந்த கடை சாம்பல் மேடாகிவிட்டது.

அண்மையில் சுண்டுக்குளி சந்தியில் கடைகளில் தீ மூண்டபோது அங்கு நீரின்றிச் சென்ற மாநகரசபை தீயணைப்பு இயந்திரத்தை மக்கள் கற்களால் வீசிக் கலைத்த வடு மாற முன்பு மீண்டும் அதேமாதிரி செயற்பாடு.

மாநகரசபை நிர்வாகம் என்ற ஒன்று இல்லையோ என எண்ணத் தோன்றுகிறது.

மாநகரசபை சுகாதாரப் பிரிவு பரிசோதனைக்குப் புறப்படுவதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாவதே தவிர செயலளவில் ஒன்றுமே இல்லை. அண்மையில் நகரில் உள்ள பிரபல சைவ போசன சாலை ஒன்றுக்குள் சென்று பார்த்தபோது அதிர்ந்துவிட்டேன், கணுக்கால் அளவு ஊத்தை நீரின் மட்டத்தில் வைத்து மரக்கறிகள் வெட்டப்படுகின்றன. மலசலகூடக் கழிவு தண்ணீர் உணவு தயாரிக்கும் பகுதிக்கு வருகின்றது. நிரந்தர மலசலகூடம் இல்லை.

இந்த லட்சணத்தில் எமக்கு கலாசார மண்டபம் தேவைதானா?

**நல்லூர், யாழ்ப்பாணம்.** **- சோ.பு**

## சுகயீன விடுமுறைக் காலம் ஓய்வூதியத்தில் தவிர்க்கப்பட்டது ஏன்?

தற்போது கொழும்பு வத்தளையில் வசித்துவரும் நான் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 1953ஆம் ஆண்டில் தற்காலிக வார்ட் எழுதுவினைஞராகச் சேர்ந்து 1956ஆம் ஆண்டும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டேன். 1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் எனக்கு 55வயது பூர்த்தியானமையினால் சேவையிலிருந்து இளைப்பாற வேண்டியிருந்த போதிலும், நான் சேவை நீடிப்புக்கு விண்ணப்பித்துக் கொண்டதன் பேரில் ஒவ்வொரு ஆண்டாக இரு தடவைகள் சேவை நீடிப்புப் பெற்று சேவையாற்ற முடிந்தது.

இரண்டாவது சேவை நீடிப்பில் நான் சேவையாற்றி வந்த வேளையில் வைத்திய சிகிச்சை பெறும் பொருட்டு 1992ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமுதல் 1993ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரை சுகயீன விடுமுறை எடுத்திருந்ததோடு, அதற்கான உரிய வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தையும் சமர்ப்பித்திருந்தேன். ஆனால், 1992ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் நான் சேவையிலிருந்து இளைப்பாறி விட்டதாகக் கொள்ளப்பட்டே எனது ஓய்வூதியம் கணக்கிடப்பட்டது. இன்றுவரை அக்கணிப்பீட்டுக்கமையவே எனது ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட விடுமுறையில் நின்ற காலத்துக்குரிய வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டமையால் எனது இளைப்பாற்றுத் திகதி பின்தள்ளியே கணக்கிடப்பட்டிருக்க வேண்டுமெனவும், 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குரிய எனது வருடாந்த சம்பள ஏற்றம் எனக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டுமெனவும், அச்சம்பள ஏற்றத்துடன் கூடிய சம்பள விகிதத்தின் அடிப்படையிலேயே எனக்கான ஓய்வூதியம் கணிக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் நான் நம்புகிறேன்.

இது குறித்து சுகாதார சேவைப்பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் தற்போது எனது மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்கிவரும் வத்தளை பிரதேச செயலர் ஆகிய தரப்பினருக்கு பல தடவைகள் முறையிட்டிருந்தும் இற்றை வரை எனக்குரிய சரியான ஓய்வூதியத்தையோ, சம்பள நிலுவையை வழங்கவோ எவராலும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது எனது 70ஆவது வயதிலும், எனது நாளாந்த பணத் தேவைக்கும், வைத்தியச் செலவுகளுக்கும் எனது ஓய்வூதியத் தொகையையே நாம் நம்பியிருக்கவேண்டியுள்ளது.

பலதடவைகள் நான் வேண்டிக்கொண்டபோதிலும், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் இவ்விடயத்தில் எதுவித சிரத்தையும் எடுத்துக் கொள்ளாததால் இவ்விடயத்தில் தலையிட்டு எனக்கான உரிய ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற்றுத்தருமாறு தற்போது "ஓம்புட்ஸ்மான்" என்ற நாடாளுமன்ற ஆணையாளருக்கு முறையீடு செய்துள்ளேன்.

எனது சேவையின் முழுக்காலம் 39 ஆண்டுகள், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையிலேயே நான் கடமையாற்றி ஓய்வு பெற்றதாலும், பத்திரிகை வாயிலாக இந்தப் பிரச்சினைகள் வெளிக்கொண்டு வரப்பட்டாலாவது உரிய தரப்புக்கள் எனக்குரிய நியாயமான கொடுப்பனவை மேற்கொள்ளக் கூடும் என்பதாலும், தயவு செய்து எனது இப் பிரச்சினையை தங்கள் பத்திரிகை மூலமாக வெளிக்கொணர்ந்து எனக்கு நிவாரணம் கிடைக்க உதவுமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்.

**வத்தளை.** **திருமதி எஸ்.சாம்பசிவம்.**

## யாரிடம் முறையிடுவது?

திருநெல்வேலி மணற்தறை ஒழுங்கையால் துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த பெண்பிள்ளையைத் தாண்டி ஒரு பெரிய (பழைய) மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் சென்றார்கள். சென்றவர்கள் திடீரென்று திரும்பிவந்து பெண்பிள்ளையின் சைக்கிள் கூடையில் இருந்த கைப்பையை பறித்துக் கொண்டு பறந்துவிட்டார்கள்.

செய்வதறியாது திகைத்து நின்ற பெண்பிள்ளை மிகுந்த கவலையுடன் வீடு திரும்பினார். அந்தக் கைப்பையில் ஆயிரம் ரூபா காசு, ஒரு மோதிரம், அடையாள அட்டை என்பன இருந்தன.

இந்த வழிப்பறித் திருடர்களைக் கட்டுப்படுத்த முடியாதா?

இவர்களுக்குப் பின்னணியில் யார் இருக்கிறார்கள்?

சந்தேகமான மோட்டார் சைக்கிள்களைக் கண்காணியுங்கள். அண்மையில் கோப்பாய் பகுதியில் ஒரு பெண்ணை அடித்து கடத்திச்சென்று கொள்ளையடித்தார்கள். இப்படிச் சந்தேகமான முறையில் கடத்திச் செல்லும்போது துரத்திச் செல்லுங்கள். நம்பரைக் கவனியுங்கள்.

சட்டம் ஒழுங்கைப்பேண பொதுமக்கள்தான் இனி வீதியில் இறங்கவேண்டும்.

**கந்தர்மடம்.** **வழிப்போக்கன்.**


சிவஸ்ரீ தனேஸ்வரக்குருக்கள்


அருட்திரு. இ.ராஜகுமார் அடிகளார்


நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா


தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் பிரபா


தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் உமைநேசன்


நல்லூர் கோட்ட அரசியல் பிரிவு மகளிர் பொறுப்பாளர் பூமகள்


நல்லூர் கோட்ட அரசியல் பிரிவு பொறுப்பாளர் செழியன்


பேராளர்கள்

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்டப் பேராளர் மாநாடு நேற்று நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பொதுச் சுடர் மற்றும் தேசியக் கொடி ஏற்றப்படுவதையும் மண்ணுக்காக மரணித்த மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவிப்பதையும், சுடரேற்றுவதையும் படங்களில் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்ட பேராளர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பிரபா)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று அகப்பட்டவர்களுக்கு ரூ.15,000 அபராதம்

வலி.தென்மேற்கு,ஜூன்21

இளவாலை பொலஸ் பிரிவில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றார்கள் என்று குற்றஞ்சாட்டி ஏழு பேர் மீது கடந்தவாரம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் இளவாலை பொலீஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி எதிரிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பு வழங்கினார்.

கடந்தவாரம் இலங்கை மின்சார சபையின் வடடுக்கோட்டை மின் அத்தியட்சகர் பணிமனை அலுவலர்கள் இளவாலைப் பொலீஸாரின் அனுசரணையுடன் இரவுவேளையில் திடீர் பரிசோதனை நடத்தினார்கள்.

அத்தருணம் சட்டவிரோதமாக மின்சார இணைப்பைப் பெற்றுவந்த ஏழு பேர் கையும் மெய்யுமாக அகப்பட்டுக்கொண்டனர்.

மாரீசன்கூடலைச் சேர்ந்த ஆறுமுகம் மாயகிருஷ்ணன், மாதகல் சகாயபுரத்தைச் சேர்ந்த செல்லத்தம்பி புவனேந்திரன், சகாயபுரத்தைச் சேர்ந்த அந்தோனி ஜெயராசா, மாதகல் மத்தியைச் சேர்ந்த தில்லையம்பலம் மகேஸ்வரி, மாதகல் பிரதான வீதியைச் சேர்ந்த இருதயராசா மேரி திரேசம்மா, மாதகல் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த இரத்தினதேவி சிறிஸ்கந்தராசா, மாதகல் பிரதான வீதியைச் சேர்ந்த செலுவியஸ் தரிசனம் ஆகியோருக்கே தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இளவாலை பொலீஸ் நிலைய சார்ஜன்ட் எச்.எம்.கறீம் தலைமையில் சென்ற பொலீஸ் குழுவினரே வட்டுக்கோட்டை மின் அத்தியட்சகர் பணிமனை அலுவலர்களுடன் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

(எ-135)

# இனிமேல் பிரமுகர்களை எம்.பிக்களாக்காது அடிமட்டப் போராளியைப் பிரமுகராக்குவோம்

## மு.கா.செய்யப் போவது இதைத்தான் என்கிறார் பஷீர்

முஸ்லிம் காங்கிரஸ் இனிமேல் பிரமுகர்களை எம்.பிக்களாக்காது கட்சியின் அடிமட்டப் போராளியை பிரமுகராக்கும் வேலையையே செய்யும். பொதுத் தேர்தல் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதில் கடந்த காலங்களில் விட்ட தவறை கட்சி இனிச் செய்யாது.

இவ்வாறு தெரிவித்தார் முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவூத்.

முஸ்லிம் காங்கிரஸ் ஏறாவூர் பிரதேச உயர்பீடக் கூட்டம் அண்மையில் ஏறாவூர் அகமட் பரீட் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

பிரமுகர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக்கும் வேலையினை இனி கட்சி செய்யாது. சாதாரண ஒரு மகனை - கட்சியின் அடிமட்டப போராளியை பிரமுகராக்கும் வேலையையே - முஸ்லிம் காங்கிரஸ் செய்யும்.

இந்த விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கடந்த கால அனுபவங்களைக் கொண்டு நிறையப் பாடங்களைக் கற்றுக்கொண்டுள்ளது. வேட்பாளர் தெரிவுசெய்வதில் இனிமேலும் தவறிழைக்க அனுமதிக்க முடியாது.

(எ-க)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

அல்வாய் மாறாமபுலம் மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தான சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர் வ.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், சித்திரத்தேர் வடிவமைப்பாளர்களான சி.பாலச்சந்திரன், ப.கோகிலன் தேர்மாடம் கட்டடத்தை நிர்மாணித்த சி.சிவசேகரம், தேர் மாடத்தை அமைக்க உதவிய பெருமாள் சிவானந்தம் குடும்பத்தினர் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசார்ய சுவாமியின் ஆசியுரை இடம் பெறும்.

(3)

## விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், கச்சேரி - நல்லூர் வீதியில் நேற்று இடம்பெற்ற ஓட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஓட்டோவில் பயணம் செய்தவரான கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த எஸ்.செல்வரஞ்சன் (வயது 27) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் சுயநினைவிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(எ-15)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருணகிரிநாதர் விழா

தொல்புரம்,ஜூன்21

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு அருணகிரிநாதர் பெருவிழா, யாழ்.கன்னாதிட்டி புதிய விஞ்ஞானக் கல்லூரியின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

இநநிகழ்வு ஆச்சிரம இயக்குநர் "அமுதகலா யோகி" செ.மோகனதாஸ் சுவாமியின் விசேட பூஜை, தீபாராதனை, வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறும். காரை. பிரம்மஸ்ரீ கு.சிவராசசர்மா தலைமை வகிப்பார்.

தாவடியூர் சைவத்திரு. எஸ்.ஆர்.திருஞானசம்பந்தர், பக்கவாத்திய சகிதம் 'திருப்புகழ் இசை' வழங்குவார்.

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் இடம்பெறும். அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

(ஜ-119)


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



அன்புடையீர்!

கடந்த 05-06-2005 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

### சிதம்பரம் ஆச்சாரி காளிதாஸ்

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (21-06-2005) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் வருகைதந்து இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.171, நாவலர் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (36775)(26-11-13)

சி.பாஸ்கரன் (சகோதரன்).



## கண்ணீர்க் காணிக்கை



யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவருமான

செ.சிவஞானசுந்தரம் (நந்தி)

அவர்களின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அன்னாருக்கு கண்ணீர்க் காணிக்கை செலுத்தி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். குடும்பத்தினருக்கு அனுதாபந் தெரிவிக்கின்றோம்.

ஏழாலை.

நிர்வாகிகள், ஆத்மஜோதி தியான மணிமண்டபம்.

(36780)(26-11-13)



## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்

திருமதி விஜயலதா பாஸ்கரன

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி றீற்றா யோகராணி கனகரத்தினம்

அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒன்றியம்.

வலி.தெற்கு, உடுவில் பிரதேச செயலகம்.

(36779)(26-11-13)



## கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்

மாபெரும்

நற்செய்திப் பெருவிழா

வியாதியா? வேதனையா? பாவசாபமா?

கவலை, கண்ணீரா?

மாந்திரீக, பில்லிசூனியக்கட்டா?

இன்றே!

இயேசு

விடுதலை தருகிறார்!

விரைந்து வாருங்கள்!

விடுதலை பெறுங்கள்!

இடம்: மருதனார்மடம் பிரதேசசபை மைதானம்

காலம்: ஜூன் 21, 22 ஆகிய நாள்களில்

நேரம்: மாலை 4.30 மணிக்கு

### இயேசு அழைக்கிறார்

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே!
நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்
நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். *(மத்தேயு 11:28)*

பிரவேசம் இலவசம்.

(36774)(26-11-13)

NRP
Northern Rehabilitation Project

kfw gtz

## VACANCY

GTZ-NRP-Ground Water Protection Project invites applications from suitable candidates for the following position at their Jaffna office on a contractual basis:

**SECRETARY**

1. A minimum qualification of G.C.E(A/L)
2. An excellent command of written and spoken English (additional command in Sinhala is preferable)
1. Preferably with a minimum of 2-5 years experience in a similar capacity
2. Computer literacy with thorough working knowledge of MS office packages
3. Suitable training in Secretarial functions and distinct ability to work independently and as part of a team

Please forward your CV together with names of two non related referees and a contact number on or before 25th June 2005.

Team Leader
GTZ-NRP- Ground Water Protection Project
472, Main Street
Jaffna

(சி-43573)




**85 ஆவது அகவையில் சேவையின் சின்னம் சிறாப்பர் ஐயா அவர்களின் நினைவாக**

## ஸ்ரீ கற்பக விநாயகருக்குப் புதிய சப்பரம்

## அமரர் சிவகுரு சிவசுப்பிரமணியம்

**(முன்னாள் தலைவர், உரும்பிராய் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பரிபாலனசபை - சப்பரத் திருவிழா உபயகாரர்)**

பதினாறு ஆண்டுகள் பறந்தோடிப் போயிற்றே
உங்களின் நினைவு மட்டும் மறையவில்லையே ஐயா!

**வினைதீர்க்கும் விநாயகப் பெருமானுக்கு உங்கள் ஞாபகார்த்தமாகப் புதிய சப்பரம் அமைத்து, நேற்றைய தினம் பெருமாள் அருள் பாலித்த காட்சி அற்புதமன்றோ! சப்பரம் அமைத்த விழா உபயகாரர்களான ஐயாவின் பிள்ளைகளின் அளப்பரிய அறப்பணி மேன்மேலும் சிறக்கட்டும்.**

**கொக்குவில், உரும்பிராய் கிழக்கு.** (36784)(29-12-14-17-15) சிறாப்பர் ஐயாவின் அன்பர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

**ஊர்காவற்றுறைப் பிரதேச சபை அனலைதீவு உப அலுவலகத்தில் ஆயுர்வேத மருந்துக் கலவையாளராகக் கடமையாற்றும் சி.குமாரசாமி அவர்களின் அன்புத் தந்தை**

## அமரர் கணபதி சின்னப்பு

**அவர்கள் 19.06.2005 அன்று மறைந்த செய்தியை அறிந்து துயரமடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

செயலாளரும், உத்தியோகத்தர்களும் ஊ.பி.சபை. (சி-43571)(29-14-17-15-12)
தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், ஊழியர் நலன்புரிச் சங்கம் ஊர்காவற்றுறை பிரதேச சபை.

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் துரைச்சாமி (வீரசிங்கம் - வேலணை)

முன்னாள் வேலணை கிராமசபை 8 ஆம் வட்டார அங்கத்தவரும வேலணை முடிப்பிள்ளையார் கோயில் முன்னாள் உபதலைவரும் சமூக சேவையாளருமாகிய நாகலிங்கம் துரைச்சாமி (வீரசிங்கம்) 19.06.2005 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களாகிய மயில்வாகனம் தங்கமுத்துவின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னம் அவர்களின் அன்புக் கணவரும் கருணாவதி, யோகமலர் (கொழும்பு), சந்தனரூபி (ஆசிரியர், புங்குடுதீவு மகா வித்தியாலயம்), திருக்குமரன் (U.K), சாந்தினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோதிநாதன், வசந்தன் (கொழும்பு), தேவதாஸ் (புங்குடுதீவு), திருமகள் (U.K), ராசன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற வாலாம்பிகை, புனிதவதி (வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 23.06.2005 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.கார்த்திகேசு (பெறாமருமகன்)
இல.192, அரசடி றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

*39/4, சங்கமித்தை மாவத்தை,*
*கொழும்பு -13*
*0112 470369* (36797)(29-14-12-17-15)

## செல்லையா யோகராசா (ஆசாரி)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா யோகராசா அவர்கள் 20.06.2005 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டுக்கோட்டை வீதி,*
*மணிமண்டபத்தடி,*
*நவாலி.* (36790)(29-12-14-17-15)

தகவல்:
சி.கலா (மகள்).

## கலைமலர் வெளியீடு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த சஞ்சிகையான 'கலைமலர்' வெளியீட்டு விழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் கலாசாலை ரதிலக்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'கலைமலர்' சஞ்சிகையின் ஆசிரியர் ம.பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், சிறப்புவிருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை திருமதி ஆச்சிமுத்து பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையினை யாழ்ப்பாணம், தேசியகல்வியியற்கல்லூரி உபபீடாதிபதி ஆர்.சத்தியேந்திரம்பிள்ளையும் ஆய்வுரையினை யாழ். திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ஓ-13)

## இன்றைய ஆட்டங்கள்

வடமராட்சி தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமானது.

இந்தப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 3.30 மணி காளியம்பாள் வி.க.எதிர் கரணவாய் மத்தி வி.க,

★ பிற்பகல் 4.30 மணி மகாவிஷ்ணு வி.க. எதிர் கலைமதி வி.க. (3-203)

## திருத்தம்

**சித்த வைத்திய மருந்துகள்** என்னும் தலைப்பில் நேற்றைய உதயனில், 8 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய - யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி, விற்பனை வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் விளம்பரத்தில்- **'ஆசவ அரிஸ்டங்கள'** என்பது தவறுதலாக **'அசைவ அரிஸ்டங்கள்'** என அச்சாகிவிட்டது. இதனால் விளம்பரதாரருக்கும், வாசகர்களுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய அசெளகரியங்களுக்காக வருந்துகின்றோம். (ஆ-ர்)

## திருத்தம்

நேற்றைய உதயனில், 13ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய - **திருமதி சின்னம்மா துரைசிங்கம** என்பவரது மரண அறிவித்தல் விளம்பரத்தில்-

இறந்தவரின் கணவரான காலஞ்சென்ற **அ.துரைசிங்கம்** என்பவரின் பெயர் தவறுதலாக விடுபட்டுவிட்டது. அதனையும் சேர்த்து வாசிக்கவும் - (ஆ-ர்)

## வடமராட்சியில்...

(2ஆம் பக்கம் பார்க்க)

அடையாளமாக அவர்கள் வழங்கினர்.

பேரணி இறுதியாகச் சுப்பர்மடத்தைச் சென்றடைந்தது. அங்கு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கட்டமைப்பை வழங்குமாறு வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், கே.சிவனேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் உரையாற்றினார்கள். தொடர்ந்து மகஜர்கள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனுக்கான மகஜர், தமிழீழ கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப் பொறுப்பாளர் மோகனிடமும், ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனானுக்குரிய மகஜர் வலி. வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தலைவர் இரட்ணராஜாவிடமும் கையளிக்கப்பட்டன.

வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் பொது அமைப்புகள் என்பன இணைந்து இந்த மாபெரும் பேரணியை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தன. (ஓ)

## தவறிவிட்டது

**அல்வாய் பாரதிதாசன் நூலகத்திற்கும் கரவெட்டி பிரதேச சபைக்கும் இடையில் திருமதி வசந்தகுமாரி குலநாதன் ஆகிய எனது தாலிக்கொடி தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

பாரதி தாசன் நூலகம்,
அல்வாய்.
(சி-43547)(12-14-17-15-29)


## எமது ஒறிஜினல் (CF) வீடியோ CD வெளியீடுகள்

- முத்து மண்டபம்
- ஊருக்கு உழைப்பவன்
- நல்லவன் வாழ்வான்
- சபாஷ் மாப்பிளை
- சக்கரம்
- வானம்பாடி
- வணங்காமுடி
- நிச்சய தாம்பூலம்
- அம்பிகாபதி
- 1000 தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி
- ஜகதலப் பிரதாபன்
- உதிரிப்பூக்கள்
- மல்லுவேட்டி மைனர் (36783)(12-14-17-15-29)

**வீடியோ விமல்** யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசமுத்து நல்லம்மா

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், மந்துவிலை வசிப்பிடமாகவும் தற்போது நல்லூரில் வசித்துவந்தவருமான இராசமுத்து நல்லம்மா நேற்று (20.06.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சந்தானலட்சுமி தம்பதிகளின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, நேசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவபாக்கியத்தின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற இராசமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் செல்வரத்தினம், சறோஜினிதேவி, சிவசுதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மல்லிகாதேவி, கதிர்காமநாதன் (யாழ்.போதனா வைத்தியசாலை), கமலநாதன் (ஜேர்மனி), கருணைநாதன் (ஜேர்மனி), கணேசநாதன் (டென்மார்க்), சிவரஞ்சினி, கமலரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிவகுமார், ஸ்ரீஸ்குமார், சிவானந்தன், உதயசாந்தி, பிரியசாந்தி, சிவசாந்தி, சிவசாந்தன், பிரியங்கன், அகிலங்கன், பிரியங்கா, மயூரிக்கா ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.06.2005) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 5, செட்டித்தெரு,*
*நல்லூர்.* (36798)(12-14-15-17-29)

தகவல்:
தா. கதிர்காமநாதன்.

## வைத்திலிங்கம் இராஜேஸ்வரன் (அப்புசாமி)



கோப்பாய் தெற்கு, கோப்பாய் அழகியவான் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இராஜேஸ்வரன் 19.06.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்திலிங்கத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிஐயா, சறோசினிதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் கமலேஸ்வரியின் (சுந்தரி) அன்புக் கணவரும் துஷ்யந்தி - மகேந்திரம் (லண்டன்), கிஷ்ஷன் (தரம்11, மாணவன், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரத்தின் (லண்டன்) அன்பு மாமனாரும் அஜேய்யின் (லண்டன்) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.06.2005 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய்.* (36795)(12-14-15-17-29)

தகவல்:
குடும்பத்தினர்.

## பொன்னம்பலம் செல்வராசா (செல்வம்)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் செல்வராசா (செல்வம்) நேற்று (20.06.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் குணரத்தினத்தின் மகனும் புஷ்பமலரின் அன்புக் கணவரும் செல்வலதா (சுவிஸ்), செல்வகுமார் (மாவீரர் மேஜர் நளன்), லதிக்கா (மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோன்மணியின் மருமகனும் கனகசபாபதி, புலேந்கநாதன், சிவராசா, நந்தகோபன், யோகேந்திரராசா (ஜேர்மனி), காலஞ்சென்ற பரமானந்தம், ஜெயலச்சுமி, கலாதேவி ஆகியோரின் சகோதரனும் தர்மராசா (சுவிஸ்), உதயகுமார் (சுவிஸ்), கலைமகள், உதயகுமாரி, ரவிக்குமாரி (சுவிஸ்), வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு சுதுமலையில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை கிழக்கு,*
*மானிப்பாய்.* (36796)(12-14-17-15-29)

தகவல்:
பா.குகநேசன் (கோணேஸ்)
சகலன் திருநெல்வேலி சந்தை வியாபாரி

## கந்தசாமி கிருபாகரன்

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி - கிருபாகரன் நேற்று (2005.06.20) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி இராசம்மா ஆகியோரின் பாசமிகு மகனும் சரோசாதேவியின் பாசமிகு கணவரும் கஜனின் பாசமிகு தந்தையும் கமலாதேவி, அருளானந்தசிவம் (ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி), நந்தகுமாரன் (உரிமையாளர், கலைமகள் வர்த்தக நிலையம், யாழ்.), செல்வமலர் (ஆசிரியர், யாழ்.கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை), சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் குமாரசாமி, தாரணி, ஐஸ்வரியராணி, சற்குணராசா, பேரம்பலம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் நீலகிரி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி மகன் க.நந்தகுமாரன்
சகோதரன் (கலைமகள் வர்த்தக நிலையம், யாழ்ப்பாணம்).

*கருங்காலி,*
*காரைநகர்.* (36794)(29-12-14-17-15)

## துரையப்பா கந்தசாமி

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா கந்தசாமி அவர்கள் 19.06.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தொட்டிலடி துரையப்பா -சிவக்கொழுந்து தம்பதியினரின அருமைப் புதல்வனும் தங்கேஸ்வரி (ஆயுர்வேத வைத்தியர்) அவர்களின் அன்புக் கணவரும் தசரூபனின் (A/L கணிதப்பிரிவு மாணவன், மன்னார் சித்திவிநாயகர் ம.வித்.) அன்புத் தந்தையும் சரஸ்வதி, நாகேஸ்வரன் (சந்திரன்), திலகவதி (பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகாதேவன், தனராஜ், சாரதா, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊரியான் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி மேற்கு,*
*கைதடி.* (36768)(29-12-14-15-17)

தகவல்:
தங்கேஸ்வரி (மனைவி),
தசரூபன் (மகன்).

# நயினை படகுப் பயணத்துக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்21

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்துக்குச் செலவோரின் பாதுகாப்புக் கருதி விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஆலய நிறைவேற்று உத்தியோகத்தர் நா.யோகநாதன் தெரிவித்தார்.

நயினாதீவுக்கான பயணிகள் படகுப் போக்குவரத்தின்போது பிரத்தியேகப்படகு ஒன்று கடலில் நடமாடும் என்றும் -

அந்தப்படகில் பாதுகாப்புச் சாதனங்களுடன் நீச்சல் வீரர்கள் இருப்பார்கள் என்றும்-

துரதிஷ்டவசமாக அனர்த்தம் ஏற்பட்டால் கடலில் தத்தளிப்பவர்களை இந்த நீச்சல் வீரர்கள் காப்பாற்றுவார்கள் என்றும் நிர்வாக அலுவலர் மேலும் தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்களின் உதவியுடன் இந்தப் பாதுகாப்புச்சேவை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார். (ஒ-13)

## மருதானையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீ 56 ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 41 ரவைகளும், விமானப் படையினர் பயன்படுத்தும் ஒரு சீருடையும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்றுக்காலை மேற்படி சந்தேகத்துக்குரிய பொதி தொடர்பாகப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்தவுடன் மருதானை தொழில்நுட்பச் சந்தியை ஒட்டிய அனைத்துப் பாதைகளும் மூடப்பட்டன. இதனால், காலை 1030 மணி வரை அப்பகுதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. குண்டு கண்டுபிடிக்கப்பட்ட இடத்துக்கு அண்மித்த பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் பொலீஸாரும், இராணுத்தினரும் ஈடுபடுத்தப்பட்டனர்.

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்த்தி வந்த ஆயுததாரிகள் அசோகனை சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என வவுனியாப் பொலீஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரிலிருந்து மேற்கே 13 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது தாளிக்குளம். அங்குள்ள வீடமைப்புத் திட்டத்தில் நேற்று மதியம் 12.30 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஓட்டோ சாரதியான அசோகன் 5 பிள்ளைகளின் தந்தை யாவார்.

இவரது ஓட்டோவினை வாடகைக்கு அமர்த்திச்சென்ற இருவர் இவரை 9 மி.மீ. கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பியுள்ளனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர். அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச்செல்லும்போது சிறுமி ஒருத்தி அதனை நேரில் கண்டுள்ளார் எனவும் அவர்கள் கூறினர்.

ஓட்டோவில் கிடந்த அசோகனின் சடலத்தை பொலீஸார் சென்று பார்வையிட்டபோது ஓட்டோ இயங்கிய வண்ணமே இருந்துள்ளது. சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா மாவட்டப் பொலீஸ் அத்தியட்சகர் ஏ.எஸ். ஆனந்த திப்பெட்டுவவ சடலத்தினை வவுனியா பொதுமருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப் பணித்தார்.

சம்பவத்தினை நேரடியாகப் பார்த்ததாகத் தெரிவிக்கப்படும் சிறுமியிடமும், சம்பவம் இடம்பெற்ற பகுதியில உள்ள வீடுகளிலும் விசாரணையினை மேற்கொள்ளுமாறும் அவர் உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் இரவும் புளொட் உறுப்பினர் ஒருவர் வவுனியா கோவில் குளம் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.(க)

## சிவராம் கொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைநாதன் அல்லது ராகவன் என்ற நபரை விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ராகவனுக்கு எதிராகப்போதுமான சாட்சியங்கள் இல்லாத காரணத்தினாலேயே அவரை விடுவிப்பதற்கு உத்தரவிடுமாறு கொழும்பு குற்றத் தடுப்புப் பொலீஸ் பிரிவினர் நீதிமன்றத்தைக் கோரியிருந்தனர். அதனைத் தொடர்ந்தே அவர் விடுதலை செய்யப்பட்டார். (க)

## முஸ்லிம்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் கைச்சாத்திடுகின்றபோது நாங்கள் விரும்பாத அம்சங்கள் அந்த உடன்பாட்டில் உள்ளடக்கியிருக்கும் என்பது சாத்தியமான ஒரு விடயம் அல்ல. எனவே, நாம் கைச்சாத்திடுவதாக இருந்தால், நாங்கள் அந்த ஆவணத்திலே ஒருசில அம்சங்களுக்குத் திருத்தங்கள் சமர்ப்பித்தால் அவையும் ஏற்றுக்கொள்ளுகின்ற ஓர் உடன்பாடு காணப்படவேண்டும்.

முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவத்தைத் தருவோம் எனச் சொல்வதை ஏதோ பெரிய பரோபகாரம் மாதிரி - அவர்களின் பெருந்தன்மையைக் காட்டுகின்ற மாதிரி - கதைக்கிறார்கள். இது முஸ்லிம்களை அவமானப் படுத்துகின்ற விடயம்.

பிரதிநிதித்துவத்தைத் தருவது என்பது விடுதலைப் புலிகளோ, அரசோ எமக்குத் தட்டில் வைத்துத் தரவேண்டிய அவசியமில்லை. அது அவர்கள தந்தேயாகவேண்டும் என்பது ஒரு நியதி.

இது எம்மைப் பொறுத்தமட்டில் அபத்தமானது. இதற்கு மக்களின் எதிர்ப்பலைகள் மிகமோசமாக வெடிக்கும் என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும் - என்றார் ஹக்கீம். (ஒ-13)

## ஐ.தே.க.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளனர்.

ஜே.வி.பியின் இந்த அழைப்பை ஏற்று அவர்களுடன் கலந்துரையாட ஐ.தே.க உயர்மட்டம் விரும்பிய போதும், ஜே.வி.பியுடன் இணைந்து எந்தவிதமான அரசியற்செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை என அந்த மட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

நேற்று ஐ.தே.கவின் குழுக்கூட்டம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. அக்கூட்டத்திலும் ஜே.வி.பியின் இந்த அழைப்பு குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஜே.வி.பியுடன் இடம்பெறும் பேச்சுக்களில் ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான முயற்சிகள் குறித்து மட்டுமே ஆராய்வது என்றும் ஐ.தே.க. மட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாம். (க)


C.B COMPUTER ACADEMY

Kondavil, Jaffna. T.P.No :- 021-4590291

A/L(2006/2007) மாணவர்களே!

GIT (Pascal)

இவ்வருடம் August மாதக் கடைசியில் நடைபெறவுள்ள GIT பரீட்சைக்கு அதிகபுள்ளி பெற்றுக்கொள்ளக்கூடிய 'pascal program' ஆரம்பமாகின்றது.

| Days | Batch | Time |
|---|---|---|
| Monday Wednesday Friday | I | 3.00 p.m. |
| | II | 6.00 p.m. |
| Saturday | I | 11.00 A.m. |
| Sunday | II | 5. 30 p.m. |

Fees one hour:- 20/=

START -24.06.2005

- பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
- ஏனைய GIT பாடங்கள் இதிலிருந்து தொடர்ந்து நடைபெறும்.
- ஆற்றல், தகுதி, அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் விரிவுரைகள் மேற்கொள்ளப்படும்.
- அரச அங்கீகாரம் பெற்ற தகவல் தொழில் நுட்ப சான்றிதழைப் பெற்றுக்கொள்ள GIT பரீட்சையில் அதிக கவனம் செலுத்துங்கள்.

(36776)(29-17-15)


## செய்தி துளிகள்

வவுனியா, குருமன்காடு காளி கோயில் பகுதியில் நேற்று ஒருவர் வெட்டிக்கொல்லப்பட்டார்.

வவுனியாவில் கடந்த 24 மணி நேரத்தில் நடந்த மூன்றாவது கொலை இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

★ ★ ★

சேருவில காட்டுப் பகுதியில் நேற்று ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டார்.

வோல்க்சி குடியேற்றக்கிராமத்தில் வசிக்கும் இந்த நபர் மனைவி, பிள்ளைகளுடன் காட்டுக்கு விறகு எடுக்கச்சென்றபோது கடத்தப்பட்டுள்ளார்.

## கண்டிப்பான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துச்சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

யாழ். நகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இறுதியில் பின்வரும் நடைமுறைகளை எதிர்வரும் முதலாம் திகதி முதல் கண்டிப்பாக அமுல்செய்வது என முடிவு செய்யப்பட்டது.

அந்த நடைமுறைகள் வருமாறு:-

★ யாழ். நகருக்கு வரும் வட பிராந்தியப் போக்குவரத்துச்சபையின் சகல பஸ்களும் ஆஸ்பத்திரி வீதி ஊடாகவே நகருக்குள் பிரவேசிக்கவேண்டும் -

★ வலிகாமம், வடமராட்சிப் பிரதேசங்களில் இருந்து வரும் தனியார் பஸ்கள் யாவும் ஸ்ரான்லி வீதியில் இலங்கை வங்கிக்கு அருகில் உள்ள வீதி ஊடாக நகருக்குள் பிரவேசிக்க வேண்டும்.

★ நகரில் பயணிகளை இறக்கிய பின் சகல மினிபஸ்களும் முற்ற வெளியில் அமைக்கப்படும் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் நகரில் ஒவ்வொரு இடத்துக்கும் செல்வதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே தரித்துநின்று பயணிகளை ஏற்றவேண்டும்.

★ நகரில் இருந்து வெளியே செல்லும் சகல வாகனங்களும் கஸ்தூரியார் வீதியையே பயன்படுத்த வேண்டும்.

★ கஸ்தூரியார் வீதி காங்கேசன் துறைவீதி, முனீஸ்வரன்வீதி ஆகியன ஒரு வழிப் பாதைகளாக்கப்படும்.

இந்த நடைமுறைகளுடன் ஹெல்மெட் அணியாமல் மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள், வாகன ஆவணப்பத்திரங்கள் இன்றிச்செல்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தீவிரப் படுத்தப்படும். (ஐ-3)

## மேல்மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. அரசுக்கான தனது ஆதரவை வாபஸ் பெற்றுக்கொண்டதையடுத்தும் -

அதனால் மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே தமது பதவியை இராஜினாமா செய்ததையடுத்தும்-

இந்த முயற்சியில் ஐக்கிய தேசிய கட்சி தீவிரமாக இறங்கியிருக்கிறது. மேல் மாகாணசபையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 59 ஆசனங்களுடன் ஆட்சியமைத்திருந்தது. இப்போது ஜே.வி.பி மாகாண ஆட்சியிலிருந்து வெளியேறியதையடுத்து தனது 23 ஆசனங்களுடன் (உறுப்பினர்களுடன்) எதிர்க்கட்சி தரப்பில் அமர்ந்து சுயாதீனமாகச் செயற்படுவதற்கு ஜே.வி.பி.முடிவு செய்துள்ளது. இதன் விளைவாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு மேல் மாகாண சபையில் ஆக 36 உறுப்பினரே எஞ்சியுள்ளனர்.

தற்போதைய நிலைமை தொடர்பில் நேற்று உதயனுக்குக் கருத்துத் தெரிவித்த மேல்மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கித்சிறி கஹட்டபிட்டிய, மேல் மாகாண சபையில் ஐ.தே.க. 39 உறுப்பினர்களைக் கொண்டு பெரும்பான்மையாக இருப்பதால் முதலமைச்சர் பதவி தமக்கு வழங்கப்பட வேண்டியதே நீதியாகுமென்று கூறினார்.


புதிய பிரிவுகள்

G.A.Q., B.A.

(யாழ்.பேராதனை)

A/L 2007,2006 மீட்டல்

Tam. M.சுரேஸ்

H/C. கந்தசத்தியதாசன்

Po.Si. T.திருமுருகன்

Geo. S.கிருஸ்ணா

Dra. I.சத்தியா

ஆரம்பம்: 22.06.2005 -4.00 p.m.

திகழ் கல்வி நிறுவனம் K.K.S. வீதி, இணுவில்.

(36758)(29-17-15)

கருத்தரங்கு

பொதுச் சாதாரண தரப் பரீட்சை - 2005 எதிர்பார்க்கும் வினாக்கள்

T.திருமுருகன்

புதன், வியாழன் (22,23) காலை 9.00-11.00

D.C.S. நியூட்டன் யாழ்நகர்.

மாலை -4.00-6.00

திகழ் கல்வி நிறுவனம் K.K.S. வீதி, இணுவில்.


# தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புதிய தலைவராக இராஜநாதன்

காரைதீவு, ஜூன் 21

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புதிய தலைவராக திருகோணமலை விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் நா.இராஜநாதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளர். இதுவரை தலைவராக இருந்தவரான சி.தண்டாயுதபாணி வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச்சென்றதனால் சங்க யாப்பின்படி அத்தலைவர் பதவி வறிதானது.

இதனைத் தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்சி மன்றக் கூட்டத்தில் புதிய தலைவர் தெரிவுசெய்யப்பட்டார்.

மேலும் துணைத்தலைவர் (பெண்) பதவிக்கு திருமதி ஜீ.மகேந்திரா, துணைப் பொதுச்செயலர் (பெண்) பதவிக்கு திருமதி ஜீ.அருந்ததி, துணைப்பொதுச்செயலர் பதவிக்கு என்நாகேந்திரராஜா ஆகியோரும் வெற்றிடமாயிருந்த இரு செயற்குழு உறுப்பினர் இடங்களுக்கு எஸ். கீதபொன்கலனும், திருமதி மகேந்திராவும் தெரிவுசெய்யப்பட்டனர் (ஒ-84)

## பெரும்பான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பில் மேல்மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர் கித்சிறி கஹட்டபிட்டிய மாகாண ஆளுநர் அலவி மௌலானாவிற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். நேற்றுக்காலை இந்தக் கடிதம் கிடைக்கப்பெற்றதாக மேல்மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது.

மேல்மாகாணசபையில் ஜே.வி.பி. ஆளுங்கட்சியிலிருந்து வெளியேறியதையடுத்து மாகாணசபையின் ஆட்சி ஸ்திரமற்ற நிலைக்குப் போயுள்ளது. மாகாண முதலமைச்சர் பதவி விலகியுள்ள சூழ்நிலையில் மாகாணத்திற்கு புதிய முதலமைச்சர் ஒருவர் நியமிக்கப்படுவதாயின் சபையின் பெரும்பான்மைப்பலம் கவனத்திற்கொள்ளப்பட வேண்டுமென்று மேல்மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர், ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்காக மாகாண சபையில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுமாறும் அவர் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-க-13)

## ஹெல்கிஸன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரையும் சந்திப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார் எனினும் இந்தச் சந்திப்புக்காக கொழும்பில் உள்ள நோர்வேத்தூதரகம் ஜே.வி.பி.கட்சியின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோதும் ஜே.வி.பியினரிடமிருந்து சாதகமான பதில் ஏதும் தெரிவிக்கப்படவில்லை எனத் தெரிய வந்தது.

ஹெல்கிஸனின் இந்த விஜயத்தின் போது அவர் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனைக்குச் செல்லவும் திட்டமிட்டுள்ளார். எனினும அது தொடர்பான நிகழ்ச்சிநிரல் இறுதி செய்யப்படவில்லை என்று நோர்வேத் தூதரகம் தெரிவித்தது. (க)

## மின்சார நிலைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருக்கும் பகுதியை, மினிபஸ் தரிப்பிடம் அமைக்கத் தருமாறு மாநகரசபை நிர்வாகம் படைத்தரப்பிடம் கேட்டிருந்தது.

இது விடயமாக மாநகரசபை அதிகாரிகள் பொலீஸ் தரப்பிடமும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

நகரில் அமைந்துள்ள படையினரின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் குறிப்பிட்ட வீதியை விட்டுக்கொடுக்க முடியாது என்று படை அதிகாரிகள் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

நகரின் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராய நேற்று நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இராணுவத்தின் இந்த நிலைப்பாட்டைப் பொலீஸ் தரப்பினர் வெளியிட்டனர். (ஐ-3)

## ஜே.வி.பி. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் குருநாகலை வைத்தியசாலையிலும் மற்றையவர் கிரியோவாவ வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிரியோவாவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அதிகாரம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வசமேயுள்ளது. இவ்விருசாராருக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்துவற்காக வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் சேருவில் அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் சாந்த ரணவீரவின் வாகனமும் தாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தின் போதுசப் - இன்ஸ்பெக்டர் ஒருவரும், இராணுவச் சிப்பாய் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

## பொதுக்கட்ட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுவிட்டது நீண்டகால முயற்சியின் மூலம் இது தயாரிக்கப்பட்டு இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. இனி அதில் மூன்றாம் தரப்பைச் சேர்ப்பதற்காக, பேச்சு நடத்தி, இழுத்தடிப்பதற்கான வாய்ப்பு இல்லை.

பேசி இணக்கத்துக்குவந்த இரண்டு தரப்புகளுமே ஒப்பமிடமுடியும் இனி மேல் அதில் மாற்றம் செய்வதற்கு காலஅவகாசமோ சந்தர்ப்பமோ இல்லை. இப்படித் திட்டவட்டமாக ஹெல்கிஸன் கூறினார். என அறிய வந்தது.

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களும் ஒரு தரப்பாக சேர்ப்படாவிட்டால் முஸ்லிம் அமைச்சர்கள் அரசிலிருந்து வெளியேறுவதைத் தவிர வேறுவழியில்லை. என்று முஸ்லிம் அமைச்சர்கள் பலர் அண்மைக்காலத்தில் பரபரப்பான அறிக்கைகள், அறிவிப்புகள் வெளிட்டுவந்த பின்னணியில் யதார்த்த நிலைமை இப்போது தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் எம்.பிக்கள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் போன்றோரை அமைச்சர் பேரியல் அஷ்ரப் நேற்றிரவு அழைத்து மந்திராலோசனை நடத்தினார். அந்தக் கூட்டத்தில் இவ்விடயமே முக்கியமாகப் பேசப்பட்டதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## ஈ.பி.டி.பி. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டில் 38 வயதுடைய அழகையா ரவிச்சந்திரன் என்பவரே மரணமாகியுள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று, வாச்சிக்குடாவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், நேற்றுமுன்தினம கொழும்பிலிருந்து மொனராகலையில் உள்ள தனது உறவினரின் வீட்டிற்குச் சென்றுள்ளார். அங்கிருந்து அக்கரைப்பற்றிலுள்ள நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும் தனது மனைவி, பிள்ளைகளைப் பார்க்கச் செல்வதாக அவர் உறவினர்களிடம் கூறியிருக்கிறார் எனப் பொலீஸார் தெரிவித்தனர். அதன் பின்னர் அவரைக்காணவில்லை.

ஞாயிறு இரவு அவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

சடலத்தின் தலையிலும், கழுத்திலும், மூன்று கத்தி வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.எம்.மொஹிதீன் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தினார். அக்கரைப்பற்று பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதீஸ் கமகே விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.


இடமாற்றம்

The Barbara Mulvaney Computer Training Centre

123, Temple Road, Jaffna எனும் முகவரியில் நடைபெற்று வந்த எமது நிறுவனமானது 01/07/2005 தொடக்கம் 121/1, Arasady Road, Kandarmadam, Jaffna எனும் முகவரியில் வகுப்புக்கள் அனைத்தும் வழமை போல் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


T.P -222 5971 நிர்வாகம்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
# தேர்த்திருவிழாச் சிறப்புமலர்-2005

# நயினை அம்பிகையின் புகழை எவர் பாடினும் அவர்களுக்கு நலன்கள் அனைத்தும் கைகூடும்!

**நாம்** பெற்ற அறிவும் ஞானமும் கடவுளை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்பது நாவலர் பெருமானின் நல்வாக்கு. இறைவனை வழிபடும்முறைகளில் மிகச்சிறந்தது இறைவனின் புகழைப் பாடி பரவுதலேயாகும். சமயக் குரவர்களும் சான்றோர்களும் இறைவனைப் பாடிப் பரவியே முத்தியடைந்ததாக வரலாறு கூறுகின் றது. உன் நாமம் என் நாவில் மறந் தறியேன் என்று பாடினார் அப்பர். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சம் என்பதும் ஞானிகளின் கூற்று. நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லும் நா. நமச்சிவாயவே என்பது சுந்தரர் கூற்று. நாராயணா என்னாத நா என்ன நாவே என்பது ஆழ்வார் திருவாக்கு. இறைவனே எனக்கு அருச்சனை பாட்டேயாகும். எனவே, நம் மேல் சொற்றமிழ் பாடு எனக் கூறியதாகப் புராணங் கூறுகிறது. பாடும் பணியே பணியாய் அருள்வாய் என்பது அருணகிரி வாக்கு.



இங்ஙனம் இறைவன் புகழ்பாடி அவன் அருள் பெறுவதே இலகுவான வழியென நம் முன்னோர் கண்டறிந்தனர். இன் றும் பஜனை மன்றங்கள் பாடிப்பரவி வழிபடும் முறையைப் பின்பற்றி வருகின்றனர். பண்டைய ஆலயங்களில் கோயில் அர்ச்சகருடன் ஓதுவார் மூர்த்திகளும் நியமிக்கப் பட்டு தமிழோடிசைபாடி இறைவன் புகழ் பரப்பியதை நாம் அறிவோம்.

இந்தவகையில், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பேரில் அன்பர்கள் - அடியார்கள் புலர் பல்வேறு காலங்களில் நாவினால் பாடிப்பரவியுள்ளனர். அவ்வாறு பாடிப்பரவிய அன்பர்களில் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டு அமரத்துவ மடைந்துவிட்ட புலவர்களின் நாவில் நாகபூஷணி அம்மன் எவ்வாறு இடம்பெற்றாள் என்பதை மட்டும் சுருக்கமாக விளக்குவதே இக்கட்டுரை என்பதைப் பணிவுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

நயினாதீவு மக்கள் வாக்கு வல்லமையையும் பண்ணொன்ற இசைபாடும் வல்லமையும் உடையவர்கள் என்பது பொதுவான கருத்து. இக்கருத்து அம்பிகை கொடுத்த அருட்பிரசாதமேயன்றி வேறு யாதும் இல்லை. நான் எடுத்துக் காட்டும் புலவர்கள் - இலக்கண இலக்கியம் கற்றோ அன்றேல் பட்டம்பெற்றோ அல்லது காரிகை கற்றுக் கவிபாடியவர்கள் அல்லர். சுயமாகவே அம்பிகை அருளாலே பாடலைப் பாடியவர்கள். இவர்களைச் சாதாரணமாக வரகவிப் புலவர்கள் என்று கூறுவதுண்டு. இவ்வாறு புலமைபெற்றவர்களில் குறிப்பிடத்தகுந்தவர் நயினை வரகவி நாகமணிப் புலவர் ஆவர். ஈழத்துப் புலவர் சரிதத்தில் இடம்பெற்ற இப்புலவர் நயினை நீரோட்டமாக அந்தாதி, நயினை மான்மியம், வழிநடைச்சிந்து என்ற நூல்களை இயற்றியுள்ளார். இதில் நயினை மான்மியம் மட்டும் அச்சேறவில்லை. கூடிய விரைவில் அது அச்சுவாகனம் ஏறும் என எண்ணுகின்றேன். அவர் பாடிய நீரோட்ட+யகம +அந்தாதி கற்றவர்களுக்கெல்லாம் பெருவிருந்தாக அமைந்துள்ளது. அவர் பாடிய தனிப் பாடல் ஒன்றை மட்டுந் தருகின்றேன்.

"பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலால் அன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும்
உதவலால் அன்னை எக்கலையும்
சொற்றதாலன்னை உலகொடுவானும்
தொழுதலால் அன்னையென்றென்றும்
பற்ற தாங் கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியாள்"

அடுத்து நமது சிந்தைக்கும் வணக்கத்திற்கும் உரியவர் ஈழத்துச் சித்தர் வரிசையில் வைத்து எண்ணப்படும் ஸ்ரீலஸ்ரீ முத்துக் குமாரசுவாமியார் அவர்கள். நம்மிடையே வாழ்ந்து 1948 ஆம் ஆண்டளவில் சமாதி அடைந்தவர். அவரின் சமாதிக் கோயில் நயினாதீவு காட்டுக் கந்தசாமி கோயிலின் புறத்தே அமைந்துள்ளது. அவர் நாகபூஷணி அம்மன் பேரில் பல பாடல்களை இயற்றியுள்ளார். அவரியற்றிய பாடலில் ஒன்று பின்வருமாறு.

"கற்றவர்க்கினியாய்நயினைப்பதிவாழ்காரணிநாரணன்தங்காய்
மற்றவரறியா மரகதவரையின் வாமமே வளர் பசுங்கொடியே
நற்றவரோடு சேயெனை இருத்தி நாதநாதாந்தமுங்காட்டி
முற்றுமாய் நிறைந்த பூரணானந்த முத்திதா
நாகபூஷணியே"

அடுத்து ஈழத்து இல்லறஞானி எனப் போற்றப்படும் நயினாதீவில் பிறந்து உலகப் புகழ் பெற்ற சமயவாதியாக விளங்கிய திரு.க.இராமச்சந்திரா அவர்கள் இவர் ஆத்மஜோதிப் பத்திரிகையின் போஷகராக இருந்து புகழ் பூத்த மைந்தர்களைப் பெற்ற இல்லறஞானியாவார். அவர் அம்பாள் பேரில் பாடிய பாடலில் ஒன்றைமட்டுமே ஈண்டு குறிப்பிடுகிறேன்.

"அருளுருவாய் அனைத்துயிர்க்கும் அன்னையாகி
ஐந்தொழில்கள் புரி ஆதிசத்தியே நின்
கருணையின்றின் கணக்கிலாக் கஷ்டமுற்றுக்
கதறிநிற்கும் உயிர்களுளத் தின்று சூழ்ந்த
இருளகல வழியேதும் இல்லையென்று
ஈடற்ற உறுதியுடன் இந்த ஏழை
உருகி நின்றுன் சந்நிதியில் கேட்டயாவும்
உவந்தளிப்பதுன் கடமை ஒப்பில் தாயே"

அடுத்தபடியாக நயினாதீவு மக்களால் குட்டிப்பிள்ளை எனச் செல்லமாக அழைக்கப்பட்ட வரகவி தியாகர் இராமச்சந்திரர் ஆவார். பண்ணோடு இசைபாடும் வல்லமையுடன் கந்தபுராணம் முதலிய நூல்களுக்குப் பொருள் விளக்கம் செய்யும் பேராற்றல் பெற்றவராக இருந்தவர். யாழ்ப்பாணக் கோயில்களில் இவரின் புராணபடன உரைவிளக்கம் கேட்கப்பலர் கூடி நிற்பர். இவர் அம்பாளைப் பற்றிப் பல பாடல்கள் இயற்றியுள்ளார். அவை ஆழ்ந்த கருத்துடையவை நயினை நாகபூஷணியின் தெய்வீகப் பெருமைக்கு ஐந்து காரணங்களைக் காட்டியுள்ள அன்னாரின் பாடலை இங்கு தருகின்றேன்.

"மன்னு சீயர் இலங்காபுரியிலம்பிகை நின்
மாபெரும் புகழுக்கு இலக்காய்
இன்னல் மேவிய நல்லரவு சுற்றியகல்
இருஞ்சிறைக் கருடன் மேவிய கல்
இன்ன பாஷையதென் றறிவுறா எழுத்தால்
இலங்கு கற்சாதனம் இரண்டு
தன்னை நேரிலா நின் உருவெனும் ஐந்தும்
சாட்சியாம் நாகபூஷணியே"

இப்பாடலை இயற்றிய அவர்கள் வாலிப வயதில் இறையடி எய்தியமையினால் அவரின் பெருமையை இக்கால மக்கள் அறிய முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

அடுத்ததாகக் கவிகஸ்தூரி என்ற புனை பெயரில் பல்வேறு பாடல்களைப் பாடிய திரு.ஆ.இராமுப்பிள்ளை அவர்கள். இவர் ஆயுள்வேத வைத்தியர். இவர் நயினை நாகபூஷணியின் திருக்கோலக்காட்சியும் அவள்



மாட்சியும் என்ற ஒரு சிறு நூலையும் வெளியிட்டவர். அத்துடன், ஆயிரக்கணக்கான சமரகவிகளையும் பாடியவர். இவரும் அம்பாள் பேரில் பாடிய செய்யுளில் ஒன்றை ஈண்டு தருகின்றேன்.

"ஆணிப் பொன் முத்தெனும் மாலை சூட்டி அருகினிலே
பேணிப் பயந்த புத்துரரோடிந்தப் பெண்ணரசை
மாணிக்க இரத்தினம் வைத்தே இழைத்திட்ட வாகனத்திற்
காணிற் கவலை கலைந்தோடிடும் பல காதங்களே"

மற்றும் விவேகானந்தா அச்சகத்தின் உரிமையாளராக இருந்த திரு.வே.செல்வ நாயகம் அவர்களும் அம்பாள் பேரில் பல பாடல்களை இயற்றியுள்ளார். அவ் இயற்றிய திருவிரட்டை மணிமாலை என்னும் நூலில் அம்பாளைப் பின்வருமாறு துதிக்கின்றார்.

"சரணம் சரணம் என உனைச் சார்ந்திலன் தாரணிமேற்
கரணம் முன்செல்ல அதன்பினர்ச் செல்லுங் கதியிலிருக்கும்
மரணம்பவமற்றிருக்கவும் நாள்வந்து வாய்த்திடுமோ
அரணஞ்சிறந்த நயினையில் வாழ்அருள் அம்பிகையே"

அடுத்ததாக சமீபகாலத்தில் சிவபதமடைந்த வித்துவான் காமாட்சி சுந்தரம் அதிபர் அவர்கள் அம்பாள் பேரில் பல பாடல்களை இயற்றியுள்ளார். நாடக நடிகரும் புலமை வாய்ந்தவருமான அவர் பாடிய பாடல்களில் ஒன்றை இதன் கீழ்த் தருகின்றேன். இப்பாடல் இவரால் பாடப்பெற்று அச்சுவாகனம் ஏறிய நயினாதீவு நாகபூஷணி அம்மன் திருவந்தாயில் இருந்து எடுக்கப்பட்டது.

"அற்புதமான அருளுடையாள் அருள்
நோன்பினர்க்கே
சற்குணமான நற்புத்திரபாக்கியம்
தானளிப்பாள்
முற்றிய நோய் நனி தீர்ந்திடுவாள் மூலை
மூர்த்தியருட்
பொற்பதம் போற்றிடுவார் பெறுவார் பலபோகமுமே"

மேலே அம்பிகையைப் பற்றி கவி புனைந்து அமரத்துவமடைந்த நயினைப் புலவர்களின் வரலாற்றினை ஓரளவு குறிப்பிட்டேன். அத்துடன், தற்போது சீவியவந்தராக இருக்கும் கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை, பசிக்கவி சி.பரராசசிங்கம், அருட்கவி வே.தருமலிங்கம், கவிஇராகுலம், சைவப்புலவர் நா.விசுவலிங்கம், ஆகியோரும் அம்பாள் பேரில் பல பாடல்களை யாத்துள்ளனர். அவற்றினைக் குறிப்பிடுவதனால் இக்கட்டுரை விரிவடையும் என்பது பற்றி பாடல்களைக் குறிப்பிடவில்லை. இவர்களின் பாடல்களைப் பத்திரிகைகளிலும் புத்தகரூபமாகவும் பார்வையிட லாம். அத்துடன், நயினாதீவு யாத்திரிகர் தொண்டர் சபையாரும் 'தேவி [illegible]திரத் திரட்டு' என்னும் பெயரில் நூல்களை வெளியிட்டுள்ளனர். விரிவஞ்சி அப்பாடல்களை இங்குகுறிப்பிடவில்லை. இதன்றியும் வேறுபல நயினாதீவு அன்பர்களும் அம்பாளைப் பற்றிப் பாடியுள்ளதாக அறிகிறேன் அவை நூல்வடிவில் அமையாதபடியால் இங்குகுறிப்பிட முடியவில்லை. சொப்பனத் தாண்டகம் என்று நூலும் அம்பாளைப் பற்றியதே. மேலே குறிப்பிட்ட நயினைப் புலவரைத் தவிர யாழ்ப்பாணம் முத்துக்குமாரப் புலவர், அமரசிங்கப் புலவர், வேலணையூர் தம்பு உபாத்தியர், காவலூர்க் கவிஞர் போன்றோரும் அம்பாள் பேரில் பல பாடல்களை இயற்றியுள்ளார்கள். இவை அச்சுவாகனம் ஏறியுள்ளன கண்டுகொள்க.

இறுதியாக கவியோகி சுத்தானந்தர் நயினாதீவிற்கு விஜயஞ்செய்தபோது அம்பாள் சந்நிதியில் இருந்து பாடிய ஒரு பாடலுடன் இக்கட்டுரையினைப் பூர்த்திசெய்கிறேன்.

**"உலகநாயகி உத்தமி நாயகி**
**இலகு சக்தி இறைவிமனோன்மணி**
**நலிவு தீர்த்து நலந்தரும் அம்மையே**
**பொலிவுறச்செய்புதுயுக வாழ்க்கையே"**

★★★★★★★★★★★★★★★★★

சைவப் புலவர்,
சித்தாந்த பண்டிதர்,
**அமரர் நா.விசுவலிங்கம்**

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

## தேர்த்திருவிழாச் சிறப்புமலர்-2005

### ஓடோடி வந்தவளின் ஒளி முகத்தைக் காண்பர்!

கடலலைகள் ஓடிவந்து காலடியைத் துதிக்கும்
கண்ணெனவே தாயவளைக் கண்டுமனம் இனிக்கும்
உடன்வந்து துயர்துடைக்கும் உலகத்து நாயகி
உற்ற துணை வாழ்வினிலே உலகறிந்த உண்மை
கடன் தீர்ப்பர் பக்தரெல்லாம் கடல்கடந்து வந்து
கண்ணகையின் கண்ணொளியைக் கண்டுமனம் மகிழ்வர்
உடன் நிகழும் அற்புதமே உண்மையிதை உணர்வர்
ஓடோடி வந்தவளின் ஒளிமுகத்தைக் காண்பர்.

கவிஞர் வ. யோகானந்தசிவம்

### வலம் வருவாள்! வரம் தருவாள்!

கோமுகித் தீவினிலே! கோமகள் கோலமம்மா!
கோடானு கோடி மக்கள் கொண்ட துயர் தீருமம்மா!
புவன மெங்கும் பூத்து நிற்கும் புவனேஸ்வரி பீடமம்மா!
புகழ் கொண்ட உன் கருணை புரையோடிப் பரவுதம்மா!
கால மெல்லாம் பாத பூஜை கடலலையால் பெறுபவளே!
காத்தருள்வாய் கால மெல்லாம் கதியற்ற மக்களையே!
ஆதி மூல வரலாறே! ஆழ் கடலின் ஆதியம்மா!
ஆரணியாள் ஆலயத்தில் அளவற்ற பக்தர் வெள்ளம்!
அரவமதன் அர்ச்சனையால் அன்னையகம் ஆனந்தமே
அந்தமது அற்றவனே! பந்த மதைச் கொண்டவளே!
வரலாற்றை கூறிநிற்கும் வடிவமைந்த இரதமம்மா!
வடிவாம்பிகை வருகின்றாள்! வலம் வருவாள்! வரம் தருவாள்!

நயினை தர்சிகா - தயானநேசன் -

இன்று தேரேறும் நயினை நாகபூஷணித் தாயே!
நல்லருள் புரிவாயம்மா நாடிவந்த எம்மவர்க்கு!!

SOLAX OPTICAL
சொலெக்ஸ் ஒப்ரிக்கல் & டென்ரல் வேக்ஸ்

* உங்கள் கண்களை மிகத்துல்லியமாக இலவசமாகப் பரிசோதித்து நவீன வடிமைப்பிலான பிறேம்களில் பொருத்திப் பெற்றுக்கொள்ளவும்.
* நவநாகரிக சண்கிளாஸ் மற்றும் மாபிள் கண்களைப் பெற்றுக்கொள்ளவும்.
* பல் சம்பந்தமான சகல ஆலோசனைகளைப் பெற்று சங்குப் பற்களை விரைவாக அழகாகக் கட்டிக்கொள்ளவும்.
* மிதப்புப் பற்களுக்குக் கிளிப் பொருத்தி இலகுமுறையில் சீர்செய்து கொள்ளவும்.

யாழ். நகரில் ஒரே ஸ்தாபனம்
[பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்]

கிளை:
சொலெக்ஸ் ஒப்ரிக்கல்
வண்ணமாடலேன், நெல்லியடி.

SOLAX OPTICAL & DENTAL WORK'S
516, Hospital Road,
Jaffna.
T.P:- 7631
(சி/43505)

இன்று தேருலா வரும் அன்னையே!
நாகபூஷணித் தாயே! நாடியவர்க்கெல்லம் நல் ஆசி அருள்வாயம்மா!!

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

புத்தம் புதிய ஆடைகளை
நித்தம் நித்தம்
அறிமுகம் செய்யும்

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

54, பெரியகடை,
யாழ்ப்பாணம். T. P: 2899

25, 4ஆம்
குறுக்குத்தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
(சி/43499)

தேரிலே எழுந்தருளி
நேரிலே வருந்தாயே!
வரமருள
வேண்டும் நீயே!

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு
நவீன உலகுக்கு அழகு சேர்ப்பது
நதிகளின் அழகுக்கு

காவேரி சில்க்ஸ்

இல. 48, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொ. பே: 222 2333
(சி/43500)

தேரேறும் தாயே! அம்மா நாகபூஷணியே!! அருள்வாய்
நல்லாசி அடியவர் அமைதிக்காய்!

V. S. P. லஞ்ச் ஒயில்

உணவுத் தேவைகளுக்காக சுத்தமாக, சுகாதார முறைப்படி
தயாரிப்பட்டது....
இல்லத்தரசிகளின் இதயத்தில் நிறைந்தது...

V.S.P. நல்லெண்ணெய்

பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T. P: 021 222 2785
(சி/43494)


தேரேறி வரும் தேவியே சரணம்!

எழிலுறு தரமான அசல் தங்க நகைகளுக்கு நாடுங்கள்...

சிறி மதனா நகை மாளிகை
155/M கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 7772, 0777 3000185

மதனா ஜீவல்லறி
177/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5526
(சி/43506)

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
# தேர்த்திருவிழாச் சிறப்புமலர்-2005




## தேரேறி வருவாய் அம்மா

நயினைப் பதியுறையும் நாயகியே! பூரணியே!
ஆர்ப்பரிக்கும் அலைகடல் ஓசையே உன் ஓங்காரம்,
ஐந்து தலை நாகம் குடைபிடிக்கும் உன் காட்சி
அடியவர்கள் தமை மறந்து பாடவைக்கும் பாங்காகும்
அம்பிகையே உனை நாடிப் பரவி ஓடிவந்தோம்
சித்திரத் தேரில் நீ பவனி வரும் எழில் காணவே!

**நயினை விஜயன்**




நயினை நாகேஸ்வரியே
அருள்புரிய வேண்டும் அம்மா!
❖ காலத்தால் அழியாத ❖ கற்பனைக்கும் எட்டாத
❖ எழில் குன்றா அற்புத படைப்புகள்
❖ பார்ப்பவர் கண்களில் பளிச்சிடும் அசல்
ரகங்கள் குறிப்பிட்ட தவணையில் தரமாகவும்
நியாயமாகவும் பெற்றிட நாடுங்கள்:
சாரங்கன் நகைமாடம்
சாருங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 2480, Fax: 6972
(C/43495)



*M.D.90 மற்றும் நிக்கொண்டிசன் மோட்டார் சைக்கிள்களா?
*மோட்டார் சைக்கிள்களா? *உதிரிப்பாகங்களா?
*அசிட் வகைகள் *பற்றி வகைகள்
*சோலர் வகைகள்
அனைத்தையும் ஒருங்கே ஒரே இடத்தில் பெற்றிட
அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
றொயோட்டா உதிரிப்பாகங்களுக்கான வடபகுதி
ஏக விநியோகஸ்தர்கள்
108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: மெயின் வீதி, சுங்கானை
அருள் விநாயகர் றேடர்ஸ்
106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
262, கண்டி வீதி, சாவகச்சேரி.
(C/43498)



அலைகடல் கடந்து அருள்வேண்டி வந்தோம்!
அருள்புரியவேண்டும்
நாகபூஷணித் தாயே!
அழகிய நவீன
டிசைன்களிலான
தங்க நகைகள்
தரமாகச் செய்து
பெற்றுக்கொள்ளச்
சிறந்த இடம்:
சிறிமாரி நகைமாடம்
49 (187), கே.கே.எஸ். வீதி,
(சத்திரத்துச் சந்திக்க அருகில்),
யாழ்ப்பாணம். T.P.: 021-7164.
(C/434887)




தேரேறி வரும் தேவியே!
சரணம் அம்மா!
அசல் 22 கரட்டில்
தங்க நகைகளைக்
குறித்த தவணையில்
நம்பிக்கையுடன் செய்து
பெற்றிட நாணயமான
ஸ்தாபனம்.
நியூ நிறைஞ்சனாஸ்
நகைமாளிகை
83/1, கஸ்தூரியார் வீதி, செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
T.P.: 071 2270458, 077 6070678
(C/43488)



நயினை நாகபூசணியே! நமக்கருளவேண்டும் தாயே!!
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்:
விக்னேஸ்வரா நகைப்பூங்கா
205/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 4590022
10B,34D, கந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா.
T.P.: 024 222 1857, 024 222 1910.
457, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு
T.P.: 011 255 9535
முடிப்பிள்ளையார் நகைப்பூங்கா இல. 167, யாழ்சாலை, கிளிநொச்சி
(C/43507)



அம்பிகையே நயினை
நாகேஸ்வரியே!
நம்பிவந்தோம்
நமக்கருள்
புரிவாய் அம்மா!
உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும்
அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்:
அபிநயா ஜுவல்லர்ஸ்
இல.32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/43509)



அறிவுக்கண் திறந்து அருள்புரியும் தாயே! நலிவுற்றிடாமல் நம்மைக் காத்தருள்வாயே!
பாடசாலை அதிபர்களே!
மாணவர்களே!
உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரேகூரையின் கீழ் பெற்றுக்கொள்ளப் புத்தகக் கடல் 10%-50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணனி புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10/= - 100/= வரை பெற்றுக்கொள்ளலாம். இவைதவிர, பாடசாலை அலுவலக உபகரணங்களும் பாடசாலை ஆய்வு பொருள்கள், மூலப்பொருள்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்யத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
ஆல்கிரோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5542 (C/43489)




# வாழ்வில் ஒருமுறை நயினையை தரிசியுங்கள் வேண்டும் வரங்கள் அன்றே கிடைத்திடும்!

**“பெற்ற தால் அன்னை பெறுமுயிரனைத்தும் பேணலால் அன்னை பெற்றிடுவோர்**
**உற்றாதால் அன்னை விரும்பிய அனைத்தும் உதவலால் அன்னை எக்கலையும்**
**சொற்ற தால் அன்னை உலகொடு வானும் தொழுதலால் அன்னை என்றென்றும்**
**பற்றதாங் கருணை பொழிதலால் அன்னை பராபரை நாகபூசணியாள்”**

இறை பரம்பொருளைத் தாயாகத் துதிப்பதில் மனதிற்குச் சாந்தியும் நிம்மதியும் ஏற்படுகின்றன. தாயாகித் தாங்குகின்ற தயாபரன் என்பதிலிருந்து தாய்மையின் தனித்துவம் விளங்குகின்றதன்றோ! தெய்வத்தைத் தாயாக நோக்குவதால் அன்பும் பக்தியும் விரைவில் கிடைத்துவிடும் என்பது சக்தி வழிபாட்டின் உயர்நிலைக் கொள்கையாகும்.

தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்யும்போது உபாசகன் ஏதாவது ஒரு இசைந்த உறவுமுறையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அவற்றுள் சிறந்தது தாயாக வழிபடுவதுதான். ஏனெனில், உலகில் முதன்முதலில் கண்விழித்துப் பார்க்கும் குழந்தை தாயைத் தான் பார்க்கின்றது. தாய் சொல்லிக் கொடுத்துத் தான் உலகத்தை அறிகின்றது. அத்துடன், தந்தையையும் அறிகின்றது.

**“தாயுடன் சென்று பின் தாதையைக் கூடி ஏயுமதே நீட்டை”** என்று பெரியவர்கள் இந்த உண்மையை ஆன்ம அனுபவத்தோடு இணைத்துப் பேசி இருக்கின் றார்கள். சைவம், வைணவம் என்ற இருபெரும் பிரிவுகளிலும் தாய்த் தெய்வம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றாள். சைவம் தாய்த் தெய்வத்தை அம்பிகை என்கின்றது. அந்தத் தாய் இறைவனுடைய கருணையே ஒழிய வேறு ஒன்றும் அல்ல என்கின்றது சைவம். **“அருளது சக்தி ஆகும் அரன் தனக்கு”** என்கின்றது சிவஞானசித்தியார்.

## திருவருள் சக்தி

இந்தச் சக்தியோடு இயைந்துதான் படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல், அருளல் என்று ஐந்தொழில் களையும் இறைவனால் செய்யமுடிகின்றது. உலக உயிர்களைக் கரையேற்றுதற்கு இறைவன் என்னென்ன வேடங்களைப் போடுகின்றானோ அவற்றிற்கேற்ற வேடங்களை சக்தியும் போட்டுக்கொள்கிறாள் என்பது சைவசித்தாந்தம். இதனால், “எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்” எனப்படுகின்றது. ‘மடவாள் தனோடும் அருள் காரணத்தின் வருவார்’ என்பது தேவாரம். இறைவன் புரியும்திருவிளையாடல்கள் யாவும் திருவருள் சக்தியின் துணையுடனேயே நடைபெறுகின்றன. அடியவர்களைச் சோதிக்கும் நேரத்தில் இறைவன் தனியாக வருகின்றான். ஆனால், அவர்களுக்கு அருள் பாலிக்கும் போதெல்லாம் இடபவாகனாரூடராய் இமயவரை பயந்த பச்சைக்கொடி போன்ற உமையவளுடன் தோன்றினார் என்கின்றார் சேக்கிழார். சக்தியை உபாசிப்பவர்கள் சாக்தர்கள் எனப்படுகின்றனர். சக்திக்குரிய ஆலயங்கள் சகல இடங்களிலும் அமைந்துள்ளன.

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் இலங்கையின் சக்திபீடமாக இலங்குவது நயினை நாகபூசணி அம்மன் ஆலயம். இது புவனேஸ்வரி பீடம் எனப்படுகின்றது. ஈஸ்வரி என்பது அம்பிகைக்கே உரிய சிறப்புப் பெயர். பரமேஸ்வரி, மகேஸ்வரி, ராஜேஸ்வரி, புவனேஸ்வரி, ராஜராஜேஸ்வரி என்னும் பெயர்களும் அம்பிகையைக் குறிப்பன. நாகத்தால் பூஜிக்கப்பட்டமையால் அம்பிகை நாகபூசணி எனும் நாமம் பூண்டு நயினாதீவில் கோயில்கொண்டு அருள்பாலிக்கின்றாள். காஞ்சியில் காமாட்சியாகவும் காசியில் விசாலாட்சியாகவும் மதுரையில் மீனாட்சியாகவும் விளங்கும் அம்பிகையே நயினாதீவில் நாகம்மாளாக நல்லருள் புரிகின்றாள். தன்னைவந்து வழிபடும்படி பாம்புருக் கொண்டு பராபரீர பயங்கொள்ளச் செய்வதால் பக்தர்கள் பல்லாயிரக்கணக்கில் இங்கு கூடுவர். ஆடிவரும் ஓடமதில் நாடி தேடிவரும் பக்தர்களுடன் கூடிநின்று அருள்சுரப்பவள் அம்பிகை. எனவே, பக்தியினாலும் பயத்தினாலும் பரவும் அடியார் தொகை அதிகமாக உள்ளது.

## ஆண்டு மஹோற்சவம்

ஆனிமாதத்தில் அம்பிகைக்கு ஆண்டு மஹோற்சவம் ஆரம்பமாகி பதினைந்து திங்கள் நடைபெற்று தெப்ப உற்சவத்துடன் நிறைவுறும். அயல்தீவுகளிலிருந்தும் யாழ்.குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் இலங்கைத் தீவின் பிறபகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் அலை கடலைத் தாண்டி வந்து தமது நிலையை மலைமகளிடம் விண்ணப்பித்து தலைதாழ்த்தி வரம் வேண்டிநிற்பர். அம்பிகையும் அவரவர் தரமறிந்து அருள்பாலிப்பாள். கொடியேற்றத் திருவிழா, கைலாசவாகனத் திருவிழா, பூந்தண்டிகைத் திருவிழா, குதிரை வாகனத் திருவிழா, சப்பைரதத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா, தெப்பத் திருவிழா என்பன முக்கியமானவை.

## பிள்ளைச் செல்வம் அருளும் பெருமாட்டி

பிள்ளைச் செல்வம் அருளும் பெருமாட்டி ஆதலால், பக்தர்கள் தொழுதும் அழுதும் முழுமுதற் தேவியை பழுதிலாப் பாசுரங்களால் பாடிப் பரவுவர். பயனைப் பெறுவர். அருள்வேண்டிவரும் அடியவரின் அயர்ச்சியை அகற்றும் பொருட்டு அமுதசுரபி அன்னதான சபையினர் அனுதினமும் அமுது படைக்கின்றனர். மாகேஸ்வர பூசையின் மகத்துவத்தை மண்ணில் நல்ல நயினையில் கண்ணாரக் காணலாம். நித்திய யாத்திரைத் தலமான பக்திவளம் மிக்க சக்திபீடமான நயினையம்பதியை வாழ்வில் ஒருமுறை தரிசித்தால் சத்தியமாக எமக்கு சித்திகள் கிட்டும். முத்திக்கு வழி வகுக்கும் முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கும் இல்லை.

**பரமேஸ்வரி சிவராமலிங்கம்**

















# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
# தேர்த்திருவிழாச் சிறப்புமலர்-2005





## தேரில் ஏறி நாகஅம்மாள் வீதி வருகிறாள்

தெளிந்த கருணை மிகுந்த வளத்தைத்
தெள்ளித் தருகின்றாள்
ஊரில் நாட்டில் உள்ள மக்கள்
உவந்து பணிகின்றார்
உவப்பக் கூடி நயப்பாய் பாடி
உள்ளம் உருகிறார்
சிரி னோடு அமுத சுரபி
சென்று புசிக்கிறார்

சேர்ந்து அன்னை திவ்ய கருணைச்
செழிப்பில் களிக்கிறார்
பாரில் இந்தக் காட்சியின் மாட்சி
காணில் வாழ்விலே
பேறு என்று பெரிதும் உவந்து
பெருமை கொள்ளலாம்

முருகனடியான்

## நாகபூசணி பராய்!

நல்லவளே நயினாதீவு நாயகியே நாகபூசனியே
செல்ல மகளே செப்புவாய்
வல்ல எம்மினம் வாழ – வழி
சொல்லடி வல்லவளே சிவகாமி
தீவுதனில் திட்டி விடம் கொண்டவளே
தீராத வினைகள் தீர்த்திட வந்தவளே
வாராத வரம் வேண்டில் தருபவளே
பாராது எம்மை பரமுகமா இருப்பதேன்
பிள்ளை இல்லை என்றால் பிள்ளையா வருபவளே
கல்வி இல்லை என்றால் தருபவளே
காசு தா என்றால் தருபவளே
ஆ(அ)முதசுரபி அள்ளித் தருபவளே
வாழி வாழி வாழி நயினை நாகபூசனி

ம.கணேசலிங்கம் அல்வாய்





நவீன அழகிய சிங்கப்பூர் நகைகளுக்கு
நீங்கள் நாடும் நம்பிக்கையான ஸ்தாபனம்

சிங்கப்பூர் ஜீவல்லறி

(C-43483)
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021-4590260,
0777-178864



நயினை நாகபூசணியே அருள்புரிவாயம்மா!
இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி
விசேட கழிவில் விற்பனைக்கு!
24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி
எப்பிரதேசத்திற்கும் பொருத்தித் தரப்படும்
எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும்
இயங்கக்கூடிய சேவை என அறியத் தருகின்றோம்.
அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல்
ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணைநிறுவனம்

உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

I.D.D. இணைப்புக்கள் ஸ்ரீலங்கா
ரெலிகொம் கட்டணம் 25/=

HAND PHONE UNLOCK
செய்து தரப்படும்.

(C/43484)





மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன்
முற்றுமுழுதான துணைநிறுவனம்

பவர் செல்லூலர் ட்ரேடிங் கம்பனி

SHOP:
205/1, Kasthuriyar Road,
Jaffna. Tel: 0712 399220.

Office: 185, 1st floor,
Kasthuriyar Road,
Jaffna. Tel/fax: 021 222 7070



நவீன மோஸ்தர்களிலான
ஆடை வகைகளுக்கும் சாறி பிளவுஸ்பீஸ்
வகைகளுக்கும் என்றும்
மங்காப் புகழ் பெற்றவர்கள்

மகாநதி புடைவையகம்

நானிலம் போற்றித்
துதிக்கின்ற
நாகபூசணித் தாயே
சரணம்!

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(பிளவுஸ் பீஸ்களுக்குப் பிரத்தியேகக் காட்சியறை உண்டு)

(A-43485)



அம்பிகையே தாயே! அருள்புரிவாய் நீயே!!
சிறுவர், சிறுமியர்களுக்கும்
ஆடவர்களுக்கும், நங்கையர்களுக்கும்
ஏற்ற நவநாகரிக ஆடைவகைகளுக்கும்,
புத்தம்புதிய சாறித் தினுசுகளுக்கும்
நம்பிக்கையான நல்லதொரு ஸ்தாபனம்:

ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

பிளவுஸ்பீஸ்
பிரத்தியேகக்
காட்சியறை,
17A, நவீன சந்தை
(மேல்மாடி), யாழ்ப்பாணம்.

இணை

யோகாஸ் ஆடையகம்

18A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(சி-43486)



இன்று தேரேறும் எம் அன்னையே!
எம்மவர் வாழ்வில் அமைதி
நிலைத்திட அருள்வாய்
அம்பிகையே!!
உன்னத கலைநயம் மிக்க
நகைகளை உங்கள் எழில்மிகு
வளம்பெற...அதிநவீன
மோஸ்தர்களிலான நகைகளுக்கு...

(C/43492)

மென்மைக்கு மெருகேற்றும்... இளமைக்கு எழிலூட்டும்... ஓடர் நகைகள்
குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்.

சிறி சிவரஞ்சனம் நகையகம்

149A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
173/01, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தங்க நகை வியாபாரம்

தொ.பே. 012-2225481

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

## தேர்த்திருவிழாச் சிறப்புமலர்-2005

அலைகடல் கடந்து உன் ஆலயங் கண்டோம் தாயே !
தலைமுறை வாழ திருவருள் புரிந்து தேரேறி வாருமம்மா!

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் றலி சைக்கிள் !

இதோ விற்பனைக்கு வந்துள்ளது !

RALEIGH
THE WORLD'S BEST BICYCLE

இங்கிலாந்து
தொழில்நுட்பத்தில்
தயாரிக்கப்பட்ட
றலி சைக்கிள்
RALEIGH



ஆண், பெண் இருபாலாருக்குமான
சைக்கிள்கள் 12 வருட உத்தரவாதத்துடன்
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

THE RALEIGH NOTTINGHAM ENGLAND
RALEIGH
World's Best Bicycle



12 Years
WARRANTY

வடமாகாண ஏகவிநியோகஸ்தர் :

# வெங்கடேஸ்வரா

125A, 127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P/FAX - 021 222 2905.

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
## தேர்த்திருவிழாச் சிறப்புமலர்-2005

# மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒன்றாய் அமைந்த அம்மன் திருத்தலம்

இறைவனைத் தாயாக எண்ணி வழிபடுகின்ற மகத்துவம் பழைமையான காலத்திலிருந்தே தோன்றியதாகும். மனித உறவுகளில் மிகவும் அன்புடைய உறவு தாயினுடையதாகும். தாயாகவே இறைவனை எண்ணி வழிபடுவது சக்தி வழிபாடாகும். சக்திபீடங்கள் அறுபத்து நான்கினுள் ஒன்றாகப் போற்றப்படுவது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயமாகும். இவ்வாலயத்தில் சக்தி வழிபாட்டுடன் நாகவழிபாடும் இணைந்துள்ளது.

**கண்ணியது உன்புகழ் கற்பது உன்நாமம் கசிந்து பக்தி பண்ணியது உன்இரு பாதாம் புயத்தில் பகல் இரவாய் நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன் செய்த புண்ணியம் ஏது என்னம்மே! புவி ஏழையும் பூத்தவளே!**

புவி ஏழையும் பூத்தவளாக, அருட்பொலிவுடன் வரலாற்றுச் சிறப்புப் பெற்றதும், "மணிபல்லவம்" என்று அழைக்கப்படுகின்ற சரித்திரச் சிறப்புப் பெற்றதுமான நயினையம் பதியிலே அன்னை நாகம்மை கோயில்கொண்டெழுந்தருளி அருளாட்சி செய்கின்றாள். தன்னை நாடிவருகின்ற அடியார்களுக்கு வேண்டிய வரங்களையெல்லாம் அள்ளி வழங்கு கின்றாள். மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற திருத்தலம் இதுவாகும்.



அலைகடலில் மிதந்து அருட்கடலை நாடிவரும் அடியவர் களை அருட்கோபுரம் வரவழைக்கின்றது. "அரோகரா" என்ற ஒலியுடன் அருட்கோபுரத் தைக் கண்டவுடன் அடியார்கள் வணாங்குகின்றார்கள். காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கும் அடியார்களின் கண்ணீரைக் காணிக்கையாக ஏற்றுக்கொள்கின்றாள். பொன்னையும், பொருளையும், புகழையும் அள்ளி அள்ளிச் சொரிகின்றாள். அடியார்கள் மிகுந்த பக்திகொண்டு இவ்வாலயத்தை நாள் தோறும் பெருமளவில் தரிசித்து வருகின்றார்கள். அம்பிகை அடியார்களின் நாகதோசத்தை நீக்குகின்றாள். புத்திர பாக்கியத்தை அருளுகின்றாள். சகல வரங்களையும் கொடுக்கின்றாள் என்ற நம்பிக்கையுடன் பயணக் கஷ்டங்களையும் பொருட்படுத்தாது அதிகளவில் நயினையம் பதியில் கூடுகின்றார்கள்.

இவ்வாலயத்தின் உயர் திருவிழாக் காலங்களில் பல்லாயிரக்கணக்கான அம்பிகை அடியார்கள் அம்பிகையைத் தரிசித்தி அதிக வரங்களைப் பெற்றுக்கொள்வது வரலாறு. அம்பிகையின் ஆலயத்தில் பெருவிழாவாக வருடந்தோறும் கொண்டாடப்பட்டுவரும் விழாக்களில் ஆடிப் பூரமும் ஒன்று. ஆடிப்பூரவிழா கண்டு களித்து அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்ள பெரும் எண்ணிக்கையான அடியார்கள் ஆலயத்தில் ஒன்று கூடுவர்.

*நயினை நா.க.குமாரசூரியர்*

## நம்பினோர் தமைக் காப்பாய் தாயே!

அம்பிகையே ஈஸ்வரியே! ஆதிபராசக்தியே!
ஆழிசூழ் நயினையிலே அமர்ந்திருக்குமன்னையே!
உன்போல்ஒரு தெய்வம் உலகிலுண்டோ அம்மா!
தும்பிமுகனும் தம்பியும் தேரேறி முன்வரவே
வண்ணச் சித்திர ரதமதனில் நீ வரும்போது வடிவழகைக்
காணக் கண்கோடி போதாது அம்மா! - எம்
எண்ணமெல்லாமுனதாக வடம்பிடித்து நின்றோம்
நம்பினோர் தமைக் காப்பாய் நாகேஸ்வரித் தாயே!

*- நயினையான்*

நயினை நாகபூசணி அம்மையின் தேர்த்திருவிழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்

நவ நாகரிக கண்கவர் ஆடை
வகைகளுக்கும் புத்தம் புதிய
புடைவை வகைகளுக்கும்
நம்பிக்கையுடன் நாடவேண்டிய
இடம்:
குமரன் சில்க்ஸ்
91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
181, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
(C/43518)

அன்னையின் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்
நவ நாகரீக நங்கையர்கள் விரும்பும் அசல் 22 கரட்
தங்க நகைகளுக்கு நம்பிக்கையான இடம்:
கரன் நகை வாணிபம்
இல.50, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 6083
(C/43496)

kit
அற்லஸ்
ATLAS
more Mobitel



என்நேரமும் உன்னுடன்

வாடிக்கையாளர்களே!
அற்லஸ்சின் புதிய பார்வை உங்கள் மீது! வாடிக்கையாளர்களின் நன்மை கருதி ஒரே கூரையின் கீழ் தனது சேவையை மேலும் விஸ்தரித்துள்ளது. குளிரூட்டிய, குளிரூட்டப்படாத சொகுசு பஸ்/வான் சேவை உங்கள் சௌகரியமான பயணத்திற்கு நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் "ATLAS TRAVELS" உங்கள் தேவையை Atlas சேவையூடாக நல்ல பயனைப் பெற ஓர் அரிய சந்தர்ப்பம்

சொகுசு பஸ் புறப்படும் நேர அட்டவணை

| | யாழ் - கொழும்பு | கொழும்பு - யாழ் |
|---|---|---|
| முதலாவது பஸ் | காலை 7.30 | இரவு 9.30 |
| இரண்டாவது பஸ் | காலை 8.00 | இரவு 10.00 |

01.07.2005 முதல் இரண்டாவது பஸ் காலை 8.00 மணிக்குப் புறப்பட்டு நெல்லியடி, பருத்தித்துறை கொடிகாமம் ஊடாக கொழும்பைச் சென்றடையும்

வான் சேவையானது பிரயாணிகளின் நலன் கருதி அவரவரது வீடுகளில் ஏற்றி அவரவரது வீடுகளில் இறக்கப்படுவர். (குறிப்பிட்டதூரம் 5km)

யாழ்ப்பாணம் ⇄ கொழும்பு

362, ATLAS TRAVELS & TOURS
காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
Tel: 2363 030, 4520 651, 2362 525

01, ATLAS Communication
A-9 வீதி, கொடிகாமம்
A-9:- 021-222 63400, 021-222 63411

77, ATLAS Communication
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
Tel: 021-222 2990, 021-222 5858

தங்கள் பதிவுகளுக்கு :
412, Atles Telecom
Hospital Road, Jaffna.
T.P:- 021-222 2990, 021-222 2031

அற்லஸ் வழங்கும் விசேட விலைக்கழிவு

| More Card | | Kid Card |
|---|---|---|
| 1000\- | Card | 100\- |
| 350\- | | 400\- |
| Pre Paid Sim | | 1000\- |
| Post Paid Sim | | |

ஆகிய விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் சிம்இணைப்புக்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

NOTE:-
பிரயாணத்தின் போது தங்களுக்கு ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்படின் தொடர்புகளுக்கு:- 0777744863


அற்லஸ் தொலைத்தொடர்பகம்
இல.77, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 222 2557, 2225464

அற்லஸ் தொலைத்தொடர்பகம்
இல.1.A9 வீதி, கொடிகாமம்.
தொ.பே.: 226 3400, 226 3411

அற்லஸ் ரெலிகொம்
இல.412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 2990, 222 2031.

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
# தேர்த்திருவிழாச் சிறப்புமலர்-2005

## நயினைத் தேர் சிற்பங்களில் சில...




படங்கள் உதவி: நயினை தி.சஜிதன்



### இன்னும் சோதனையோ

பல்லவி
இன்னும் சோதனையோ - என் பாடறிந்து
இரங்காதிருத்தல் தகுமோ - அம்மா
(இன்னும்)

அனுபல்லவி
கன்னம் கடல் சூழ் நயினை பதியவளே
பொன்னஞ் சோதிப் பதங்கள் புகலடைந்தே
(இன்னும்)

சரணம்
குற்றமு டையேன் குண முடையயே னல்லேன்
பற்றுடன் வலம் செய்யேன் கோலமும் தான் புனையேன்
பொற்றிரு அடியார் குழாம் புக்கருள் செய்வாயெனில்
நற்றிரு வருள் தந்து இந் நாயேனை அடுத்திட
(இன்னும்)

தேசம் பலவும் சென்றும் நின்னை தேடியலையவில்லை
நாசம் பலவும் செய்தேன் நலிந்தேன் மெலிவு கொண்டேன்
பாசம் அறுக்கும் வழி எதுவும் அறிந்திடாது
வேசம் கலைக்க உன் பதி நாடி வந்த எனக்கு
(இன்னும்)

ந.வரதராசா, தும்பளை



### தேசத்தைக் காத்திட வருகின்றாள்

சீரோங்கும் நயினையிலே குடியிருக்கும் நாகம்மை
தீராத வினையோட்டி காக்கின்ற நாகம்மை
பாரெங்கும் போற்றுகின்ற பல்லவத்து நாகம்மை
பக்தியுடன் துதிப்பவர்க்கு அருளுகின்ற நாகம்மை
தேரேறித் திருவுலா வருகின்றாள் நாகம்மை
தேசத்தைக் காத்திடவே வருகின்றாள் நாகம்மை

*புங்கை எம்.எம்.குமார்*

### எம்மைக் காத்துவாழவைக்கும் நாகம்மாளே!

அலை பாயும் ஆழ்கடலில் அடியார் கூட்டம்
ஆர்ப்பரித்துக் கரையேறி அருளே சேர்க்க
உந்தனது சேய்களெல்லாம் உன்னைஅன்றி
உந்தன் துணை பற்றுவதோதாயே அம்மா
நிலையான உன்னுருவம் நினைத்து உள்ளம்
நெஞ்சுருகநின்றுவரும்தெய்வக்காட்சியினைத்தந்து
வரமே தந்து எம்மைக் காத்து வாழவைக்கும்
பந்தமுடன் நயினை நாகம்மாளே

கே.மேகலா, நயினாதீவு

### தாரணியே தயைகூர்ந்து அருள்வாயே!

நாகத்தின் நிழலில் நயந்து உறையும் நயினை நாயகியே
நம்பிவரும் அடியவர் வினைதீர்க்கும் நம் நாகம்மாளே!
அலைகடல் நடுவே கோயில் கொண்டு அபயம் தரும் அன்னையே
அமுதசுரபியாய் அன்னமும் அருளும் பாலிக்கும் அபிராமியே
ஆண்டாண்டு காலம் அழுது அல்லற்படுகின்றோம் தாயே
அந்த முகாரி ராகங்கள் உன்செவிக்கு எட்டலையோ அம்மா
ஆனிப்பூசத்தில் அடியார் அலைமோத எழிலாகத் தேரேறி நீவருகையிலே
அன்புடன் காலடிகள், கரகங்கள் எடுத்து வீதிவலம் வருகின்றோம்
ஆத்தாளே இனியும் வேதனைகள் சோதனைகள் வேண்டாம் தாயே
அவனியில் தமிழர் நாம் தலைநிமிர்ந்து வாழ தாரணியே தயைகூர்ந்து அருளுவாயே

மட்டுவில் சிவம்

### நித்திலமே சக்தியுமை

தேரிலே ஊர்ந்து செல்லும்
திருக்கோலக் காட்சி யெம்மை
காரினி லிருந்து மீட்டு
களிப்பினி வாழ்த்து தம்மா!

அலைபாயும் கடல் சூழ
அறிவாகி அரு வாகி
நிலையாக நின் றாளும்
நித்திலமே சக்தி (உ)யுமை!

உன்னைத் தொழுகை யிலே
உளமலரே பூக்கு தம்மா
கன்னித் தமி ழணங்கைக்
கட்டிலிலே ஏற் றிடம்மா!

*கூத்தாடி*
*வி.சி.குஞ்சிதபாதம்*